


கல்கி

KALKI 27-7-75 60 காசு

காயங்கள் வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் ஏற்படுகின்றன.

ஆகையால் அவற்றுக்கேற்ப வருகின்றன, புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்குகள்.

ஸ்டாண்டர்ட் ஸ்ட்ரிப்

லார்ஜ் ஸ்ட்ரிப்
பெரிய காயங்களுக்கு

ஜெயண்ட் ஸ்ட்ரிப்
பெரிய புண்களுக்கு.

பாட்ச்

ஸ்பாட்



காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும். எனவே, புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்தி, அவற்றைப் பாதுகாருங்கள். இப்போது அவை வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் கிடைக்கின்றன 5 எண்ணிக்கை கொண்ட ஸ்ட்ரிப்புகளில் வசதியாக வருகின்றன.

பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங்கைப் பயன்படுத்தி முன் ஜாக்கிரதையுடன் இருங்கள். எப்பொழுதும் சில டிரஸ்ஸிங்குகள் கைவசமிருக்கட்டும்.

எப்பொழுதும்
பாண்டு-எய்ட்*
டிரஸ்ஸிங்கின்
பெயரைக் கவனியுங்கள்.
இதற்குப் பதிலாக வேறு எதையும் ஏற்காதீர்கள்.


Johnson & Johnson®

* Trademark © J&J 75

OBM-4533 TM

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டைஃபாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.



உங்கள்
ஆதரவுக்குரியவர்களுக்கு
ஆதரவளியுங்கள்.
இன்றே பெறுவீர்
ஒரு ப்யூரிடாஸ்.

அசல் ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்களையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய மேற்புற அறைக்கு மேலுள்ள ப்யூரிடாஸ் முத்திரையைப் பார்த்து வாங்குங்கள். ப்யூரிடாஸ் பெயரும் பதிவு எண் 196501ம் அடிப்புற உலோகத்தின் மீது இருப்பதையும் கவனியுங்கள்.



ப்யூரிடாஸ் இலேசானது, உடையவே உடையாது, தூக்கிச் செல்ல வாகானது, துப்புரவாக்க இலகுவானது.



இலவசக் கைப் புத்தகத்திற்கு எழுதுக:

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்


BALBARA · பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, [illegible] ரோடு, பம்பாய் 400 001.

CHAITRA-BLS19 TAM Rev.

கல்கி

ராக்ஷஸ ஆடி 11
ஜூலை 27, 1975





ஜனநாயக ரயில் ஓடட்டும்!

கல்கி

மலர் 34

இதழ் 52

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

விளையாட்டுப்போல் ஒரு மாதம் ஓடிவிட்டது. நெருக்கடி நிலை பிரகடனம் அமுலுக்கு வந்து. இந்த ஒரு மாதமும் சஞ்சிகைகள் பல ஜனநாயகம் குறித்தும் தனிமனிதன் சுதந்திரம் பற்றியும் எதிர்க் கட்சிகளின் அவசியம் பற்றியும் பத்திரிகைச் சுதந்திரம் குறித்தும் ஸ்ரீமதி இந்திரா அவர்கள் முன்பு கூறியுள்ளவற்றைப் பத்தி பத்தியாக வெளியிட்டு வந்துள்ளன.

'இப்படியெல்லாம் சொன்னவர் இன்று எப்படி நடந்துகொண்டிருக்கிறார் பார்த்தீர்களா?' என்று மக்களைக் கேட்கும் பாவனையாக இவற்றைப் பத்திரிகை ஆசிரியர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் இதையே வேறு விதமாகவும் மக்கள் எடுத்துக்கொள்ளலாம். 'ஜனநாயகம் குறித்தும் மக்கள் சுதந்திரங்கள் பற்றியும் இவ்வளவெல்லாம் பேசியவர் இத்தனை கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர் பொறுமை எந்த அளவுக்குச் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும்!' என்றும் மக்கள் எண்ணலாம்.

இன்றைக்குக்கூட இந்திரா அவர்கள் தாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்துவிட்டது போல் பேசவில்லை. 'தடம் புரண்டிருக்கும் ஜனநாயக ரயிலைத் தண்டவாளத்தில் மீண்டும் ஏற்றவே முயல்கிறேன்' என்கிறார். 'நெருக்கடி நிலைப் பிரகடனம் தாற்காலிகமே; சீக்கிரம் வாபஸ் ஆகும்' என்கிறார். 'எதிர்க் கட்சிகள் அவசியமே; ஆனால் அவர்கள் பொறுப்புடன் செயலாற்றட்டும்' என்கிறார். 'பத்திரிகைச் சுதந்திரத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு; ஆனால் அது துஷ்பிரயோகமாகக் கூடாது' என்கிறார்.

பிரதமரின் இந்தக் கருத்துக்களை வரவேற்கிறோம். அதே சமயத்தில் ஜனநாயகம் மீண்டும் தடம் புரளாமலிருக்கவும் எதிர்க் கட்சிகள் பொறுப்புணர்ந்து செயலாற்றவும் அவர் செய்யக்கூடியது ஒன்று உண்டு என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறோம். அதுதான் தேர்தல் முறைகளில் சீர்திருத்தம். சிறுபான்மை வோட்டுப் பெற்றுப் பதவிக்கு வரும் அநீதியான தேர்தல் முறை மாற வேண்டும். பணத்தின் செல்வாக்கு தேர்தல்களைப் பாதிக்கும்படி விடுவது முறையல்ல. எதிர்க்கட்சிகள் சிதறுண்டு கிடப்பதும் ஜனநாயகத்துக்குப் பலமல்ல.

மேற்சொன்ன குறைபாடுகளை நீக்குமாறு ராஜாஜி தமது வாழ்நாளின் கடைசி பல ஆண்டுகளில் எவ்வளவோ எடுத்துச் சொன்னார். அரசும் எதிர்க் கட்சிகளும் அவர் கருத்துக்குச் செவிமடுத்துச் செயலாற்றியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டே இராது. மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளின் தேர்தல் முறைகளை ஆராய்ந்து, மேலே விவரித்த குறைபாடுகளைச் சீர்திருத்திவிட்டால் நமது ஜனநாயகம் தண்டவாளத்தில் விபத்து, ஆபத்து ஏதுமின்றி ஓடும்.

ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளுடன் நாட்டின் பலப்பல பிரச்னைகளைக் குறித்தும் மனம் விட்டுப் பேசியிருக்கிறார் ஸ்ரீமதி இந்திரா. இவற்றில் முக்கியமானவை இரண்டு :

(1) நாட்டில் உற்பத்தி பெருக வேண்டும். வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கக் கூடிய தொழில்கள் ஏற்பட வேண்டும்.

(2) லஞ்ச ஊழல் மிகவும் அதிகரித்துவிட்டது. எல்லா மட்டங்களிலும் இது இருக்கிறது. இதைக் கண்டிப்பாக வேர் அறுத்தாக வேண்டும்.

இந்திரா அவர்களின் இவ்விரு முயற்சிகளும் வெல்லப் பிரார்த்திக்கும் வேளையில் வெற்றி பெறுவதற்காக ராஜாஜி காட்டிய மார்க்கத்தையும் நாம் நினைவுபடுத்துகிறோம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் பர்மிட் - லைசென்ஸ் - கோட்டா முறையை ஒழித்தால் ஸ்ரீமதி இந்திரா விவரித்த பிரச்னைகள் இரண்டுமே அடிபட்டுப் போகும்.


நெற்றிக்கண்!
ஆர்எஸ்எஸ்
ஆனந்த மார்க்
நக்ஸல்
(வன்முறையாளர்)

என்ன சேதி?

புதிய கமிஷனர்

பதவி மாற்றம் பெற்றுள்ள திரு கே. ஆர். ஷெணய்க்குப் பிரிவுபசார விருந்து நடந்து கொண்டிருந்தபோது எல். ஐ. ஸி. கட்டிடத்தில் தீப்பற்றிக் கொண்ட செய்தி வந்தது. ஷெணய்க்குப் பதிலாக சென்னை நகர போலீஸ் கமிஷனராகப் பொறுப்பேற்றுள்ள திரு ராதாகிருஷ்ணன் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்;



விருவிருப்புடன் செயலாற்றினார். தீயை அணைக்கவும் பரவாமல் தடுக்கவும் உதவியதுடன் மக்களிடையே பீதி பரவாமல் காப்பதிலும் போக்குவரத்தை அப்பகுதியில் கட்டுப் படுத்துவதிலும் ராதாகிருஷ்ணன் தலைமையில் போலீஸார் காட்டிய சுறுசுறுப்பை மெச்சாதவரில்லை.

திரு ராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரிப் பட்டதாரி. 52ல் போலீஸ் படையில் சேர்ந்தார். போலீஸ் பயிற்சிப் பள்ளியின் தலைவராக இருந்த சமயம் ஜனாதிபதி பதக்கம் பெற்றார்.

இவரது போலீஸ் நிர்வாகத் திறமைகள் பளிச்சிட்ட தருணங்கள்: பிரிட்டிஷ் ராணியின் சென்னை விஜயம்; உலகத் தமிழ் மகாநாடு. இவை தவிர மவுண்ட்ரோட்டில் ஆறு வழிப் பாதை அமைத்து அமுலுக்குக் கொணர்ந்து பெரும் புகழ் பெற்றவர் திரு ராதாகிருஷ்ணன்.

பாராளுமன்றம் கூடுகிறது!

பாராளுமன்றம் கூடப்போகிறது. அங்கே உள்ள தி. மு. க. உறுப்பினர்கள் மீது ஒரு பெரும் பொறுப்பு சுமந்திருக்கிறது. தி.மு.க. தலைவர்கள்தாம் இன்று தமது கட்சியைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கவும் யோசனைகள் வழங்கவும் கூடிய நிலையில் உள்ளார்கள். பாராளுமன்றத்தின் கௌரவத்துக்குப் பழுது ஏற்படாத வகையில் சத்திய வேட்கையுடன் தி. மு. க. உறுப்பினர்கள் செயல்படுவார்களாக.

அகிலன் செய்த அற்புதம்!

ஓசைப்படாமல் மலேசியா சென்ற திரு அகிலன் திரும்பி வந்த பிறகும் ஓசைப்படாமல் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார். தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசுகள் மலேசிய தமிழ் எழுத்தாளர்களுக்குத் தரப்படுவதில்லை என்பதாக ஒரு மனத்தாங்கல் நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. இதனை அங்கே சென்றபோது உணர்ந்துகொண்ட திரு அகிலன் திரும்பி வந்ததும் அமைச்சர் திரு நெடுஞ்செழியனிடம் பேசியிருக்கிறார். அமைச்சர் உடனே அதன் நியாயத்தை உணர்ந்து கடல் கடந்து வாழும் மலேசிய, இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி விட்டார். தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசுகளை எதிர்காலத்தில் பெறப் போகும் மலேசிய, இலங்கை எழுத்தாளர்களை முன்கூட்டியே வாழ்த்துகிறோம்.



கெரோஸினின் விலை உயர்வு

டீசல் எண்ணெய், சமையலுக்கு உதவும் வாயு, கெரஸின் ஆகிய அனைத்தின் விலைகளும் உயர்ந்து விட்டன. எண்ணெய் சுத்திகரிப்பு

நேயர்கள் கவனத்துக்கு...

கல்கி பத்திரிகையின் விலையைப் பதினைந்து பைசா உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கிறோம். பத்திரிகைக் காகிதத்தின் விலை ஏற்றம், அச்சிடும் மையின் விலை உயர்வு ஆகியவையே இந்த முடிவுக்கு முக்கிய காரணங்கள்.

நேயர்களுக்கு இதனால் ஏற்படும் சிரமத்தை நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆனால் கல்கியின் விலையை இப்படி உயர்த்தாவிடில் அதனால் ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களை கல்கி நிறுவனம் தாங்கக்கூடிய நிலையில் இல்லை. எனவே நேயர்களின் அநுதாபத்துடன் கூடிய ஒத்துழைப்பைக் கோரி, முன்னதாகவே நன்றியும் தெரிவிக்கிறோம்.

பத்திரிகையின் விலை உயரும் அதே நேரத்தில் 'கல்கி'யினால் உங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியும் பயனும் பல மடங்காகும் விதத்தில் பாடுபட உறுதி பூணுகிறோம்.

ஆகஸ்டு 5-ந் தேதி இதழிலிருந்து கல்கி தனிப்பிரதி விலை 75 பைசா

நிர்வாகி, கல்கி காரியாலயம்



அறுவடைத் திருவிழா அலங்காரம்

கூர்க் பிரதேசவாசிகள் அழகுக்குப் பேர் போனவர்கள். செதுக்கி வைத்தாற் போன்ற முக லாவண்யம், சிவந்த மேனியின் எடுப்பான தோற்றம் எல்லாம் கவனத்தை ஈர்க்கும். அத்தகையவர்கள் விசேஷ அலங்காரங்களும் செய்து கொண்டால் கேட்க வேண்டுமா? இங்கிதம் மேலட்டையில் அறுவடைத் திருவிழாவுக்காக அலங்காரம் பண்ணிக் கொண்டுள்ள கூர்க் தம்பதிகளைக் காண்கிறீர்கள்.

வண்ணப்படம் : நூரலிங்கம்

××××××××××××××××××××××××

நிலையங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன, கட்டுப்படியாகவில்லை. அதனால் விலை உயர்வை அனுமதித்துள்ளதாகக் கூறுகிறது அரசு. விலையை உயர்த்தாமல் அரசு இருந்தாலும் அரசுத் துறையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் நஷ்டத்தை வரி கொடுக்கும் மக்கள்தான் தாங்கவேண்டும்; தாங்கி வந்திருக்கிறார்கள். எனவே விலை உயர்வால் மக்களுக்குக் கஷ்டமா அல்லது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நஷ்டப்படுவதால் மக்களுக்குக் கஷ்டமா என்று பகுத்துப் பார்க்கத் தேவையில்லை. முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் திறம்பட இயங்குகின்றனவா அவற்றின் ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதுதான். அதோடு மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றின் மீது அரசு விதிக்கும் வரிகளில் சற்று சலுகை காட்டக் கூடுமானால் சாமானியனுக்குச் சாதகமாக இருக்கும். சங்கிலித் தொடர்போல் பல விலைவாசிகள் உயர்வதிலிருந்து அவன் காப்பாற்றப்படுவான்.

ஓவர்டைம்

அரசுத் துறையில் பணியாற்றுவோர் ஓவர்டைம் வேலை செய்து ஏகமாகச் சம்பாதித்து வருகிறார்கள் என்கிறார் திரு சி. எஸ். மத்திய அமைச்சரின் சம்பளத்தை விடவும் கூடுதலாகச் சம்பாதிக்கிறார்கள் என்று குறைப்பட்டுக் கொள்கிறார்.

மந்திரி பதவி கிடைப்பதானால் சம்பளமின்றியே வேலை செய்யத் தயார் என்கிறார் விஷயமறிந்த ஒருவர்.. மந்திரிகளுக்குச் சம்பளம் தவிர சலுகைகள், வசதிகள் ஏராளம். தமது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டிருப்பதாக திரு சி. எஸ். சொல்கிறார். 'இந்தத் தியாகம் வேண்டாம். நூறோ ஐந்நூறோ கூட வேணுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் நன்கு சிந்தித்து மக்களுக்கு நன்மை செய்யுங்கள்' என்றுதான் ஆளப்படுகிறவர்கள் கூறுவார்கள்.

இது ஒருபுறமிருக்க, காரியாலய நேரத்தை வீணடித்து விட்டுப் பின்னால் ஓவர்டைம் செய்து பணம் வாங்குகிற பழக்கம் நிச்சயம் ஒழிக்கப்படவேண்டிய ஒன்றுதான். வரி கொடுக்கும் மக்களுக்கு இழைக்கப்படும் இந்தத் துரோகம் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும்.

கைத்தறியாளர் கஷ்டங்கள்

கைத்தறித் துறையை நிர்வகிக்கும் மாநில அமைச்சர்கள் பலர் ஒன்றுசேர்ந்து புதுதில்லி சென்று பிரதமரைச் சந்தித்துக் கைத்தறியாளர் துயரம் தீர ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளனர். தமிழக மந்திரி திரு மாதவன் இந்தக் குழுவில் ஒருவராகச் சென்றார்.

மகஜரில் முக்கியமான அம்சம் வேஷ்டி புடவை ரகங்களைக் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்கும் விதியைச் சட்டபூர்வமாக அமுலுக்குக் கொண்டு வருவதாகும். ராஜாஜியின் இந்த யோசனை ஏற்கப்பட்டால்தான் கைத்தறியாளருக்கு நிரந்தரப் பரிகாரம் கிடைக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகும் இக்காலத்தில் கைத்தறியிலும் பிழைப்பு நடத்துபவர்கள் பலர் சிரமம் தாளாமல் வயிற்றுப் பாட்டுக்கு வேறு வழிகளை நாடுமாறு செய்வது பேராபத்து.

ராஜாஜி சிந்தனை

சுதந்திரத்தின் உடன்பிறப்பு

உணர்ச்சியுள்ள, நாகரிகமடைந்த ஒவ்வொரு மனிதனும் சுதந்திரத்தைத் தன் என்பிலே உணருகிறான்.

அதே சமயம் தனிமனிதன் சுதந்திரங்களின் உடன் விளைவுகளான சுயகட்டுப்பாடு, சமூக வாழ்வில் ஒழுக்கங்களை நிலை நாட்டும் சட்டங்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றை நாம் மறந்துவிடக் கூடாது. சுதந்திரத்தின் உடன் விளைவு அதிலிருந்து பிறக்கும் கடமைகள். இதற்கு நமது சம்பிரதாயத்தில் தர்மம் என்று பெயர். இதையே காந்திஜி பிரார்த்தனைக் கூட்டங்களில் தர்மகர்த்தாக் கொள்கை என்றார்.

சுயராஜ்யா ஜூலை 27, 1963

முருகப் பெருமான் (20)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஸனத்குமாரரிடம் பிரம்மா, "உனக்கு எந்த எண்ணம் உண்டானாலும் அது வாஸ்தவத்திலேயே நடந்து விடும். அதனால் நீ யதார்த்தமாகவே ஒரு நாள் தேவசேனாபதியாகி அசுர ஸம்ஹாரம் செய்யத்தான் போகிறாய். இந்த ஜன்மாவில் நீ 'தேவராவது அசுரராவது, எல்லாம் ஒரே பிரம்மம்' என்று இருப்பதால், இன்னொரு ஜன்மம் எடுத்து இதைச் செய்யப் போகிறாய்" என்றார்.

வாக்கு, மனம், சரீரம் மூன்றும் ஒருத்தருக்கு சத்தியத்திலேயே பிரதிஷ்டையாகி விட்டால், அப்படிப்பட்டவர் உத்தேசிக்காமலே அவருக்கு ஒரு பெரிய சக்தி வந்துவிடும். அதாவது அவர் சத்தியத்தைத்தான் சொல்ல வேண்டும் என்றில்லாமல், அவர் எது சொன்னாலும் அதுவே சத்தியமாகிவிடும். தவறுதலாகவோ, தெரியாததாலோ, அவர் உண்மைக்கு விரோதமாக ஒன்றைச் சொன்னால் கூட வாஸ்தவத்தில் அப்படியே நடந்துவிடும்.

பரம சத்தியத்திலேயே ஸ்திரமாக நின்ற ஸனத்குமாரர் எதை நினைத்தாலும் – சொப்பனத்தில் நினைத்தால் கூட – அதுவே சத்தியமாகிவிடும்.

ஸனத்குமாரர் ஆத்மாராமராக, பரப்பிரமத்தைத் தன்னில் தானாக அநுபவித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். லோகமெல்லாமே அவருக்குச் சொப்பனமாகி விட்டதால், தம் சொப்பனத்தைப் பற்றி நினைக்கவேயில்லை.

ஆனால் இவர் சொப்பனத்தில் நினைத்த நினைப்பு அசத்தியமாகப் போய்விடக் கூடாதே என்று பரமேசுவரனுக்கு விசாரம் வந்துவிட்டது. அதனால், இவர் தரிசனத்துக்காகத் தபஸ் பண்ணும்போதே, அவராகப் பார்வதி சமேதராக இவருடைய ஆசிரமத்துக்கு வந்து விட்டார்.

ஸனத்குமாரருக்கோ மரம், மட்டையிலிருந்து சகலமும் ஒரே பிரம்மமாகத்தான் தெரிந்தது. பிரம்மத்தில் உசந்த பிரம்மம், தாழ்ந்த பிரம்மம் என்று உண்டா என்ன? எல்லாம் பிரம்மம் என்ற மாதிரியே பரமேசுவரனும் பிரம்மமாகத் தெரிந்தார். அவரை உபாசிக்க வேண்டும், பூஜை பண்ண வேண்டும் என்ற எண்ணமே ஸனத்குமாரருக்குக் கொஞ்சம்கூட உண்டாகவில்லை. அவர் தம் பாட்டுக்கு உட்கார்ந்தது உட்கார்ந்தபடி இருந்தார்.

பார்வதி பரமேசுவரான் ரொம்ப நேரம் நின்று பார்த்தார்கள். ஒரு பலனும் இல்லை. இப்படிப் பரம ஞானியாக ஒரு பிள்ளை இருப்பதைப் பார்த்து அவர்களுக்கே பரமப் பிரீதிதான். இருந்தாலும் ஈச்வரன் பொய்க் கோபத்துடன், "ஞானி என்ற அகங்காரம் தானே உனக்கு? நாங்கள் லோகத்தின் மாதா பிதாக்கள் வந்திருக்கும்போது அவமதித்து விட்டாயே. நான் சாபம் கொடுத்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

ஸனத்குமாரர் பயந்து விடவில்லை. அலட்சியமாக, "நீர் சாக்ஷாத் மகா கோபிஷ்டரான ருத்திரராக இருந்து சாபம்தான் கொடும். அது ஆத்மாவைப் பாதிக்காது" என்று சொல்லிவிட்டு நிச்சிந்தையாக இருந்தார்.

'அடடா, எப்பேர்ப்பட்ட உண்மையான ஆத்மஞானி!' என்று ஈசுவரனுக்கு ரொம்ப சந்தோஷமாகி விட்டது.

இன்னும் கொஞ்சம் பரீக்ஷை பார்த்து, பூராவும் ஞானிதானா என்று தெரிந்துகொள்வோம் என்று நினைத்து, "அப்பா! உன்னுடைய ஞானத்தை நான் ரொம்பவும் மெச்சுகிறேன். என்ன வேண்டுமானாலும் வரம் கேள், தருகிறேன்" என்றார்.

ஸனத்குமாரர் சிரித்தார். "உம் வரத்தை நீரே வைத்துக் கொள்ளும். எதை அடைந்த பின் இன்னொன்று வேண்டும் என்ற ஆசை லவலேசமும் இருப்பதில்லையோ, அப்படிப்பட்ட நிறைந்த நிறைவாக இருக்கிற எனக்கு வாஸ்தவத்தில் ஆகவேண்டியது கடுகத்தனைகூட இல்லை" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

அதற்கும் ஒரு படி மேலே போனார். "பரமேசுவரா! நீ பேசுவதிலிருந்து பார்த்தால் நீதான் வரம், சாபம் இதுகளிலெல்லாம் ஏதோ அர்த்தம் இருக்கிறதென்று நினைப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் சரி. உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானால் கேள், தருகிறேன்" என்றார்.

ஸனத்குமாரர் சொன்னதைக் கேட்டு ஈசுவரனுக்குப் பெருமையாகவே இருந்தது. சர்வலோக மகேசுவரனான அவர் ரொம்பவும் தணிந்து, தம்மைச் சிறியவராக்கிக்கொண்டு ஸனத்குமாரரிடம் வரம் கேட்டார். இவருடைய சொப்பனத்தை நிஜமாக்க இதுவே வழி என்று நினைத்துக் கேட்டார்.

"அப்பா! இப்பேர்ப்பட்ட மகா ஞானியான நீ பிரம்மாவுக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறாய். பிரம்மா செய்த பாக்கியம் எனக்கும் கிடைக்கும்படியாக வரம் கொடப்பா! இன்னொரு ஜன்மாவில் நீ எனக்குப் புத்திரனாகப் பிறக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"ஆஹா, உனக்குப் பிள்ளையாகப் பிறக்கிறேன்" என்று ஒப்புக் கொண்டார் ஸனத்குமாரர்.

ஞானம் வருகிறவரையில்தான் இனி பிறவி வேண்டாம் என்று அழுவோம். ஞானம் வந்துவிட்டால் எப்போதும் ஆனந்த சாகரம் தான். ஜன்மா கின்மா எல்லாம் அதில் ஒரு சின்னக் குமிழி மாதிரிதான். அது வேண்டும் வேண்டாம் என்பதெல்லாம் ஒரு பொருட்டாகவே தெரியாது.

ஸனத்குமாரர் சொல்வதெல்லாம் சத்தியமாகிவிடும் அல்லவா? இப்போது ஈசுவரனை மட்டும் பார்த்துத்தான், 'உனக்குப் பிள்ளையாய்ப் பிறப்பேன்' என்றார். அம்பாளையும் சேர்த்து, 'உங்களுக்குப் பிள்ளையாகப் பிறப்பேன்' என்று சொல்லவில்லை.

இதையும் ஸனத்குமாரர் யோசித்துப் பார்த்தார். (தொடரும்)

1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள் கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.

புதுமுறைக் கல்வியில் நடைமுறைச் சிக்கல்கள்!



"என்ன இருந்தாலும் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் பாடத் திட்டத்தை மாற்றி யிருக்கக் கூடாது."

"சொல்லாமல் கொள்ளாமல் எங்கே மாற்றினீர்கள்? 73—74ல் முதல் மூன்று வகுப்புகளுக்குப் புதுப் பாடத் திட்டம் கொண்டு வந்தாங்க. 74—75க்கு அடுத்த மூன்று வகுப்புகளுக்கு — அதாவது ஆறாவது வகுப்பு வரைக்கும் கொண்டு வந்தாங்க. இப்போ — 75—76 ஆம் ஆண்டுக்கு ஏழு, எட்டு, ஒன்பதுக்குக் கொண்டு வந்திருக்காங்க. இதில் என்ன தவறு?"

"என்ன தவறு? கணக்குப் புத்தகத்தையும் ஸயன்ஸ் புஸ்தகத்தையும் எடுத்தா சொல்லிக் கொடுக்கப் போற நமக்கே தலையைச் சுற்றுமே ஐயா! படிக்கப் போகிற மாணவர்களுக்கு எப்படிப் புரியும்?"

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொல்லிக் கொடுக்கிற நாமே இப்படிச் சொன்னால் எப்படி? ஆனால் ஒன்று ஒப்புக் கொள்கிறேன். வருஷத்துக்கு ஒரு வகுப்பாகத்தான் பாடத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கணும். பழைய திட்டப்படி பயின்று வருகிற ஒன்பதாவது வகுப்பு மாணவனைப் புதுத் திட்டப்படி படி என்று சொன்னால், அவனுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி தான் இருக்கும்! புஸ்தகங்கள் அச்சிட்டுப் பணம் முடங்கிப் போச்சே என்கிறதற்காக இந்த ஏற்பாடு செய்தது என்ன சொன்னாலும் தவறுதான்."

"இன்னுமொன்று பாருங்கள். பழைய பாடத் திட்டப்படி எட்டாவது வகுப்புப் பாடங்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களே எடுத்துக் கொள்ள முடிந்தது. இந்தப் புதிய திட்டப்படி ஆசிரியப் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும். அவர்களுக்குமே போதிய பயிற்சி தரப்பட்டால்தான் அதுவும் முடியும். அதுதான் அவர்களுக்குப் பதினைந்து நாட்கள் பயிற்சி கொடுத்திருக்கிறோமே என்று சொல்லலாம். அது போதவே போதாது."

"உம்ம கணிப்பு ரொம்பச் சரி. இருந்தாலும் இந்தப் புதிய கல்வித் திட்டத்தினால், 'உமது தரம்—எனது தரம்' கூட உயர வழி இருக்கிறது. நாமும் படித்துப் புரிந்து கொண்டு நமது கல்வித் தரத்தையும் உயர்த்திக்கொள்ள முடியும்."

* * *

மத்திய அரசு நடத்தும் கல்விக் கூடங்கள், மேநாட்டுக் கல்வி முறை நிலையங்கள் ஆகியவற்றுக்கு நிகராக நம் தமிழ் நாட்டுக் கல்வித் தரம் உயர்ந்து பெருமையுற வேண்டுமென்ற நோக்கத்துக்கு எதிர்ப்பில்லை. திடுதிடுப்பென்று மூன்று மூன்று படிகளாகத் தாண்டுவதைத்தான் யாரும் விரும்பவில்லை.

இன்று பெரு நகரங்களில், தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு மத்திய அரசுப்பள்ளிப் பாட முறையைப் பின்பற்றி எத்தனை

○ மேற்கு ஜெர்மனி, கலைக் காட்சிகளில் குழந்தைகளுக்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. அவர்கள் பார்த்து மகிழ வசதியான உயரத்தில் பிரதிநிதி பெற்ற ஓவியங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன. பெரியவர்கள் கண்டு களிக்க விரும்பினால் குனிந்து சிரமப்பட வேண்டியதுதான்!




பள்ளிகள் தனியார் துறைத் தொழிலகங்களை உருவாக்கிவிடவில்லை?

ஆங்கிலம் போதனாமொழி என்ற நைப் பாசையைக் காட்டி, ஹையர் செகண்டரி பாடத் திட்டங்களைச் சொல்லித் தருவதாகக் கூறி ஈர்க்கும் இப்பள்ளிகளில் ஆட்சிபீடத்தில் உள்ள அரசியல்வாதி முதற்கொண்டு, அலுவலகத்தில் பேனா பிடிக்கும் சிப்பந்திகள் வரை போய்விழுகிறார்கள் என்றால் காரணம் என்ன? இப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியப் பயிற்சி பெறாத ஆசிரிய – ஆசிரியைகள் ஒரு நல்ல காரியம் செய்கிறார்கள். அதாவது குழந்தைகளுக்கு நிறைய வீட்டுப் பாடங்கள் கொடுக்கிறார்கள். பலன், பெற்றோர்களே பயின்று, அந்த அளவுக்குத் தங்கள் தங்கள் கல்வித் தரத்தை உயர்த்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுகிறார்கள்.

''இப்படிக் கணிசமாக வகுப்புக் கட்டணத்தையும் கொடுத்துத் தாங்களும் படித்துக் கல்வித் தரம் உயரப் பாடுபடும் பெற்றோர்கள், வகுப்புக் கட்டணம் இல்லாத எங்கள் பள்ளிகளில் சேர்க்கும்போது காட்டும் ஆர்வத்தை அப்புறம் காட்டுவதே இல்லை. அங்கு காட்டும் ஆர்வத்தில் நூற்றில் ஒரு பங்கு எங்கள் கல்விக் கூடங்கள் விஷயத்தில் காட்டினால் போதும், எங்களுக்கு ஓர் உற்சாகம் ஏற்படும். அவர்கள் சுட்டிக் காட்டும் குறை – நிறைகளைக் களைந்து செயல்படும் வாய்ப்பு இருக்கும். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்ற கருத்து இருக்கும்!''

இவ்விதம் ஆதங்கப்படும் தலைமை ஆசிரியரின் சொல்லிலும் பொருள் இருக்கத்தானே செய்கிறது! தனியார் பள்ளிகளைப் போலவே இதர பள்ளிகளிலும் கல்வியின் தரத்தை உயர்த்தவே புதிய பாடத் திட்டம்.




○ விளையாட்டாக ஆரம்பமாகும் கல்விதான் இவனைக் கர்மவீரனாக்கப் போகிறது. மேநாடுகளில் இளம் பிராயத்திலேயே இப்படித் தொழில் கல்விக்கு வித்திட்டுவிடுகிறார்கள்.

''ஆமாம், அந்தப் பழைய முறைக்கும் இந்தப் புதிய முறைக்கும் உள்ள வேறுபாடு என்ன?''

''பழைய முறையில் பயிற்சியும் பழக்கமும் சிறந்து விளங்கின. புதிய முறையில் இளம் மூளைகளே செயல்பட்டு இன்னது-இனியது என்பதை விளங்கிக் கொள்கின்றன. உதாரணமாக, கூட்டலுக்கும் பெருக்கலுக்கும், கழித்தலுக்கும்வகுத்தலுக்கும்என்னென்ன தொடர்பு என்பதைப் பகுத்தறிந்து புரிந்துகொள்கின்றன. ஆவலைத் தூண்டி அறிவை வளர்க்கும் இம்முறையை வரவேற்க வேண்டியதுதான்.''

''புதிய கணித முறையில் செட் என்று கூறப்படும் கணம், இப்பொழுது புதிதாகக்

○ அமெரிக்க இந்திய நட்புறவை வளர்க்கும் விதமாக இங்கு வந்துள்ள குட்டி டிராக்டர் நமது மாணவர்களிடம் நவீன விவசாயத்தில் ஆர்வத்தை வளர்க்கிறது.



கையாளப்படும் குறிகள் இவற்றைப் புரிந்து கொள்வதே சிரமமாக இருக்கும்போலிருக்கிறதே! அப்புறம் விஞ்ஞானப் பாடங்களும் தரம் உயர்ந்து விட்டனவே! இவற்றைப் போதிப்பவர்களே சரியாகப் புரிந்துகொள்ள வேண்டாமா?''

''யார் வேண்டாம் என்பார்கள்? செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம் என்பது போலப் போதித்துப் போதித்துப் புரிந்து கொள்வார்கள் உபாத்தியாயர்கள். பயின்று பயின்று புரிந்து கொள்வார்கள் மாணவர்கள். அரசாங்கம் ஆசிரியர்களுக்குத் தரும் பயிற்சி பற்றாது. அதிர்ஷ்ட வசமாக ஒவ்வொரு பள்ளியிலுமே ஆசிரியர்களுக்கே ஆசிரியர்களாக இருக்கக் கூடிய பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு பத்து நாளைக்கு ஒரு தரம் பதினைந்து நாட்களுக்கு ஒரு தரம் 'ஸ்டடி சர்க்கிள்' என்னும் கல்வி அரங்கு நடத்தி ஆசிரியர்கள் தங்கள் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம். நகர்ப்புறங்களில் உள்ள மற்ற பள்ளிகளும் இப்படி இணைந்து செயற்படலாம். ஆனால் நாட்டுப் புறங்களில் ஓரொரு பள்ளிதான் இருக்குமாதலால், ஆட்சித் துறையினர் கணித, விஞ்ஞான வல்லுநர்களைக் கொண்டு வானொலிப் பாடங்கள் நிகழ்த்தலாம். திரைப் படங்களை தயாரித்துக் காட்டலாம். கணக்கு—ஸயன்ஸ் விஷயத்தில் நேரடிச் சோதனைகளுக்கு சினிமா, ஸ்லைட் போன்ற உதவிகளை நாடலாம். இறைக்க இறைக்க ஊறும் கேணியைப் போலத் தரமான கல்வி வளம் கூட்டுவது விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்த நாட்களில் சிரமமே இல்லை.''

''மெய்தான். பாடப் புத்தகங்கள் தயாரிக்கும் விஷயத்தில் இன்னும் கொஞ்சம் கவனம் காட்டியிருக்க வேண்டும்.''

''ஏன் எடுத்துக்காட்டு...?''

''அந்தக் காலத்திலே எல்.ஸி.எம்., ஜி.ஸி.எம். என்பதற்கு அதமப் பொதுமடங்கு, உத்தமப் பொதுக் காரணி (அ. பொ. ம., உ. பொ. கா.) என்று கூறிவந்தார்கள். அவற்றைத் தூய தமிழாக்கும் நோக்கில் ஐந்தாம் வகுப்புக்குரிய புதிய முறைப் புத்தகத்தில் மீச்சிறு பொது மடங்கு, மீப்பெரு பொது வகு எண் என்று போட்டிருக்கிறார்கள். இவற்றின் சுருக்கம் மீ. பொ. ம., மீ.பொ.வ. என்று தரப்பட்டிருக்கிறது. ஆறாவது வகுப்பு புத்தகத்தில் மீப்பெரு வகுத்தி, மீச்சிறு மடங்கி என்று மாற்றியிருக்கிறார்கள். இவற்றின் சுருக்கம் மீ. பெ. வ., மீ. சி. ம. 155ம் பக்கத்தில் மீண்டும் மீ. பொ. வ. என்று உள்ளது. தங்கள் தமிழாக்கத்தில் இவர்களுக்கே தன்னம்பிக்கையோ உறுதிப்பாடோ இல்லையென்று தோன்றுகிறது. கணக்கு—ஸயன்ஸ் போன்ற விஷயங்களில் இப்படிச் சொற்கள் மாறி மாறி வந்தால், மாணவர்களுக்கும் மாருட்டம் ஏற்படும். கணக்கும் ஸயன்ஸும் பொதுச் சாலைகள் அல்ல; நினைத்த பொழுது நினைத்த பெயர் சூட்டி மகிழ்வதற்கு!''

''இத்தகைய தவறுகள் நேரக் கூடாது தான்.''

புதிய பாட திட்டத்தை இத்தனை வேகமாக அமுலாக்குவது விவேகம் அல்ல. என்றாலும் ஆசிரியர்கள் இந்த அறைகூவலை ஏற்றுத் தங்கள் மாணவர்களின் தரத்தை உயர்த்தியே ஆகவேண்டும். —ரா. வீ.

அலகாபாத் தீர்ப்பு!

''வக்கீல் சார்! எங்கள் பந்தயத்தில் ஒரு சிக்கல்!''

''என்ன சொல்லுங்கள்.''

''இவனுக்கும் எனக்கும் ஆயிரம் ரூபாய் பந்தயம். இந்திரா காந்தி அலஹாபாத் கோர்ட் கேஸில் தோல்வி அடைந்து பதவியை இழப்பார் என்றேன். ஆனால் இவன் அவர் கேஸில் ஜெயித்துப் பதவியில் இருப்பார் என்றான். ஆனால் இப்போது இந்திரா கேஸில் தோல்வி அடைந்து பதவியில் இருக்கிறார்! அதனால் பந்தயத்தில் யார் ஜெயித்ததாகச் சொல்ல முடியும்?''

''இது சுப்ரீம் கோர்ட் கேஸ். அங்கேதான் தீர்த்து வைக்க முடியும். ஐ ஆம் வெரி ஸாரி....''

''நந்தி''





பெங்களூரில் உள்ள ரவீந்திர கலாக்ஷேத்திரா என்ற அரங்கில் எப்போதும் நாடகங்கள், நடனங்களை நடப்பது வழக்கம். 'இனி மேல் அங்கு படங்களும் திரையிடப்படும்' என்று நிர்வாகிகள் அறிவித்தார்கள். இதை எதிர்த்து பெங்களூர் நாடக நடிகர்கள் ஓர் அதிசயப் போராட்டம் நடத்தினார்கள். குறிப்பிட்ட கட்டடத்தின் வாசலில் ஒரு கன்னட நாடகத்தின் ஒரு சோகக் காட்சியை நடித்துக்கொண்டே இருந்தார்கள்!

ஆதாரம்: 'டெக்கான் ஹெரால்ட்'

தகவல்: அமிர்தா ராமச்சந்திரன்

அமரர்

K. T. R. கோபாலகிருஷ்ண ராஜா

(திருவாரூர் நகராட்சி மன்ற முன்னாள் தலைவர்)

மானேஜிங் பார்ட்னர் :

K. T. R. வாசனுதி திரவியசாலை & K. T. R. அச்சகம்

திருவாரூர் - 610108 (தஞ்சை மாவட்டம்)



தோற்றம் :
16 11-1912

மறைவு :
15-6-1975

அஞ்சலி செலுத்துகிறோம்

அன்பாளர் — பண்பாளர் — அயராது உழைத்த பொன்மனச் செம்மல்
எங்கள் இதயத் தெய்வத்திற்கு அஞ்சலிகள்

K. T. R. G. தனலக்ஷ்மி அம்மாள்
G. ஜெயராமன், B. Sc., — J. செங்கம்மாள்
G. ராமகிருஷ்ணன், B. A., B. L., — R. ஜெயந்தி
கவிஞர் மா. வரதராஜன், B. A., — V. ஆண்டாள்
S. G. ராமதாஸ் — R. விஜயாள்

நன்றி : திரு K. T. R. G. இயற்கை எய்தியதை யொட்டி நேரிலும், கடித மூலமும் எமக்கு அனுதாபம் கூறி, ஆறுதல் தெரிவித்து, எங்களது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், 29-6-75 அன்று அமரர் K. T. R. G. அவர்களின் "திருவுருவப்படத் திறப்பு விழா — நினைவு மலர் வெளியீட்டு விழா" நிகழ்ச்சிகளுக்கு விஜயம் செய்தவர்களுக்கும், இரு விழாக்களின் வெற்றிக்கு விழைந்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதையே தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் தெரிவித்துக் கொண்டதாகக் கருதுமாறு கேட்டுக் கொள்கிறோம்

திருவாரூர்
7-7-75

இங்ஙனம்,
— துயர்வாய்ப்பட்டுள்ள K. T. R. G. குடும்பத்தினர்

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்". 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தந்தி: 'EVERMANS', போன்: 85834, தபால்பெட்டி: 414

குறுகிய கால மாதச் சீட்டுகள்

வகுப்பு	சீட்டுத் தொகை	மாதச் சந்தா	அங்கத்தினர்கள்	மாதங்கள்
G	ரூ. 10,000/-	ரூ. 500/-	20	20
H	ரூ. 5,000/-	ரூ. 250/-	20	20
I	ரூ. 4,000/-	ரூ. 200/-	20	20
Q	ரூ. 2,000/-	ரூ. 100/-	20	20
R	ரூ. 1,500/-	ரூ. 75/-	20	20
S	ரூ. 1,000/-	ரூ. 50/-	20	20
T	ரூ. 800/-	ரூ. 40/-	20	20
U	ரூ. 600/-	ரூ. 30/-	20	20

சேரும் குருப்பை விவரித்து எழுதவும்

கிளைகள்: புதுடில்லி-பம்பாய்-பெங்களூர் கல்கத்தா-கோயம்புத்தூர்

ஸ்தாபிதம்: 1947

29 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி



இருபத்துமூன்றும் அத்தியாயம்

சீன யாத்திரிகர்

வாதாபி நகரத்தின் வீதிகளில் தன்னை நடனம் ஆடச் சொன்னதனால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியின் வேகம் நாளாக ஆகச் சிவகாமியின் உள்ளத்தில் குறைந்து மங்கி வந்தது. தமிழகத்திலிருந்து சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவர் எல்லாரும் அவரவர்களுக்கு ஏற்ற ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டுக் குடியும் குடித்தனமுமாய் வாழத் தொடங்கினார்கள். அவர்களில் சிலர் சில சமயம் சிவகாமியைப் பார்க்க வருவதுண்டு. அப்படி வருகிறவர்களுடைய மனத்திலே கோபமோ, வன்மமோ ஒன்றுமில்லை என்பதைச் சிவகாமி கண்டாள்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்த போது, தான் ஆத்திரப்பட்டுச் சபதம் செய்ததன் அறியாமையையும், மாமல்லருடன் போகாமல் அவரைத் திருப்பியடித்ததன் மௌடீகமும் அவளுக்கு மேலும் மேலும் நன்கு புலனாயின.

ஆயினும் பெண்களின் இயல்புக்கு ஒத்தபடி தான் செய்த தவறுக்கும் மாமல்லர்மீதே சிவகாமி பழியைப் போட்டாள். 'என்ன இருந்தாலும் நான் அறியாப் பெண்தானே! ஏதோ, அவமானத்தினாலும் ஆத்திரத்தினாலும் தூண்டப்பட்டு அந்த மாதிரி சபதம் செய்தேன். ஆண் பிள்ளையும் அறிவாளியுமான அவரல்லவா என்னைப் பலவந்தப்படுத்திப் பிடிவாதமாக அழைத்துப் போயிருக்க வேண்டும்? சேனாதிபதி பரஞ்சோதி சொன்னாரே, அந்தப்படி ஏன் அவர் செய்திருக்கக் கூடாது?' என்று அடிக்கடி எண்ணமிட்டாள்.

வருஷங்கள் செல்லச்செல்ல, மாமல்லர் மறுபடியும் வந்து தன்னுடைய சபதத்தை நிறைவேற்றித் தன்னை அழைத்துப் போவார் என்ற நம்பிக்கை சிவகாமிக்குக் குறைந்து கொண்டே வந்தது. அது எவ்வளவு பிரம்மப் பிரயத்தனமான காரியம், எவ்வளவு அசாத்தியமான விஷயம் என்பதையும் உணரலானாள்.

"நான் செய்த சபதம் பிசகானது. அறியாமையினால் அத்தகைய அசாத்தியமான காரியத்தைச் சொல்லி விட்டேன். அதைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம். என்னை எப்படியாவது திரும்ப அழைத்துக் கொண்டு போனால் போதும்!" என்று மாமல்லருக்குச் செய்தி சொல்லி அனுப்பலாமா என்பதாகச் சில சமயம் அவளுக்குத் தோன்றியது. ஆனால் அந்த யோசனையைக் காரியத்தில் அவள் நிறைவேற்றுவதபடி நாகநந்தியின் ஏளன வார்த்தைகள் செய்து வந்தன.

சிவகாமி கத்தியை வீசி எறிந்து நாகநந்தியை முதுகில் காயப்படுத்திய போது, அந்த நயவஞ்சக வேஷதாரி, "அடடா! என்ன காரியம் செய்தாய்? உன்னை அவர்களோடு கூட்டி அனுப்ப



அல்லவா எண்ணினேன் ?'' என்று சொல்லியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதனால் சிவகாமிக்கு நாகநந்தியின் மீதிருந்த கோபமெல்லாம் மாறித் தன் செயலைப் பற்றிப் பச்சாத்தாபமும் பிக்ஷுவின்மீது ஓரளவு அனுதாபமும் உண்டாயின. நாகநந்தி தம்முடைய பாசாங்கு உத்தேசித்த பலனை அளித்து விட்டது குறித்து மனத்துக்குள் மகிழ்ந்தார். சிவகாமிக்குத் தம்மிடம் ஏற்பட்ட அனுதாபத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

சில நாளைக்கெல்லாம் சிவகாமியைத் தாமே அழைத்துக் கொண்டு போய்க் காஞ்சியில் விட்டுவிடுவதாக நாகநந்தி சொன்னார். சிவகாமி அதை மறுதளித்ததுடன் தான் செய்த சபதத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தினாள்.

அதைக் கேட்ட நாகநந்தி ஏளனப் புன்னகை புரிந்து, ''இப்படி ஒருநாளும் நடைபெற முடியாத சபதத்தை யாராவது செய்வார்களா?'' என்று கேட்டார்.

''நிறைவேறுகிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டிருங்கள்!'' என்று சிவகாமி வீறாப்பாய்ப் பேசினாள்.

அறிமுகமானவர்கள் யாருமே இல்லாத அந்தத் தூர தேசத்து நகரில், தானாக ஏற்படுத்திக் கொண்ட சிறையில் இருந்த சிவகாமிக்கு நாகநந்தி அடிகளோடு அவ்வப்போது சம்பாஷிப்பது பெரிதும் ஆறுதல் தருவதாயிருந்தது. தேசமெல்லாம் பிரயாணம் செய்தவரும், பல கலைகள் அறிந்தவருமான பிக்ஷுவுடன் பேசுவது உற்சாகமான பொழுதுபோக்காயும் இருந்து வந்தது.

''காஞ்சிக்குத் திரும்பிப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால், வேண்டாம். அஜந்தாவுக்கு அழைத்துப்போகிறேன், வா ! எந்த வர்ண இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காக உன்னுடைய தந்தை துடிதுடித்தாரோ, அதை நீயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!'' என்று நாகநந்தி சில சமயம் ஆசை காட்டினார்.

அதற்கும் சிவகாமி, ''என் சபதம் நிறைவேறாமல் இந்த நகரை விட்டு நான் கிளம்பேன் !'' என்றே மறுமொழி சொல்லி வந்தாள்.

மூன்று வருஷத்துக்கு முன்னால் பல்லவ சைனியம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப் போகிறது என்ற வதந்தி உலாவியபோது சிவகாமி எக்களிப்படைந்தாள். அது பொய்யாய்ப் போனதோடு, நாகநந்தி அதைக் குறித்து மீண்டும் அவளை ஏளனம்

செய்தது அவள் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. ஆயினும், தன் மன நிலையை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''பொறுத்திருங்கள்; அடிகளே, பொறுத்திருங்கள்! இந்த வருஷம் இல்லாவிட்டால், அடுத்த வருஷம்! கொஞ்சம் பொறுத்திருங்கள்!'' என்று சொல்லி மாமல்லரின் கௌரவத்தை நிலைநாட்ட முயன்றாள்.

அவ்விதம் கர்வமாகப் பேசி இப்போது வருஷம் மூன்று ஆகிவிட்டது.

சிவகாமி வாதாபிக்கு வந்து ஒன்பது வருஷம் பூர்த்தியாகிவிட்டது.

இனியும் நம்பிக்கை வைப்பதில் ஏதேனும் பயன் உண்டா? நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு இன்னும் எத்தனை காலம் இந்தத் துயர வாழ்க்கையைச் சுமந்திருப்பது?

போதும், போதும் ஒன்பது வருஷம் காத்திருந்தது போதும்!

வீட்டு முற்றத்தில், பவளமல்லி மரத்தின் பக்கத்திலே இருந்த கிணறு, தன் வாயை அகலமாக விரித்து, ''வா! வா! என்னிடம் அடைக்கலம் புகுவதற்கு வா!'' என்று சிவகாமியை அழைத்துக் கொண்டிருந்தது.

இத்தகைய நிலைமையில்தான் ஒரு நாள் நாகநந்தியடிகள் சீன யாத்திரிகர் ஒருவரை அழைத்துக் கொண்டு சிவகாமியைப் பார்க்க வந்தார். ஹியூன் சங் என்னும் அந்தச் சீனர் உலகில் பல தேசங்களையும் பல இராஜ்யங்களையும் பார்த்துவிட்டு வந்தவர். பல கலைகளைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். அந்தக் காலத்தில் பரத கண்டத்தில் புகழ்பெற்று விளங்கிய மூன்று சாம்ராஜ்யங்களில் ஹர்ஷ சாம்ராஜ்யத்தைப் பார்த்துவிட்டு, அடுத்தபடி வாதாபிக்கு அவர் வந்திருந்தார். சளுக்க சாம்ராஜ்யத்தில் அஜந்தா முதலிய இடங்களையும் வேங்கி நாட்டில் நாகார்ஜுன பர்வதத்தையும் பார்த்துவிட்டு, அவர் பல்லவ இராஜ்யத்துக்குப் போக எண்ணியிருந்தார். இதை அறிந்த நாகநந்தி, ''இங்கே பல்லவ நாட்டின் புகழ்பெற்ற மகாசிற்பியின் மகள் இருக்கிறாள். பரதநாட்டியக் கலையில் கரை கண்டவள். அவளைப் பார்த்துவிட்டுப் போகலாம்'' என்று சொல்லி அழைத்து வந்தார்.

சீன யாத்திரிகரின் சம்பாஷணை சிவகாமிக்குப் பழைய கனவு லோகத்தை நினைவூட்டி மெய்ம்மறக்கும்படி செய்



தது. ஹியூன் சங் தம்முடைய யாத்திரையில் தாம் கண்டு வந்த தேசங்களைப் பற்றியும் ஆங்காங்குள்ள இயற்கை அழகுகள், கலை அதிசயங்களைப் பற்றியும் விவரித்தார். இடையிடையே தமிழகத்துச் சிற்பக் கலையைப் பற்றிச் சிவகாமியைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். சிவகாமியின் நாட்டியத் தோற்றங்களை அவருடைய தந்தை ஆயனர் அழியாத சிலை வடிவங்களாகச் செய்திருக்கிறார் என்று நாகநந்தி சொன்னபோது, ஹியூன்சங்கின் அதிசயம் அளவுகடந்து பொங்கிற்று. அந்த நடனத் தோற்றங்களில் சிலவற்றைத் தாம் பார்க்க வேண்டும் என்று விரும்பிச் சிவகாமியை ரொம்பவும் கேட்டுக் கொண்டார்.



ஒன்பது வருஷத்துக்குப் பிறகு சிவகாமிக்கு உண்மையிலேயே அவள் கற்றிருந்த கலையில் மீண்டும் உற்சாகம் உண்டாயிற்று. சில நடனத் தோற்றங்களையும் அபிநய பாவங்களையும் சீனக் கலைஞருக்கு அவள் ஆடிக் காட்டினாள்.

ஹியூன் சங் அவற்றைக் கண்டு அதிசயித்து மகிழ்ந்தார். நாகநந்தியோ மெய்ம்மறந்து பரவசம் அடைந்தார்.

ஹியூன் சங் சிவகாமியைப் பற்றி மேலும் விசாரித்தபோது சிவகாமி சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்ட வரலாற்றையும், அவள் செய்த சபதத்தையும் பற்றி நாகநந்தி கூறினார்.

"சக்கரவர்த்தியின் அநுமதி பெற்று இந்தப் பெண்ணைத் திருப்பிக் கொண்டு விட்டுவிடுவதாக எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்தேன். இவள் கேட்கவில்லை. இப்பேர்ப்பட்ட அற்புதக் கலை இந்த வீட்டுக்குள் கிடந்து வீணாவதை நினைத்தால் எனக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிறது. இவளுக்கு விடுதலை தருவதற்காக இந்த வாதாபி நகரத்தை நாமே கொளுத்தி அழித்து விடலாமா என்றுகூடச் சில சமயம் எனக்குத் தோன்றுகிறது!" என்றார் நாகநந்தி.

ஹியூன் சங் தம் செவிகளைப் பொத்திக் கொண்டு, "புத்த பகவான் அப்படியொன்றும் நேராமல் தடுத்து அருளட்டும்!" என்றார். பிறகு, அந்தப் பெரியார் ஜீவகாருண்யத்தின் சிறப்பையும் யுத்தங்களினால் நேரும் கேட்டையும் எடுத்துக் கூறித் தர்மோபதேசம் செய்தார். புத்த பகவான் ஆட்டைக் காப்பதற்காக யாகத்தை நிறுத்திய வரலாற்றை விவரித்தார். அசோகரின் தர்ம ராஜ்யத்தைப் பற்றி எடுத்துரைத்தார். தற்சமயம் ஹர்ஷ சக்கரவர்த்தி அதேவிதமாகத் தர்ம ராஜ்யம் நடத்துவதையும், பிராணி ஹிம்சையைக்கூடத் தமது இராஜ்யத்தில் அவர் தடுத்து விட்டிருப்பதையும் குறிப்பிட்டார்.

சிவகாமி இடையிலே குறுக்கிட்டு, "ஆனால், சுவாமிகளே! இந்த வாதாபி சக்கரவர்த்தியின் வீரர்கள் தமிழகத்தில் செய்த அக்கிரமங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியாது. அதனாலேதான் இப்படியெல்லாம் தர்மோபதேசம் செய்கிறீர்கள்!" என்று கூறியபோது அந்தச் சீன பிக்ஷு கூறியதாவது:

"தாயே! யுத்தம் என்று வரும்போது மனிதர்கள் மிருகங்களாகிவிடுவதை நான் அறியாதவன் அல்ல; நீ பார்த்திருக்கக் கூடியவைகளைவிடப் பன்மடங்கு அக்கிரமங்கள் நடந்திருக்கலாம். ஆனால், பழிக்குப் பழி வாங்கிக் கொண்டே போனால், அதற்கு முடிவு என்பதே கிடையாது. சளுக்கச் சக்கரவர்த்தி படையெடுத்ததற்குப் பழி வாங்குவதற்காக இப்போது காஞ்சிச் சக்கரவர்த்தி படையெடுக்கிறார். மறுபடியும் காஞ்சியின் மேல் பழி வாங்குவதற்காகச் சளுக்க வம்சத்தினர் படையெடுப்பார்கள். இப்படி வித்திலிருந்து மரமும், மரத்திலிருந்து வித்துமாக உலகில் தீமை வளர்ந்து கொண்டே போகும். யாராவது ஒருவர் மறந்து மன்னித்துத்தான் தீர வேண்டும். அப்போதுதான் உலகம் க்ஷேமம் அடையும். தாயே, எது எப்படியானாலும் உன்னுடைய பயங்கரமான சபதம் நிறைவேற வேண்டும் என்று மட்டும் நீ ஆசைப்படாதே. அதனால் யாருக்கும் நன்மை உண்டாகாது. ஆகா! இந்தப்



"ஏண்டி இப்படி எல்.ஐ.ஸி. பில்டிங் மாதிரி எகிறி விழறே?"

-ம. இராமசாமி



லக்ஸ் ஸுப்ரீம்

அதனுள்ளேயே அடங்கியுள்ளது ப்யூடி க்ரீம்!

உங்கள் சருமத்தைப் பட்டுப்போன்று வழவழப்பாக வும், மிகுந்த அழகுடனும் விளங்க வைக்க லக்ஸ் ஸுப்ரீம் ஒரு புதிய சாதனமாகும். ஏனென்றால் அது ஒன்றில்தான் ப்யூடி க்ரீம் அடங்கியுள்ளது.

நிறைந்த அதன் நுரையின் நடுவில் ப்யூடி க்ரீமின் ஸ்பரிசத்தை நீங்கள் உண்மையாகவே உணருவீர்கள்.

லக்ஸ் ஸுப்ரீமின் நுரை உங்கள் சருமத்திற்கு மென்மையூட்டும்போதே, உங்கள் தேகத்திலிருந்து அரிய ஒரு நறுமணம் வீசுவதை அனுபவிக்க முடியும். அதுதான் லக்ஸ் ஸுப்ரீமுக்கே உரித்தான ஒரு விசேஷ குணம்.

லக்ஸ் ஸுப்ரீம் உபயோகித்து உங்கள் எழில் மலர்வதை உணருங்கள். ப்யூடி க்ரீம் அடங்கிய ஒரே சோப்பு

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு

HT.HLLS.8849

பெரிய நகரத்தில் எத்தனை ஆயிரம் வீடுகள் இருக்கின்றன? எத்தனை லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்? அவர்களில் வயோதிகர்களும் குழந்தைகளும் உன்னைப் போன்ற அபலை ஸ்திரீகளும் எத்தனை பேர்? இந்த நகரத்தைத் தீ வைத்து எரித்தால், இவ்வளவு குற்றமற்ற ஜனங்களும் எத்தனை கஷ்டமடைய நேரிடும்? யோசித்துப் பார்!''

இதையெல்லாம் கேட்ட சிவகாமியின் உள்ளம் பெரும் குழப்பம் அடைந்தது. அந்தச் சமயம் பார்த்து நாகநந்தி அடிகள், ''சிவகாமி! இந்தப் பெரியவர் சொன்னதைக் கேட்டாயல்லவா? நடந்து போனதையே நினைத்துக்



கொண்டிருப்பதில் என்ன பயன்? பழி வாங்கும் எண்ணத்தினால்தான் பிரயோஜனம் என்ன? ஒன்பது வருஷம் நீ விரதம் காத்தது போதாதா? இன்னும் இரண்டு நாளில் இந்தச் சீனத்துப் பெரியவரும் வாதாபிச் சக்கரவர்த்தியும் அஜந்தாவுக்குப் போகிறார்கள். அவர்களுடன் நானும் போகிறேன். அங்கே பெரிய கலைத் திருவிழா நடக்கப் போகிறது. நீயும் எங்களுடன் வா, போகலாம்! உலகத்தில் எங்கும் காண முடியாத அதிசயங்களையெல்லாம் அங்கே நீ காண்பாய்!'' என்றார்.

ஒரு கணம் சிவகாமியின் கலை உள்ளம் சலனம் அடைந்துவிட்டது. ''ஆகட்டும், சுவாமி! வருகிறேன்!'' என்று சொல்ல அவள் மனம் ஆசைப்பட்டது. ஆனால், அவளுடைய உதடுகள் அந்த வார்த்தைகளை வெளிப்படுத்த மறுதலித்துவிட்டன.

அவளுடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலே ஒரு மெல்லிய குரல், ''சிவகாமி! இது என்ன துரோகம் நீ எண்ணுகிறாய்? மாமல்லர் அழைத்த போது அவருடன் போக மறுத்துவிட்டு, இப்போது இந்தப் புத்தபிக்ஷுக்களுடனே புறப்படுவாயா? நீ அஜந்தா போயிருக்கும் சமயம் ஒருவேளை மாமல்லர் இங்கு வந்து பார்த்து உன்னைக் காணாவிட்டால் அவர் மனம் என்ன பாடுபடும்?'' என்று கூறியது.

சிவகாமி சலனமற்ற தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''பிக்ஷுக்களே! இந்த அநாதைப் பெண் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதன் பொருட்டு மிக்க வந்தனம். ஆனால், அஜந்தா மலையின் அதிசயங்களைப் பார்க்க அடியாள் கொடுத்து வைத்தவள் அல்ல. இந்தச் சீன தேசத்துப் பெரியார் சொன்ன ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். என் சபதம் நிறைவேற வேண்டும் என்று இனி நான் ஆசைப்பட மாட்டேன். இந்த வாதாபி நகரமும் இதில் வாழும் ஜனங்களும் ஒரு துன்பமும் இன்றிச் செழித்து வாழட்டும்! அவர்களுக்கு என்னால் எந்தவிதமான கெடுதலும் நேர வேண்டாம். ஆனால், அடியாள் என் வாழ்நாளை இந்த வீட்டிலேயேதான் கழிப்பேன். 'எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த நகரைவிட்டு வெளியேறுவதற்கு உடன்படமாட்டேன்!'' என்றாள்.

இருபத்திநான்காம் அத்தியாயம்

பவள வியாபாரி

நாகநந்தியும் சீன யாத்திரிகரும் போன பிறகு சிவகாமி சற்று நேரம் கற்சிலையாகச் சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

பழைய ஞாபகங்கள் ஒவ்வொன்றாக வந்து போய்க் கொண்டிருந்தன.

திருப்பாற் கடலில் ஏரி உடைப்பு எடுத்ததும், அந்தப் பெருவெள்ளத்தில் தான் முழுகி இறப்பதற்கு இருந்ததும், மாமல்லர் நல்ல தருணத்தில் வந்து பானைத் தெப்பத்தில் தன்னை ஏற்றிக் கொண்டு காப்பாற்றியதும் நேற்று நடந்தது போல் நினைவு வந்தன.

அந்தப் பெரு வெள்ளத்தில் முழுகி உயிர் துறக்காத தான் இந்த வீட்டு முற்றத்திலிருந்த கிணற்றுத் தண்ணீரில் மூழ்கி உயிர் விடப் போவதை நினைத்த போது, சிலையை ஒத்திருந்த அவளுடைய அழகிய முகத்தில் இலேசாகப் புன்னகை அரும்பியது.

'கிணற்றில் விழும்போது எப்படியிருக்கும்? விழுந்த பிற்பாடு எப்படி

யிருக்கும்? தண்ணீருக்குள் மூச்சடைத்துத் திணறும் போது தனக்கு என்னென்ன நினைவுகள் உண்டாகும்? மண்டபப்பட்டுக் கிராமத்துக்கருகில் பானைத் தெப்பம் மோதிக் கவிழ்ந்து தான் தண்ணீரில் மூழ்கியபோது தன்னை மாமல்லர் காப்பாற்றினாரே, அந்தச் சம்பவம் நினைவுக்கு வருமா?'

இப்படி எண்ணியபோது வீதியில், ''பவளம் வாங்கலையோ, பவளம்!'' என்று கூவும் சத்தம் கேட்டது.

சிவகாமி சிறிதும் சம்பந்தமில்லாமல், ''ஆமாம்! பவளமல்லி மலர்ந்துதான் இருக்கிறது! நான் கிணற்றில் விழுந்து இறந்த பிறகும் அது மலர்ந்துகொண்டுதானிருக்கும்!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

மறுபடியும் வீட்டு வாசலில், ''பவளம் வாங்கலையா, பவளம்?'' என்று சத்தம் கேட்டது.

ஏனோ அந்தக் குரல் சிவகாமிக்கு மெய்சிலிர்ப்பை உண்டாக்கியது. ஏற்கெனவே எப்போதாவது கேட்ட குரலா என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் பவள வியாபாரி வீட்டுக்குள்ளேயே வந்து, ''அம்மா! பவளம் வேண்டுமா? அபூர்வமான உயர்ந்த பவளம்! அஜந்தா வர்ணத்தையும் தோற்கடிக்கும் அழகிய பவளம்!'' என்றான்.

அஜந்தா என்றதும் மறுபடியும் சிவகாமி திடுக்கிட்டு அந்த வியாபாரியின் முகத்தை — தாடியும் மீசையும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த முதிர்ந்த முகத்தை — உற்று நோக்கினாள். ஆ! அந்தக் கண்கள்! அன்போடும் பக்தியோடும் அவளை உற்றுப் பார்த்த அந்தக் கண்கள்!...

''அம்மா! என்னைத் தெரியவில்லையா?'' என்று சொல்லிக் கொண்டே பவள வியாபாரி நெருங்கி வந்து உட்கார்ந்து தான் கொண்டு வந்த பவள மூட்டையை அவிழ்த்தான்.

குண்டோதரனுடைய குரல்தான் அது என்பதைச் சிவகாமி தெரிந்து கொண்டாள்.

இருந்தாலும் தன் கண்களையும் காதுகளையுமே நம்ப முடியாதவளாய், ''யார், குண்டோதரனா?'' என்றாள்.

''ஆம்! நான்தான், அம்மா! அடியேனை மறந்து விட்டீர்களா?'' என்று குண்டோதரன் பணிவோடு கேட்டான்.

''ஆமாம், அப்பனே! மறந்துதான் போயிற்று. நீங்கள் திரும்ப வருவதாகச் சொல்லிவிட்டுப் போய் வருஷம் கொஞ்சமாக ஆகவில்லையே?'' என்றாள் சிவகாமி சிறிது எரிச்சலுடன்.

''அம்மா! வெறுமனே திரும்பி வந்தால் போதுமா? தங்களுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாய் வரவேண்டாமா?'' என்றான் குண்டோதரன்.

''ஆகா சபதம்! பாழும் சபதம்!'' என்றாள் சிவகாமி, குண்டோதரனைப் பார்த்து. ''சபதத்துக்கு நான் ஒரு முழுக்குப் போட்டு விட்டேன், குண்டோதரா!'' என்றாள்.

குண்டோதரன் விஷயம் விளங்காதவனைப் போல் வெறித்துப் பார்த்து, ''அம்மா! என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''வேறு ஒன்றுமில்லை, அப்பா! நான் செய்த சபதந்தானே? அதை நானே கைவிட்டு விட்டேன்!''

''அப்படிச் சொல்ல வேண்டாம், அம்மா! தாங்கள் செய்த சபதம்



தமிழகமே செய்த சபதம். அதை நிறைவேற்றி வைப்பது எங்கள் எல்லாருக்கும் ஏற்பட்ட பொறுப்பு.''

''சபதத்தை நிறைவேற்றத்தான் நீ இந்த வேஷத்தில் வந்திருக்கிறாயா? அதற்காகத்தான் பவளம் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று ஏளனப் புன்னகையுடன் சிவகாமி கேட்டாள்.

''தாயே! இராம தூதனாகிய அனுமான் சீதாதேவியிடம் வந்தது போல் நான் வந்திருக்கிறேன். இராமபிரான் பின்னால் ஒரு பெரிய சேனா சமுத்திரத்துடன் வரப்போகிறார்!'' என்றான்.

சிவகாமியின் தேகம் உணர்ச்சி மிகுதியினால் நடுங்கிற்று. ஆகா! ஒன்பது வருஷம் காத்திருந்தது உண்மையிலேயே பயனுள்ளதாகப் போகிறதா! மாமல்லர் தன்னை அழைத்துப் போக வரப்போகிறாரா? தன்னை விழுங்கி ஏப்பம் விடலா

''இலக்கிய உலகுக்கு நான் பெரிய சேவையே செய்கிறேன். தெரியாதா உனக்கு?''
''தெரியாதே. அப்படி என்ன சேவை செய்கிறாய்?''
''புத்தக அலமாரிகள் தயார் செய்கிறேன்!''

- சரஸ்வதி பஞ்சு



மென்று எண்ணியிருந்த முற்றத்துக் கிணறு ஏமாற்றமடையப் போகிறதா?

''ஆம், அம்மா! தென்னாடு இது தரையில் என்றும் கண்டிராத மகத்தான பல்லவ சைனியம் ஆயத்தமாகியிருக்கிறது. அந்தச் சைனியத்தின் முன்னணியில் நின்று மாமல்ல சக்கரவர்த்தியும், சேனாதிபதி பரஞ்சோதியும் வரப் போகிறார்கள்!'' என்று குண்டோதரன் தொடர்ந்து சொன்னான்.

''என்ன, மாமல்ல சக்கரவர்த்தியா?'' என்று சிவகாமி திடுக்கிட்டுக் கேட்டாள்.

''மன்னிக்க வேண்டும், அம்மா! தாங்கள் திடுக்கிடும்படி செய்துவிட்டேன். மாமல்ல பிரபுதான் இப்போது பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. மகேந்திர பல்லவர் கைலாசவாசியாகி இன்றைக்குப் பல ஆண்டுகள் சென்றுவிட்டன.''

இதைக் கேட்டதும் சிவகாமியின் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

மகேந்திர பல்லவர் மீது பிற்காலத்தில் அவள் பல காரணங்களினால் கோபப்பட நேர்ந்தது உண்மைதான். ஆனாலும் குழந்தைப் பருவத்தில் அவர்மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த அபரிமிதமான அன்பும் பக்தியும் அழிந்து போய் விடவில்லை.

சிவகாமியின் துக்கத்திடையே குறுக்கிட மனமில்லாமல், குண்டோதரன் சற்று நேரம் சும்மா இருந்தான்.

சிவகாமி திடீரென்று விம்மலை நிறுத்தி, ''குண்டோதரா! உன்னை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன். என்னால் இனி ஒரு கண நேரமும் இந்த நகரில் இருக்க முடியாது. இப்போதே என்னை அழைத்துக் கொண்டு போய் விடு!'' என்றாள்.

குண்டோதரன் திகைத்து நிற்பதைச் சிவகாமி பார்த்து, ''என்ன யோசிக்கிறாய்? அதற்கு வசதியும் இப்போது நேர்ந்திருக்கிறது. புலிகேசி, கள்ளப் பிக்ஷு எல்லாம் இன்னும் இரண்டு நாட்களில் அஜந்தாவுக்குப் போகிறார்களாம். இப்போதெல்லாம் இங்கு கட்டுக் காவல் ஒன்றும் அதிகமாகக் கிடையாது. சுலபமாகத் தப்பிக் கொண்டு போகலாம். அப்படி என்னை அழைத்துப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால், இந்த வீட்டுக் கொல்லை முற்றத்தில் பவள மல்லிகைச் செடிக்கருகில் ஆழமான கிணறு ஒன்று இருக்கிறது. என் மேல் கருணை வைத்து அதில் என்னைத் தள்ளி விட்டுப் போய்விடு!.....'' என்று சொல்லிவிட்டு மீண்டும் விம்மத் தொடங்கினாள். (தொடரும்)



கல்கி காரியாலயத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் ஓவியர் திரு வினு, பகவான் ஆஞ்சநேயரின் திருவுருவப் படம் ஒன்றினை அழகுற வரைந்து எழிலுற அச்சடித்திருக்கிறார். ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் ஆதாரபூர்வமான வர்ணனைக்கு ஏற்பத் தீட்டப்பட்டுள்ள இந்த வண்ணப் படத்தின் முதல் பிரதியைக் கல்கி அதிபர் திரு சதாசிவம் - ஸ்ரீமதி எம். எஸ். தம்பதிக்குக் காணிக்கையாக்கி வணங்குகிறார் ஓவியர். இடது கோடியில் ஸ்ரீமதி வினு. படம் வேண்டுவோர் ஸ்ரீமதி சாவித்திரி வெங்கட்ராமன், 2, வேலாயுத முதலித் தெரு, சென்னை-34 என்ற விலாசத்துக்கு எழுதலாம்.



சிறப்பான அச்சுக்கும், அமைப்புக்கும் உரிய இரு தேசிய விருதுகள் ஸ்பான் இதழுக்கும், 'ஸ்பான் மாலை' வெளியீட்டுக்கும் வழங்கப் பெற்றுள்ளன. (ஸ்பான் இதழில் வெளியான சிறந்த கட்டுரைகளைத் தொகுத்து 11 இந்திய மொழிகளில் ஆண்டுக்கு ஒரு முறை வெளி வரும் நூல், ஸ்பான் மாலை.) நடப்பு ஆண்டுக்குரிய சான்றிதழையும் சேர்த்தால் ஸ்பான் ஏழு முறை இந்திய அரசின் விருதுகளைப் பெற்றுள்ளது. இரு முறை அனைத்திந்திய அச்சகச் சமூக விருதுகள் பெற்றிருக்கிறது.

புதுதில்லியில் நடந்த விருதுகள் வழங்கு விழாவில் துணை ராஷ்டிரபதி பி. டி. ஜத்தியிடமிருந்து இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தகவல் நிலையத் தலைமை அதிகாரி ஆல்பர்ட் இ. ஹெம்சிங் விருதுகளைப் பெற்றுக் கொள்கிறார்.



CMHPF-I-203-Tam



தண்ணீர்த்தந்தி

ஆசிரியர்: நீர்வளவன்

நடுநிலே நாளிதழ் • குழாய்-1 • பக்கெட்-2



"பம்புக்குக் கை கொடுப்போம் தண்ணீருக்குக் குரல் கொடுப்போம்!"

முதல்வர் அறிவிப்பு

கவிதை

"தண்ணீர்!"

தண்ணீர்! தண்ணீர்!
தண்ணீர்!
தண்ணீர் இல்லேயேல்
கண்ணீர்!
கண்ணீர்! கண்ணீர்!
கண்ணீர்!
கண்ணீர் போயின்
தண்ணீர்!

– தண்ணீர் தாசன்

சென்னே, தேதி:... தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க முதல்வர் சில யோசனேகளே 'நேற்று நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

"பம்புக்குக் கை கொடுப்போம்! தண்ணீருக்குக் குரல் கொடுப்போம்!" என்று முதல்வர் கங்கை கொண்டான் கூறிய போது, மக்கள் கை தட்டி ஆரவாரம் செய்தபோது கடலலேயின் பேரிரைச்சல் அங்கு கேட்டது.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மூன்று குடம் தண்ணீர் கொடுப்போம்!"

எதிர்க்கட்சித் தலைவர் அறிவிப்பு

சென்னே, தேதி..., நேற்றைய பொதுக் கூட்டத்தில் பேசிய முதல்வருக்குப் பிரிந்த கட்சித் தலைவரின் பதிலடி இது:

பம்புக்குக் கை கொடுப்போம் என முதல்வர் கூறுகிறார். யார் யாருக்குக் கை கொடுப்பது? தண்ணீருக்குக் குரல் கொடுக்க வேண்டுமாம். தண்ணீரே இல்லாதபோது குரல் கொடுத்துப் புண்ணியம் என்ன? முதல்வரின் இந்தப் பேச்சு குழந்தைத்தனமானது. ஆட்சியில் இருந்தால் எது வேண்டுமானாலும் பேசி விடுவதா?

தொடர்ந்து பிரிந்த கட்சித் தலைவர் காவேரிசாமி கூறினார்: நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எல்லோருக்கும் தினம் மூன்று குடம் தண்ணீர் கொடுப்போம். இது உறுதி. இதுவே தண்ணீரிலம்.

வரி விளம்பரங்கள்

தண்ணீர் அடித்துப் பிடித்துத் தர ஆட்கள் தேவை. ஆட்கள் மிகவும் பலமுள்ளவர்களாகவும், அநுபவம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

தண்ணீர் அண்டு பன்னீர் கம்பெனி
சென்னே-2

\- \- \-

எங்கள் கடையில் குழாய்கள் வாங்கினுல், ஒரு டம்ளர் தண்ணீர் இலவசம்.

பக்கெட்லால் குழாய் சன்ஸ்
பிரம்மபுரம்

\- \- \-

தண்ணீரை வீணுக்காமல் கிணற்றின் அருகே இருந்து கொண்டே உறிஞ்சிக் குடிக்கும்படி புதிய "ஸ்ட்ரா"க்கள் அறிமுகப்படுத்தப் படுகின்றன. இந்த ஸ்ட்ராக்கள் மிகவும் இலேசானவை, நீளமானவை. போன்: 6080

தண்ணீரில் கலப்படம் செய்ததாக நான்கு பேர் கைது!

காவிரி—

தண்ணீரில் கலப்படம் செய்ததாகக் கலக்குவான்(31), ஆற்றுவளவன் (36), நீர்கொண்டான் (42), பனிக்கட்டி (66), ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள்.

தண்ணீரைப் போல் உள்ள ஏதோ ஒரு திரவத்தை உண்மையான தண்ணீரில் கலந்ததாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி மேலும் புலன்விசாரணை நடக்கிறது.

—o—

தண்ணீர் கடத்தல் செய்பவர்களை அரசு கடுமையாகத் தண்டிக்கும்

முதல்வர் அறிவிப்பு

தண்ணீர் கடத்துவோரை அரசு நெருக்கடி கால சட்டத்தின்படி தண்டிக்கும் என முதல்வர் நேற்று நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

—o—

செயற்கை மழை

செயற்கை மழை பெய்யச் செய்ய ஸஹாரா பாலைவனத்திலிருந்து வந்துள்ள நிபுணர் புழலேரிக்கு மேலாக மேகமில்லாக் குறையைத் தீர்க்க வேண்டுமென்றார்.

"முதலில் செயற்கை மேகத் தயாரிப்பு நிபுணரை வரவழையுங்கள். அதன் பிறகு நான் என் கைவரிசையைக் காட்டுகிறேன்" என்றார் நிபுணர்.

துணுக்குகள்...

- தண்ணீர் பிடித்து வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தெருவில் 'கியூ' நின்றவர்.
- திரைகடல் ஓடி தண்ணீர் தேடு என்பது புதுமொழி.

தொகுப்பு : குமிழ்

பகீரதனுக்குக் கோயில்

சாஞ்சிப் பெரியவரின் அனுக்கிரகத்தோடு ஆரம்பித்திருப்பதால் ஆஸ்திக அன்பர்கள் பொருளுதவி செய்யக் கோருகிறோம்.

விலாசம்:
ஜலகண்டன்
தண்ணீர் இல்லாக்காடு

தண்ணீர் கட்டுப்பாடு நிலையம்:

ஒரு குடம் போதுமே!

"இரண்டு குடத்திற்கு மேல் எப்போதும் வேண்டாம்"



தண்ணீர் தொட்டி...

- சென்ற வாரம் 'தாகம்' கதை மிகவும் நன்றாக இருந்தது. படித்த எனக்கு நா வறண்டது. ஆசிரியருக்குப் பாராட்டுதல்கள். "தண்ணீர் போட்டானின்" சிறுகதைகளை அடிக்கடி வெளியிடவும்.

வாட்டர்பேட்
.... ஜலராம்

- தண்ணீர் பத்திரிகை மிகவும் போரடிக்கிறது. ஆசிரியரைக் குற்றாலம் நீர்வீழ்ச்சியில் மூழ்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிபுரம்
.... ஆற்றுச்சாமி

[குற்றாலத்தில் தண்ணீர் இல்லாததால், ஆற்றுச்சாமியின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாததற்காக வருந்துகிறேன்! —ஆசிரியர்]



வட்டம் : மழை ஏன் பெய்யலே?

மாவட்டம் : வானத்திலே இருக்கிற மேகம் வறண்டு போயிடுச்சாம்.

கற்பனை: உமாகாந்தன்
தயாரிப்பு: நம்பி

முன்னொரு காலத்தில் வளமான ஒரு நாட்டினை அழகுக்குப் பேர் போன அரசி ஒருத்தி ஆண்டு வந்தாள். அவளிடம் ஒரு மந்திரக் கோலும் இருந்தது.

ஒருநாள் அரண்மனை வாசலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணி அடித்தது. திருமகள் தேவி அரசுக் கட்டிலினின்றும் கீழே இறங்கினாள். யார் பொழுது புலருவதற்குள் மணியை அடிக்கிறார்கள் என்று யோசித்துக் கொண்டே சபைக்குள் பிரவேசித்தாள் அரசி.

அவளுடைய அந்தரங்க மந்திரி பிரதானிகள் அதற்குள் அங்கு கூடிவிட்டனர். அரசியைக் கண்டதும் எழுந்து நின்றனர்.

அரசி அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டு அரியாசனத்தில் உட்கார்ந்தாள்.

"மணியை அடிப்பவர் யார்?"

"ஒரு பசுங் கன்று."

"அழைத்து வாருங்கள்."

கண்களில் நீர் சோர ஒரு பசுங் கன்று உள்ளே வந்தது.

"பசுங்கன்றே, ஏன் அழுகிறாய்? உன் குறை என்ன?"

"எங்களுக்குப் பால் இல்லாமல் ஒட்டக் கறந்து விடுகிறார்கள் சொந்தக்காரர்கள். நியாயம் வழங்க வேண்டும், அரசி."

அரசி யோசித்தாள். மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மந்திரக் கோலை மூன்று தடவை தட்டினாள். ஒரு புதிய கருத்து உதயமாயிற்று. அவள் முகம் பிரகாசம் அடைந்தது.

"சரி...! இனிமேல் அரண்மனைக் காவலாளிகள்தாம் பசுக்களைக் கறக்க வேண்டும். பாலை மொத்தமாகக் கறந்து, கன்றுகளுக்கு இத்தனை, சொந்தக்காரர்களுக்கு இத்தனை என்று அவர்கள் விநியோகம் செய்வார்கள். சொந்தக்காரர்கள் இனி உங்களை ஏமாற்ற முடியாது" என்றாள் திருமகள் தேவி.

மனச் சமாதானம் அடைந்து சென்றது கன்று.

இன்னொரு நாள். அரசி பூஜை செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது ஆராய்ச்சி மணி ஒலித்தது.

அரசி பூஜையைப் பாதியிலே நிறுத்திவிட்டு அரச சபைக்குள் நுழைந்தாள். மந்திரி பிரதானிகள் காத்துக் கொண்டிருந்தனர்.

"யார் மணியை அடிக்கிறார்கள்?"

"அதே பசுங் கன்று."

"கூப்பிடுங்கள் அதை.... இப்பொழுது என்ன தகராறு?"

கன்று உள்ளே வந்தது.

"நியாயந்தான் வழங்கிவிட்டேனே? மறுபடியும் எதற்காக வந்து மணியை அடிக்கிறாய்?"

"நீங்கள் நியாயம் வழங்கினீர்கள், உண்மைதான். ஆனால் இப்பொழுதும் எங்களுக்குப் பால் கிடைப்பதில்லை."

"ஏன்?"

"கறக்கும் பாலை அரண்மனைக் காவலாளிகளே எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். பசுவின் சொந்தக்காரர்களுக்கும் அவர்களுக்குமே இதில் பங்கு இருக்கிறதே தவிர, எங்களுக்குப் பால் ஒதுக்கப்படுவதே இல்லை."

அரசி மந்திரக் கோலை, மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே, மூன்று தடவை தட்டினாள். ஒரு புதிய கருத்து உதயமாயிற்று. அவள் முகம் பிரகாசம் அடைந்தது.

"நீங்கள் பால் குடித்துத்தான் வாழ வேண்டும் என்பது என்ன அவசியம்? நிறையப் புல் சாப்பிடுங்கள், வைக்கோல் தின்னுங்கள்.... அரண்மனைக் காவலர்கள் மூலம் இதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் அரசி.

மற்றொரு நாள் ஆராய்ச்சி மணி ஒலித்தது.

அரசி அரச சபைக்குச் சென்றாள். அவளுடைய மந்திரி பிரதானிகள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.

"மணி அடிப்பவர் யார்?" என்றாள் அரசி.

"ஒரு நாய்....."

"கூப்பிடுங்கள், அதை."



நாய் உள்ளே வந்தது.

"நாங்கள் குரைக்கக் கூடாது என்கிறார்கள் அரண்மனைக் காவலர்கள்."

"ஆமாம்.... உங்கள் குரைப்பைக் காது கொண்டு கேட்க முடியவில்லை. நான்தான் இவ்வாறு கட்டளையிட்டேன்..." என்றாள்.

"நாங்கள் குரைக்காவிட்டால் எங்களை நாய் என்று யாரும் சொல்லமாட்டார்களே?" என்றது நாய்.

"வாலை ஆட்டுங்கள், போதும். குரைப்பு எதற்கு?" என்றாள் அரசி.

"எப்பொழுதுமே வாலை ஆட்டிக் கொண்டிருக்க முடியுமா ?" என்றது நாய்.

"போதும்" என்றாள் அரசி.

இதற்குப் பிறகு கொஞ்ச நாட்கள் ஆனவுடன் ஒரு நாள் அரசி யோகாசனம் செய்து கொண்டிருந்தபோது ஆராய்ச்சி மணி அடித்தது.

அரசிக்குக் கோபம் சோப்மாக வந்தது. தான் எல்லோருக்கும் சர்வ நியாயம் வழங்கியிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் போது, இந்த ஆராய்ச்சி மணி அடிக்கடி ஒலிப்பது அவளுக்கு அளவற்ற எரிச்சலைத் தந்தது. அவள் மிகுந்த சினத்துடன் அரச சபைக்குச் சென்றாள்.

அங்கு மந்திரி பிரதானிகள் கைகளைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்:

"யார் மணியை அடிக்கிறார்கள் ?"

"ஒரு கழுதை."

"கூப்பிடுங்கள், அதை" என்றாள் அரசி.

கழுதை அழுது கொண்டே உள்ளே வந்தது.


"என்ன வேதனை, உனக்கு? அழுகையை நிறுத்திவிட்டுச் சொல்" என்றாள் அரசி.

"நாங்கள் ஊராருடைய அழுக்கு மூட்டையைச் சுமந்து சுமந்து மாளவில்லை" என்றது கழுதை.

"ஊரில் உள்ளவர்கள் வெள்ளையாகத் துணி உடுத்த வேண்டும் என்றால் நீங்கள் தானே பொதி சுமக்க வேண்டும்?" என்றாள் அரசி.

"அதற்கு எத்தனை பொதி சுமப்பது ? கணக்கே கிடையாதா?" என்றது கழுதை.

ஆராய்ச்சி மணி



- பராந்தகன் -



"பக்கத்து நாட்டில் கழுதைகள் எத்தனை பொதி சுமக்கின்றன, தெரியுமா? நீங்கள் சுமப்பதைப் போல் இரண்டு மடங்கு" என்றாள் அரசி.

"அந்த ஊர்க் கழுதைகளுக்கு நிறையத் தீனி கிடைக்கிறது. வாட்டசாட்டமாக இருக்கின்றன. எலும்பும் தோலுமாக நாங்கள் ஆகிவிட்டோம்..... எப்படிப் பொதி சுமக்க முடியும்?" என்றது கழுதை.

கழுதை வழக்காடிக் கொண்டே போவது திருமகள் தேவிக்குப் பிடிக்கவில்லை. அவள் பொறுமையின்மை நாடறிந்த செய்தி.

அரசி மந்திரத்தை ஜபித்துக்கொண்டே மூன்று தடவை மந்திரக் கோலைத் தட்டினாள்.

ஒரு புதிய கருத்து உதயமாயிற்று. அவள் முகம் பிரகாசம் அடைந்தது.

"மிருகங்களுக்குப் பேசும் சக்தி இருப்பதால்தானே அவை இப்படி வாதாடுகின்றன. இனி அவை ஊமைகளாகவே இருந்துவிட வேண்டும்" என்று சாபமிட்டாள் திருமகள் தேவி.

அன்று முதல் மிருகங்கள் பேசும் சக்தியை இழந்தன.

கழுதை ஏதோ சொல்ல வந்து பேச முடியாமல் கனைக்க ஆரம்பித்தது.

"விரட்டுங்கள் அதை, வெளியே!" என்றாள் அரசி, கோபத்துடன்.

விரட்டப்படும் வரை காத்திராமல் கழுதை தானாகவே வெளியே ஓடிவிட்டது.

தொன்று தொட்டு அரண்மனையில் இருந்துவந்த ஆராய்ச்சி மணிக்கு இதைப் பார்த்ததும் கோபம் கோபமாக வந்தது. இதற்குமுன், எத்தனை அரசர்கள் தனக்கு மதிப்பளித்திருக்கிறார்கள் என்று நினைத்ததும், அரசிக்குப் புத்திமதி சொல்ல வேண்டும் என்று அதற்குத் தோன்றிற்று. அதுவே வேகமாக ஒலிக்கத் தொடங்கியது.

அரசி கோபத்துடன் கத்தினாள்.

''யார் மணி அடிக்கிறார்கள்? யாரங்கே?''

பார்த்துவிட்டு வந்த பணியாள் சொன்னான்: ''யாருமில்லை.... ஆராய்ச்சி மணி தானாகவே வேகமாக அடித்துக் கொண்டிருக்கிறது.''

''அது எப்படித் தானாக அடிக்கும்....? போய்ச் சரியாகப் பார்த்துவிட்டு வா, முட்டாள்.''

அவன் மறுபடியும் போய்ப் பார்த்துவிட்டு வந்து சொன்னான்: ''சத்தியமாய் ஒருவரும் இல்லை.... அதுவே தானாகவே அடிக்கிறது.''

''அந்த மணியைப் பிடுங்கி எறி....'' என்று கத்தினாள் அரசி. அப்பொழுதுதான் அவளுக்கு நிம்மதியாக இருந்தது.



''நான் நன்றியுள்ள பிராணி என்கிறது என்னைப் பொறுத்தவரை நூத்துக்கு நூறு உண்மை.''

'' எதை வெச்சுச் சொல்றே அப்படி ?''

''இது வரைக்கும் என் நாயை நாலு பேர்களுக்கு வித்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் வித்த மறு நாளே என்னைத் தேடி வந்துவிட்டதே!''

-- சரஸ்வதி பஞ்சு



''சார், ஒரு நூறு ரூபாய் இருந்தால் கொடுக்கணும். ஒரு புத்தகம் வெளியிடப் போகிறேன்.''


''என்ன புத்தகம் ?''

''பணக்காரனாக பத்து வழிகள் என்றப் புத்தகம்.''

''பணக்காரனாக வழி தெரிந்தும், ஏன் கடன் வாங்குகிறாய் ?''

''அந்தப் பத்து வழிகளில் இதுவும் ஒன்று !''

சம்பத்குமாரி



டிபன் காலை 7 முதல் 10 வரை
சாப்பாடு 10 முதல் 3 மணி வரை
மாலை டிபன் 3 மணி முதல் இரவு 7 வரை
இரவு சாப்பாடு இரவு 7 முதல் 10 வரை

இப்படி அறிவிப்புப் பலகை போட்ட ஹோட்டலில் தங்க வந்த ஒருவர் கேட்டது.

''அப்பமன்று நான் எப்ப ஊரைச் சுத்திப் பார்க்கறது ?''

ஜோக்ஸ் - பாபு



பகவத்கீதையை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழ் இந்தியாவில் தலைமை அதிகாரியாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ். புத்தகத்தை வெளியிட கம்பெனி அவருக்குச் செலவுப் பணம் கொடுக்க மறுத்துவிட்டது. தாமே செலவு செய்து பிரசுரித்த அவர் அந்தப் புத்தகப் பிரதி ஒன்றின் மேல் எழுதி வைத்துள்ள குறிப்பு - ''பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்றோ ஒரு நாள் அழிந்து போகலாம். கீதைக்கு என்றுமே அழிவில்லை !''

திரு சம்பத் கூறியது
தகவல்: ஜெயஸ்ரீ விசுவநாத்

ஜெய்சங்கரின் நிபந்தனை !



திறப்பு விழாக்களுக்கு வரவேண்டும் என்றால் ஜெய்சங்கர் இப்போது போடும் நிபந்தனை என்ன தெரியுமா ?

ஜவுளிக் கடைத் திறப்பு விழா என்றால் துணிகளும், பான்சி ஸ்டோர்த் திறப்பு விழா என்றால் பிளாஸ்டிக் பாத்திரங்களும் ஹோட்டல் திறப்பு விழா என்றால் உணவு வகைகளும், பழங்களும் தர வேண்டும். அவற்றைச் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள (Mercy Home) 'கருணை இல்லத்துக்கு' அப்படியே வழங்கி விடுகிறார் !

கேட்டது: பாலகுமார்

பதினேழு மாடி சாம்பல்!



1. எரிந்து கொண்டிருக்கும் எல்.ஐ.ஸி. கட்டிடம்
2. தீயணைப்புப்படை இயக்குநர் திரு ரத்தினசாமி.
3. திரு வாசுதேவன்.

சென்னை நகருக்கே பெருமையளித்துக் கொண்டு 174அடி உயரத்துக்கு நெடிதுயர்ந்து நிற்கும் எல். ஐ. சி. கட்டடம் இன்று தீக்குளித்துப் புதுப் புகழ் தேடிக் கொண்டு விட்டது!

முதல் மாடியிலிருந்து மேலே பன்னிரண்டாவது மாடி வரை உள்ள அலுவலகங்கள் அனைத்தும் கருகிவிட்டன. கால் வைக்கும் இடமெல்லாம் உடைந்த கண்ணாடித் துண்டுகள் ; எரிந்து கருகிய காகிதக் குவியல்கள், கழன்று தொங்கிக் கொண்டிருக்கும் இரும்புத் தகடுகள் இத்யாதி. சுவர்களில் சில இடங்களில் கால் அங்குல அகலத்துக்கு மேல் வெடிப்புக்கள் !

''தீயணைக்கும் படையினர் முப்பது ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தையும் கைவசம் உள்ள உபகரணங்களையும் நூறு சதவிகிதம் இக்கட்டடத்தில் பரவிய தீயை அணைப்பதில் கையாண்டனர். தீயணைக்கும் படையினரின் திறமைக்கு இது ஒரு சவாலாகவே இருந்தது. 'என் சர்வீஸில் இவ்வளவு பெரிய தீ விபத்து நிகழ்ந்ததே இல்லை. தரை மட்டத்துக்குக் கீழே உள்ள தளத்தில் தஸ்தாவேஜுகளும் கம்ப்யூட்டர்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடத்தை இணைக்கும் அடித்தளப் பாதையில் புகையும் வாயுவும் சூழ்ந்துவிட்டன. உள்ளே நுழைய முடியாத அளவுக்குச் சூடு வேறு. இந்த இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் முகமூடி அணிந்து தீயணைப்புப் படையினர் அந்தப் பாதைக்குள் புகுந்து தீயை அணைத்து முக்கியமான தஸ்தாவேஜுகளையும் கம்ப்யூட்டர்களையும் இயன்ற அளவு காப்பாற்றி உள்ளனர். முகமூடி அணிந்து உட்புகுந்த தீயணைப்புப் படையினருக்கு மூச்சு விடுவதற்கு உதவும் வகையில் வெளியிலிருந்த தீயணைப்புப் பணியாளர்கள் நல்ல காற்றைக் குழாய்களின் மூலம் முகமூடிக்கு 'பம்ப்' செய்தவண்ணம் இருந்தனர். மெக்கானிகல் ஏர் சர்க்குலேட்டரை இதற்குப் பயன்படுத்தினோம்'' என்கிறார் தீயணைப்புப் படை இயக்குநர் திரு ஐ. ரத்தினசாமி.

இயக்குநர் ரத்தினசாமி மேலும் கூறிய ஒரு விஷயம் நம்மைத் திடுக்குறச் செய்கிறது. ''இதே கட்டடம் ஒரு குடியிருப்புப் பகுதியாக இருந்திருந்தாலோ, அல்லது இதே தீ விபத்து அலுவலக நேரத்தில் நிகழ்ந்திருந்தாலோ அதன் பயங்கர விளைவுகளைக் கற்பனை கூடச் செய்ய முடியாது !''

''இத்தகைய விபத்து மீண்டும் எங்குமே தோன்றவே வேண்டாம். ஒருகால் பல மாடிக் கட்டடத்தில் விபத்து நிகழ்ந்தால், உயிர்ச் சேதம் ஏற்படாமல் காக்க என்ன வழி?''

திரு ரத்தினசாமி கூறுகிறார்: '' உள்ளே இருப்பவர்கள் சுலபமாகத் தப்பி ஓட வழி வேண்டும். கட்டடத்துக்கு வெளியே படிக்கட்டுக்கள் அமைந்திருந்தால் புகை, சூட்டிலிருந்து தப்பி ஓடுவது ஓரளவு எளிது. ஆபத்து குறைவு. இதுபோன்ற பல மாடிக் கட்டடங்களுக்கு வெளிப் படிக்கட்டுக்கள் இன்றியமையாதவை. வெளிப்புறப் படிக்கட்டுகள் இருந்தால் கட்டட அமைப்பின் அழகு கெட்டுவிடும் என்று கட்டட அமைப்புக் கலைஞர்கள் கூறினால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.''

ஜூலை 13ந் தேதி எல். ஐ. சி. கட்டடத்தை நோக்கிச் செல்லும்போது, அண்ணா சாலையின் அந்தப் பகுதியில் கலைக் கல்லூரியிலிருந்து வெலிங்டன் சினிமா வரை, ஊரடங்குச் சட்டம் அமுலிலிருப்பதுபோல் அமைதி நிலவுகிறது. போக்குவரத்து, ஜன நடமாட்டம் ஏதுமில்லை. வெறிச்சோடிக் கிடக்கிறது.

ஏழாவது, எட்டாவது மாடிகளில் மட்டும்தான் லீவரின் அலுவலகங்கள் செயல்பட்டு வந்துள்ளன. மற்ற மாடிகளில் எல்லாம் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அலுவலகங்கள். ஒளிந்துள்தான் லீவர் அலுவலகம் அமைந்துள்ள ஒரு மாடியில் பால் பவுடர் தரையில்

எரிந்து வெண் சாம்பல் குவியலாகக் காட்சி அளிக்கிறது. இந்த இரு மாடிகளிலிருந்தும் வெளிப்பட்ட புகை மட்டும் நீலம் கலந்த பச்சை வண்ணமாக இருந்ததாம். மற்ற மாடிகளிலிருந்து வெளியேறிய புகை கறுப்பாகவும் அடர்த்தியாகவும் இருந்ததாம்.

''தீயை அணைக்க ஏணிகளைப் பயன்படுத்த முடிந்ததா ?'' என்று தீயணைப்புப் படையினிஷனல் அதிகாரி திரு ஜெயபெருமாளைக் கேட்கிறேன்.

''முடியவில்லை. ஏணிகளின் உயரம் நூறு அடிகள்தாம். அதன் மூலம் எண்பது அடி உயரம் மட்டுமே செல்ல முடியும். உட்புறம் தீயை அணைக்கப் படிக்கட்டுகளின் வழியே செல்வதுதான் உகந்ததாக இருந்தது. பின்புறம் இருக்கும் புல்வெளியில் நின்றவாறு எங்கள் இயக்குநரே நடவடிக்கைகளை இயக்கிக் கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமை இரவு எட்டு மணியிலிருந்து, தீயை முற்றும் அணைத்து முடிக்கும் வரை இருபத்திரண்டு மணி நேரம் நாங்கள் யாருமே சாப்பிடவில்லை'' என்கிறார் திரு ஜெயபெருமாள்.

''படையினருக்குக் காயம் ஏற்பட்டதா ?''

''பலர் காயம் அடைந்துள்ளனர். தீப்புண்ணும் ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் யாரும் பொருட்படுத்தவில்லை'' என்று கூறும் இளைஞர் திரு ஜெயபெருமாளின் வலது கையிலேயே சில தீப் புண்கள், காயங்கள் இருந்ததைக் கவனித்தேன்.

நடவடிக்கைகளை விளக்குகிறார் திரு ஜெயபெருமாள்:

''கட்டடத்தின் தென்புறத்தில் தீ ஜுவாலை விட்டு எரிந்தது. வடபுறத்துச் சாளரங்களின் வழியே புகை வெளி வந்து கொண்டிருந்தது. ஒரே சமயத்தில் இரு பக்கங்களிலும் தீப் பிடித்திருந்தால் நிலைமை மிகவும் மோசமாக இருந்திருக்கும். வெடித்துச் சிதறிய திக்கோணங்கள் வேகமாகச் சிறி வெளிப்பட்டன. ஒரு சீனியர் ஆபீசர் முன்புறமும், இன்னொருவர் பின்புறமும் நின்று நடவடிக்கைகளுக்கு உரிய யோசனை கூறிக் கொண்டிருந்தனர். மூன்று மாடிகள் வரை சீனியர் ஆபீசர்கள் மேலே ஏறிச் சென்று தீ பரவாமல் தடுக்க முயன்றனர். இக்கட்டடத்தின் தென் பகுதியில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் பெரிய அலுவலகம். வட பகுதியில் பெட்ரோல் பங்க். இவ்விரு கட்டடங்களுக்கும் தீ பரவாமல் தடுக்க வேண்டியது எங்கள் முதல் கடமையாக இருந்தது. இவ்விரு கட்டடங்களின் மீதும் ததும்ப நீரைச் செலுத்தி ஈரமாக்கி விட்டோம். மாடிப் படிக்கட்டுகளுக்கு ஏறும் 'கொலாப்ஸிபிள் கேட்' பூட்டியிருந்தது. அதை உடைத்து உள்ளே நுழைந்தோம். தீயணைப்புப் படையினர் நாலாவது மாடிக்கு வந்து சேர்ந்த போது ஐந்தாவது மாடியிலும் தீப்பிடித்திருந்தது. நாலாவது மாடியிலுள்ள தீயை முதலில் அணைப்பதா, 5வது மாடித் தீயை அணைப்பதா? மேலும் விரிவாகத் தீப் பரவி, திக்கோணங்கள் வெடித்து நாலாபுறமும் சிதறினால் ஆபத்து அதிகமாகிவிடும். எதிர்ப்புறம், அதாவது அண்ணாசாலையின் மேற்குச் சாரியில் அமைந்துள்ள 'அமால்கமேஷன்ஸ்' ஷோரூமில் சுமார் 40 லட்சம் பெறுமானம் உள்ள பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எதிர்ச்சாரிக்குத் தீ பரவாமல் தடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.'' இவ்வாறு அப்போது தோன்றிய பிரச்னைகளை விளக்குகிறார் ஜனாதிபதியின் 'மெடல்' வாங்கிய அந்த இளம் அதிகாரி.

வெள்ளிக்கிழமை இரவு பிடித்த தீயின் விளைவாக எல்.ஐ.சி கட்டடத்தின் மேல் மாடிகளில் உள்ள பூட்டப்பெற்ற இரும்பு பீரோக்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணி அளவிலும் நல்ல சூடாக இருந்தன. ஏன், சுவர்களும்கூடச் சில இடங்களில் சுடத்தான் செய்தன.

எல்.ஐ.சி. கட்டடத்துக்கு மேற்கே உள்ள கார் கேர் சென்டர் உரிமையாளர் திரு டி. வாசுதேவன் கூறுகிறார் :

''இரவு எட்டு மணிக்கு மேல் இருக்கும். எல்.ஐ.சி.யிலிருந்து கறுப்புப்புகை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இங்குள்ள எனது பெட்ரோல் டேங்கில் 4000 லிட்டர் பெட்ரோல் இருக்கும். பெட்ரோலை வெளியே எடுத்து விடலாமா என்று ஒரு யோசனை தோன்றியது. ஆனால் அப்படி ஏதும் செய்யாமலிருந்தது நல்லதாயிற்று. பெட்ரோலை வெளியே எடுக்கும் போது அந்த 'வேப்பர்' தீப்பற்றினால்.....? அதனால்தான் பெட்ரோலை வெளியில் எடுக்கும் யோசனையைக் கைவிட்டோம். தீயணைப்புப் படையினர் வந்ததும் இந்த இடத்தில் நீரைப் பாய்ச்சி ஈரமாக்கினர். ஒருவித வெள்ளை நுரையையும் பெட்ரோல் டேங்கின் மீது தெளித்துவிட்டனர். இரவு நான் தூங்கவேயில்லை. தீயணைப்புப் படையினர், போலீசார், எல். ஐ. சி. ஆபீசர்கள், பத்திரிகைக்காரர்கள் அனைவரும் இங்குள்ள தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டனர். எவ்வளவோ எஸ்.டி.டி. கால்கள். இதற்கெல்லாம் ஓரளவு பின்னால் பணம் கொடுத்துவிடுவார்கள் என்று நம்புகிறேன். எப்படியும் தொலைபேசியின் உபயோகத்தை இவர்களுக்கெல்லாம் வழங்கி உதவ முடிந்ததில் எனக்கும் சேவை செய்த திருப்தி.''

மாலை ஆறு மணி அளவில் அங்கு வந்த ஓர் ஆயுள் இன்ஷுரன்ஸ் அதிகாரியிடம், ''இக்கட்டடம் இன்ஷூர் செய்யப்பட்டுள்ளதா?'' என்று கேட்கிறேன். ''ஆமாம், ஓரியண்டல் இன்ஷூரன்ஸில் இது இன்ஷூர் செய்யப்பட்டுள்ளது'' என்கிறார் அவர். சேதம் எவ்வளவு என்பது பற்றித் திட்டவட்டமாக யாராலும் எதுவும் கூற முடியவில்லை. என்னதான் கட்டடம் இன்ஷூர் செய்யப்பட்டிருந்தாலும் பொது இன்ஷூரன்ஸும் இன்று அரசுடைமை ஆகிவிட்டபடியால் நஷ்டம் அனைத்தும் பொது மக்களுக்கே.

யதேச்சையாக நடந்த விபத்து இல்லை என்றும் திட்டமிட்ட வேலையே என்றும் முதல்வர்கூடக் கருதுகிறார். யாருக்கு யார் மீது என்ன கோபமோ ? அது போக, நகரில் புதிது புதிதாக உயரும் பல மாடிக் கட்டடங்களில் தீ விபத்து நேருமானால் அதற்குரிய பாதுகாப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதோடு தீ அணைப்புப் படையையும் நகரின் புதிய சூழலுக்கு ஏற்ப நவீனமாக்கிக் கொள்வது நல்லது.

— பாணன்

□ பிரேம்சந்த் புகழ்பெற்ற ஹிந்தி எழுத்தாளர். சிரிப்பதற்காகவே ஒரு சங்கம் அமைத்தார். சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தினசரி ஏதாவது ஒரு வேடிக்கையான விஷயம் சொல்ல வேண்டும்.

□ உலகின் பல பாகங்களில் உள்ளவர்கள் 'ஷெர்லக் ஹோம்'ஸின் பெயரில் பல சங்கங்களைத் தோற்றுவித்து உள்ளனர். 'ஷெர்லக் ஹோம்ஸ்' உண்மையிலேயே வாழ்ந்து வீரதீர சாகசங்கள் புரிந்த ஒரு துப்பறியும் மேதையென இச்சங்க உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

□ 'இடுக்கண் வருங்கால் அழுக' என்பதனை விதியாகக் கொண்ட ஒரு சங்கம் நியூயார்க்கில் உள்ளது. துன்பத்தில் உழலும் சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடுவார்கள். சங்க மையத்தில் அமைந்த மண்டபத்தில் அனைவரும் ஒரே சமயத்தில் விக்கி விக்கி அழுவார்கள்.

□ பதின்மூன்று என்ற எண் துரதிர்ஷ்டமானது என்பது மேல்நாட்டார் நம்பிக்கை. இம் மூட நம்பிக்கையை ஒழிக்கப் 'பதின்மூன்றும் சங்கம்' லண்டனில் உருவாகியுள்ளது.

□ ஊரையும் கண்ணையும் கெடுக்கும் சுவரொட்டிகளைக் கிழித்தெறிய ஒரு சங்கம் பம்பாயில் தோன்றியுள்ளது. இந்தச் சங்க உறுப்பினர்களின் வேலை சுவரொட்டிகளைக் கிழிப்பது.

□ பாராளுமன்றத்தில் உள்ள பருமனானவர்களை ஒன்றுகூட்டிப் பீமசேனன் சங்கம் ஆரம்பித்தார் பிலுமோடி.

□ கடல் பாசியில் அல்வா செய்யலாம் என்ற அரிய யோசனை கூறிய அரசியல் கட்சியை நாம் மறந்துவிட்டோம். 'அல்வா' செய்வது பற்றிய யோசனையை அக்கட்சி மறந்துவிட்டது. ஆனால் இத்தாலியில் உள்ள சில மேதைகள் பாசியின் மகிமையை உணர்ந்தார்கள். 'கடல்பாசி உடலுக்கு நல்லது' என்னும் கொள்கையைப் பரப்பச் சங்கமொன்று அமைத்தார்கள். 'கடல் பாசி அன்பர்கள் கழகம்' என்பது இதன் பெயர்.

□ செந்தலையர்கள் ஒன்று சேர்ந்து 'செந்தலையர் சங்கம்' அமைத்துள்ளனர். வழுக்கைத் தலையர்கள் ஒன்றுகூடி 'வழுக்கைத் தலையர்கள் சங்கம்' ஏற்படுத்தியுள்ளனர். அவ்வளவு ஏன்? பெரிய அளவு தொப்பி தேவைப்படும் பெருந்தலையர்கள் சங்கம் ஸ்பெயினில் உண்டு.

□ 'புட்டி ஸைப்!' என்ன ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்? கடலில் பிரயாணம் செய்பவர்கள், கண்ணாடி புட்டிக்குள் கடிதங்களை (ஏன், சில சமயங்களில் உயில்களைக்கூட) அடைத்து, கடலில் மிதக்க விடுவார்கள். பல நாடுகளில், பல இடங்களில் இவற்றைக் கண்டெடுத்தவர்கள் நிறுவிய சங்கமே 'புட்டி ஸைப்...' இந்தச் சங்கம் கலிபோர்னியாவில் உள்ளது.

□ கணவனிடம் அடிபடும் மனைவிமார்கள் ஒன்று கூடி ஒரு சங்கம் அமைத்தார்கள். அச் சங்கத்தின் பெயர் 'கணவனிடம் அடிபடுவோர் சங்கம்.' டகோடாவில் உள்ளது இச்சங்கம்.

□ அமெரிக்காவில் சாவிக் கழகங்கள் உள்ளன. இதன் உறுப்பினர்கள் கணவன்-மனைவியாக இருக்கவேண்டும். சாவிகளை மாற்றிக் கொள்வதின் மூலம், கணவன் — மனைவி ஜோடிகளை மாற்றிக்கொள்ளும் அநாகரிக சங்கம் இது.

□ கழுதையின் தளராத உழைப்பும், பொறுமையும் நாட்டுக்குப் பாடுபடும் நல்லவர்களுக்கு வேண்டும் என்பதனை வலியுறுத்த மைசூரில் ஒரு சங்கம் தோன்றியுள்ளது. இந்தச் சங்கத்தின் பெயர் 'கழுதைகள் பொழுது போக்குச் சங்கம்'.

□ பிறவியிலேயே இடதுகையால் எழுதுபவர்களை ஒன்று படுத்த 'இடது கையால் எழுதுவோர் சங்கம்' ஒன்று கோவையில் அமைக்கப்பட்டுள்ளது.

□ எடுத்ததற்கெல்லாம் சங்கங்கள் அமைப்பதை எதிர்த்து ஜெர்மனியில் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அச்சங்கத்தின்பெயர் 'கடைசிச் சங்கம்' என்பதாகும். சங்கங்கள்பற்றிய கட்டுரைக்கும் இதுவே கடைசி விஷயம்!

— மாமல்லன்





பொன்னியின் புதல்வர்

சுந்தா

52. முன்னோடி அனுபவங்கள்

...... மணி ஓசை வரும் முன்னே

நாட்டியக்காரி தேவி ஆங்கிலத்தில் அவள் ''தேவி தி டான்ஸர்.'' ஆனந்த விகடனின் வெற்றியைக் கண்டு, எஸ். எஸ். வாசன் தொடங்கி நடத்திய ''மெர்ரி மாகஸின்'' என்ற ஆங்கில சஞ்சிகையின் இதழ்களில் அவள் தொடர்ச்சியாக ஆடிக் கொண்டிருந்தாள். அந்தத் தொடர்கதையின் ஆசிரியர், ''தேஸ்வி'' என்ற புனைபெயர் பூண்ட டி. சுந்தரவரதன். கல்கி கேட்டுக் கொண்டதன் பேரில், ''தேசு'' என்ற மாற்றுப் பெயருடன் ஆனந்த விகடனுக்கும் எழுதினார்.

கல்கியும் தேசுவும் நெருங்கிய நண்பர்களானார்கள். அவர்களுடைய நட்புக்கு அடிப்படை, இருவரும் ஒரே விதமாய் எழுத்துமீது மோகமும் புத்தகங்கள் மீது பைத்தியமும் கொண்டிருந்தமையாகும். கல்கியைப் போலவே தேசுவும் கல்லூரிப் படிப்பின்றியே நிறையக் கற்றுத் தேர்ந்தவர்.

ஒருநாள் மாலை அவர்கள் அபூர்வமான சில புத்தகங்களைத் தேடி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையத்துக்குச் சென்றார்கள். அங்கே நுழை வாயிலில் இருந்த பதிவுப் புத்தகத்தில், ''டிக்ரி'' என்ற பத்தியில் பட்டம் எதையும் குறிப்பிட முடியாதவர்களுக்கு உள்ளே செல்ல அனுமதி கிடையாது என்பது தெரிய வந்தது. ஏமாற்றத்துடனும் கோபத்துடனும் இருவரும் பின்வாங்கிக் கடற்கரை மணலில் போய் உட்கார்ந்தார்கள்.

''அந்தப் பத்தியில் தொண்ணூற்று எட்டு பாயிண்ட் ஆறு என்று என் உடல் சூட்டையே எழுதலாமா என எண்ணினேன்'' என்று தேசு சொன்னார்.

''கூட ஐந்தைச் சேர்த்து நான் எழுதி இருப்பேன்'' என்றார் கல்கி.

இருவரும் சிரித்து விட்டுத் தத்தம் சிந்தனையில் ஈடுபட்டனர். தேவியை அடுத்தாற்போல் எப்படி ஆட்டுவிக்கலாம் என்பதைப் பற்றித் தேசு யோசித்தார். கல்கியோ, சற்றுமுன் அடைந்த அனுபவத்தைப் பற்றி என்ன எழுதலாம் என்று யோசித்தார்.

அடுத்த ஆனந்தவிகடன் இதழில், ''நுழையாதே'' என்ற தலைப்புடன், அந்த அனுபவத்தை எடுத்துச் சொன்ன அவருடைய கட்டுரை ஒன்று வந்தது. அதன் இறுதியில் :

> நமது காலத்துப் பெரியோர்களான சென்னை சர்வகலாசாலையார், ஜனங்களை பி.ஏ.க்கள் என்றும் பி.ஏ.க்கள் அல்லாதார் என்றும் இரண்டு ஜாதியார்களாகப் பிரித்திருக்கிறார்கள். இரண்டாவது ஜாதியார், தாழ்ந்த சாதியார் மட்டும் அல்லர்; தீண்டத்தகாதவர்களும்கூட. சர்வகலாசாலையின் ஆதீனத்தில் உள்ள ஓர் ஆலயத்திலே அவர்கள் நுழையக் கூடாது... (ஆ. வி. 20-7-33)

அது, பட்டப் படிப்பு பற்றியும் உடன் காலக் கல்வி நிலை பற்றியும், சிந்தனையைத் தூண்டும் விதத்திலும், சீர்திருத்த நோக்கத்துடனும், கல்கி பின்னர் எழுதிய பல கட்டுரைகளுக்கு முன்னோடியாய் அமைந்தது.

அந்த அனுபவத்துக்குப் பிறகு, கல்கி, பட்டதாரிகள் அல்லாதாரும் நுழையக் கூடிய கனிமாரா நூலகத்தைப்



பயன்படுத்திக் கொண்டார். ஆங்கிலப் புத்தகங்கள் சம்பந்தப்பட்ட வரை, எங்கேனும் எப்படியேனும் அவை கிடைக்கும். அவசியமானால் விலைக்கு வாங்கிக் கொள்ளவோ பல புத்தகக் கடைகள் இருந்தன.

கல்கியின் சிந்தனை, தமிழ் வாசகர்களுக்கு வேண்டிய தமிழ்ப் புத்தகங்களுக்குத் திரும்பியது. அந்தக் காலத்தில் தமிழ்ப் பாடப் புத்தகங்களை வெளியிடக் கம்பெனிகள் இருந்தன. மற்றப் புத்தகங்களை வெளியிட ஏதுமே இல்லை என்று சொல்லலாம். அதாவது நல்ல புத்தகங்களை வெளியிடத்தான் இல்லை ; கெட்ட புத்தகங்களை வெளியிடப் பல இருந்தன. இன்னொரு கட்டுரையில் கல்கி சொன்னது போல், ஆங்கில மோகினி ஆட்சி செய்த அந்நாளில், தமிழில் ஆசை கொண்ட ஒரு சிலரும், புற்றீசல் போல் புறப்பட்டுக் கொண்டிருந்த கீழ்த்தர ஆபாச நாவல்களைப்

படித்துத் தங்கள் சுவையைக் கெடுத்துக் கொண்டிருந்தனர்.

அந்த நிலைமையை மாற்றி நல்ல தமிழ் நூல்கள் பரவுவதற்கு வகை செய்வதற்கென, ''சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கம்'' என்ற நிறுவனத்தின் மூலம், கே. வி. கிருஷ்ணசாமி அய்யர் இயக்கம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தார். அந்த இயக்கத்தில் வெகுவாகக் கல்கி அக்கறை கொண்டார்.

அந்தச் சங்கம், 1933 டிசம்பர் மாதத்தில், *''தமிழ் அன்பர் மகாநாடு'' ஒன்றை, அப்போது சென்னை ராஜதானிக் கல்வி மந்திரியாய் இருந்த குமாரசாமி ரெட்டியாரின் தலைமையில் நடத்திற்று. அது வெற்றி பெறப் பெரும் பங்கு கொண்டு உழைத்தவர்கள், கிருஷ்ணசாமி அய்யரும், பெ. நா. அப்புஸ்வாமி அய்யரும். செயற்குழு உறுப்பினராகக் கல்கியும் வெகுவாகப் பணியாற்றினார். அவர் பங்கு கொண்ட முதல் தமிழ் விழாவான அதில், தமிழ் நாட்டின் மாவட்டங்கள் எல்லாவற்றிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். காங்கிரஸ் கட்சி, மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் பெரிய பெரிய தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

மகாநாட்டின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், ''தமிழ் நாட்டினர் தம் கருத்தை எளிதில் அறிந்துகொள்ள வேண்டும் என்பதை, எழுதுபவர்கள் மனத்திற் கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும்'' என்று சொன்னார்.

அதைக் கேட்கையில் கல்கி, ஏற்கனவே தாம் அவ்விதம் எழுதி, பயன் அளித்தும் பயன் அடைந்தும் வருவதை எண்ணி மகிழ்ந்திருப்பார். இன்னும் நெகிழ்ச்சியாக, இனிமையாக, இலக்கியப் பான்மையாக எழுத வேண்டும் என்றும் தீர்மானித்திருப்பார்.

*தமிழன்பர் மகாநாடு பற்றிய செய்திகளுக்கு ஆதாரம்: அம்மகாநாட்டின் அறிக்கையும் ஆ. வி. 31-12-33 இதழும்.


மகாத்மா காந்தியே அந்த மகாநாட்டுக்குத் தமிழில் ''மோ. க. காந்தி'' என ஒப்பமிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தார் :

தமிழன்பர்களின் அன்பு எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டாலும் தாங்கிக் கொண்டு நீடித்து நிலைத்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழ் மொழியைப் பற்றி நான் அறிந்துள்ளது சொற்பமே. ஆனால், அந்தச் சொற்ப அறிவைக் கொண்டே அம்மொழியின் அழகையும் வளத்தையும் உணர்ந்திருக்கிறேன்.


பச்சையப்பன் கல்லூரியில் நடந்த அந்த மகாநாட்டின் இறுதியில், நன்றியுரை கூறும் வாய்ப்பு கல்கிக்குக் கிடைத்தது. அவ்வித வாய்ப்பை அவர் அடைந்தது அதுவே முதல் தடவை. (அதைத் தொடர்ந்து கல்கி, எத்தனையோ தமிழ் விழாக்கள், கூட்டங்கள் முதலியவற்றில்

1. பங்களூர்க் கழகத்தின் நூலகத்துக்குக் கல்கியுடன் சென்று ஏமாற்றத்துக்கு உள்ளான ''தேசு.''

2. கல்கியின் படத்தை வெள்ளி மணியின் மேலட்டையில் பிரசுரித்துப் பெருமையுற்றார் சாவி.











3. ''என் ஆசிரியர்'' என்ற மகுடத்துடன் கல்கியின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்கினார் சாவி.

4, 5. தமிழ் அன்பர் மகாநாடு வெற்றி பெறப் பெரும் பங்கு கொண்டு உழைத்த கே. வி. கிருஷ்ணசாமி அய்யரும், பெ. நா. அப்புசாமியும்.

நன்றியுரை கூறினர். அப்படிக் கூறுவதை அவர், நகைச்சுவையும் இங்கிதச் சொற்களும் கலந்த நேர்த்தியான சொற்பொழிவாய் ஆக்கிக் கொண்டார். அதைக் கேட்பதற்கென்றே, சில கூட்டங்களில் பொறுமையுடனும், இன்னும் சிலவற்றில் பொறுமையற்றும் மக்கள் காத்திருப்பார்கள்.)

அன்று அவர் கூறிய நன்றியுரை (அல்லது அக்காலத்தில் குறிப்பிட்டபடி, ''வந்தனோபசாரம்'') அவருடைய பாணிக்கு ஒரு முன்னோடியாய் அமைந்ததுடன், அன்று போல் இன்றும் வியப்புக்கும் வருத்தத்துக்கும் உரியதான சில விவரங்களைக் கொண்டதாயும் இருந்தது :

எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் கடமை இரு வகையில் சந்தோஷகரமானது. முதலில், இந்த ஒரு பிரேரணை விஷயத்திலாவது நாம் அனைவரும் லவலேசமும் அபிப்பிராய பேதமின்றி ஏகமனதாய் இருக்கிறோம். இரண்டாவது, மற்றப் பிரேரணைகளைக் கொண்டு வந்தவர்களை ஐந்து நிமிஷத்தில் மணியடித்து நிறுத்தியதைப் போல் என்னை அக்கிராசனர் நிறுத்தமாட்டார். நிறுத்தினால் அவருக்குத் தான் நஷ்டம்! வந்தனத்தில் பங்கு குறைந்து போய்விடும்!....

தமிழ் மொழியின் முன்னேற்றந்தான் தமிழ் அன்பர்களாகிய நமது நோக்கம். இந்த நோக்கத்தில் எவ்வளவு வெற்றி அடைந்தோம் என்பதைப் புள்ளி விவரங்களைக் கொண்டு நிரூபிக்க முடியாது. ரூபாய் அணா பைசா கணக்குப் போடும் விஷயம் இதுவல்ல. தமிழ் மொழி வளர்ச்சியில் முக்கியமான அம்சம் தமிழர்களின் மன மாறுதலேயாகும். இந்த மன மாறுதலைத் தமிழர்கள் பெற்றுவிட்டார்கள் என்பது இம்மகாநாட்டின் மூலம் ஐயமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மகாகனம் சாஸ்திரியார், ராஜா அண்ணாமலை செட்டியார் முதல், சிறை புகுந்த தேசத் தொண்டர்கள் வரையில், தமிழ்த் தாயைப் போற்றும் எண்ணத்துடன் எப்போது இங்கு ஒன்று சேர்ந்தோமோ, அப்போது தமிழுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என்பதில் என்ன சந்தேகம் ?

ஒரே ஒரு கூட்டத்தார் மட்டும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார்களோ என்ற பயம் இருந்தது. சுயமரியாதைக் கட்சியைச் சேர்ந்த நமது நண்பர்கள் ஈரோட்டிலும் சிவகங்கையிலும் இந்தத் தமிழன்பர் மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். பத்திரிகையில் பிரசாரமும் நடத்தினார்கள். ஆனால் அவர்களும் அத்தீர்மானத்தைக் கைவிட்டு இம்மகாநாட்டுக்கு வந்து தங்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு ஒத்துழைக்கிறார்கள். இம்மகாநாட்டின் வெற்றிக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் ?

ஆயினும், ஓரளவு மனக்கசப்பும் சிரமமும் நேற்றும் இன்றும் இம்மகாநாட்டில் ஏற்பட்டிருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இது சம்பந்தமாக நேற்று இங்கு வாசிக்கப்பெற்ற மகாத்மாவின் வாழ்த்துச் செய்தியை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்போது யோசிக்கையில், அவருடைய செய்தியின் முதல் வாக்கியம் தீர்க்கதரிசனத்துடன் கூறப்பட்டது போல் தோன்றவில்லையா ? ஆனால் அந்த மகான் நம்மிடத்தில் வைத்த நம்பிக்கையை மெய்யாக்கிவிட்டோம்.

அந்த மகாநாட்டின்போது கல்கியைத் தாம் முதன் முதலாகச் சந்தித்ததைப் பற்றி, பல ஆண்டுகளுக்குப் பிறகு பேராசிரியர் அ. சீநிவாசராகவன் சொன்ன விவரத்தை இங்கே கவனிப்பது பொருத்தமாய் இருக்கும்.

கல்கியை நான் முதன் முதல் நேரில் கண்டது சென்னையில் தமிழ் அன்பர் மகாநாட்டில்... சங்க இலக்கியத்தைக் கறையான் வாயிலிருந்து மீட்டு, புத்தக வடிவத்திலே அளித்த தமிழ்ப் பெரும் புலவர் ஒருவரைத் தமிழன்பர்தானா என்று, மகாநாட்டுக்கு வந்திருந்த அன்பர் சிலர் சந்தேகப்பட்டார்கள். மகாநாட்டில் இதனால் பரபரப்பு ஏற்பட்டது. சிலருக்கு மிகுந்த மன வேதனையும் உண்டாயிற்று.

அன்று மாலையிலேதான் கல்கியை முதன் முதலில் சந்தித்தேன். முதலில் எனக்கு ஏமாற்றம். இந்த ஒல்லிய கீச்சுக் குரல் மனிதரா ''பெரு வீரர் கல்கி'' என்று நினைத்தேன்....

பிறகு, தமிழன்பர் மகாநாட்டில் காலையில் ஏற்பட்ட சலசலப்பைப் பற்றி வருத்தத்தோடு ஏதோ சொன்னேன். கல்கியின் முகத்தில் பரபரப்போ, உணர்ச்சியோ ஏதும் தோன்றவில்லை. அமைதியாக அவர் என்னைக் கேட்டார் : ''பாரதியாரிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா ?''

''ஏன் இல்லை ?''

'' அப்படியானால் கேளுங்கள், 'ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர் — தம்முள்— சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ' '' என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்தார்.

அவர் விழிகளில் நம்பிக்கை ஒளி வீசிற்று.

(திருச்சி வானொலிப் பேச்சு 13-10-55)

தமிழன்பர் மகாநாட்டின் நடவடிக்கைகள், தீர்மானங்கள் பற்றி, அடுத்த வார விகடனில் நீண்டதொரு கட்டுரையை, '' தமிழ்த் தாய்க்கு யோகம் வந்துவிட்டது'' என்ற முகப்பு வாக்கியத்துடன் எழுதினார்.

உண்மையில் தமிழுக்கு யோகம் அடிக்கத்தான் செய்தது. அதுவரை



ஜெயிலர்: ஏம்பா! போன தடவை இங்கே இருந்தபோது எழுதப் படிக்கக் கத்துக்கிட்ட ஆள்தானே நீ? இந்தத் தடவை எந்தக் குற்றத்துக்காக வந்திருக்கே ?

கைதி: ஹி! ஹி! கள்ளக் கையெழுத்துப் போட்டேன்!

- உஷா விசுவநாத்

யில் மேடையில் தமிழ்ப் பேசாதிருந்தவர்கள் எல்லாம், அதிலிருந்து பேசத் தொடங்கினார்கள். தமிழில் எழுதத் தொடங்கியவர்களும் பலர். கரடு முரடான பண்டிதர் நடை பின்னுக்குப் போய், மென்மையான, எளிதான மக்கள் நடை முன்னுக்கு வந்தது. அந்தப் புதிய நடையில், கட்டுரைகளும், சிறுகதைகளும், நாவல்களும், கவிதைகளும் மேல் மேலும் அதிகமாய்த் தோன்றின. தமிழ் வாசிப்போரின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரமாய்ப் பெருகிற்று. அந்தப் பெருக்கத்துக்குக் கல்கியின் பணியும் பங்கும் மிகப் பெரியன. அவருடைய எழுத்தின் இலக்கியத் தரத்தை மனம் விட்டுப் போற்றாத கடுத்தமான திறனாய்வாளர்கள்கூட, தாராளமாய் இதை ஒப்புக் கொள்கிறார்கள்.

வேகமாய்க் கல்கியின் பேரும் புகழும் பரவிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில், அவரைக் காண ஆசைப்பட்ட வியப்பாளர்களின் தொகை பெருகிக் கொண்டிருந்தது. அது அவருக்கே வியப்பானதொரு புதிய அனுபவம். அவரை முதன் முதலாய்க் கண்டவர்களில் பலர், அவர் எப்படி எப்படியோ இருப்பார் என்று கற்பனை செய்து கொண்டிருந்து ஏமாற்றம் அடைந்ததும் உண்டு. அவருடைய தோற்றப் படங்கள் அந்நாட்களில் வெளியாகாமல் இருந்ததே அதற்குக் காரணம்.

புகழுக்கு உரிய பலரைப் பற்றிப் பேனாச் சித்திரங்கள் எழுதியுள்ள 'நஜன்' இதன் தொடர்பாகச் சுவையான சந்திப்பு ஒன்றை வர்ணித்திருக்கிறார் :

ஒரு நாள் சிங்கப்பூரிலிருந்து, சில விகடன் வாசகர்கள் கல்கியைக் காண ஆவலோடு விகடன் காரியாலயத்துக்கு வந்தார்கள். அவர்களது வருகையைப் பற்றி கல்கிக்கு அறிவிக்கப்பட்டது. உடனே கல்கி அவர்களைத் தம் அறைக்கு வரச் செய்து, நமஸ்காரம் கூறி எதிரே உட்கார வைத்தார். வந்தவர்கள் நால்வரும், அவர் மீது வைத்த கண் வாங்காது பிரமிப்பில் ஆழ்ந்தவர்களாக, ஏதும் பேசாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள்.

கல்கிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. ''உங்களுக்கெல்லாம் பேச வருமோ இல்லையோ ? அதிலும் தமிழ் பேச வருமோ இல்லையோ ?'' என்று கேட்டார்.

அவர்கள், ''ஆமா, ஆமா, ஆமா!'' என்றார்கள். பிறகு அவர்களில் ஒருவர் சொன்னார் : ''மன்னிக்கணும். கல்கி என்றதும், உங்கள் கதைகளையும் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் வாசித்ததும், நீங்கள் ஒரு பெரிய முரட்டு ஆளாக இருப்பீர்கள் என்றுதான் நாங்கள் கற்பனை செய்து கொண்டு வந்தோம். நீங்கள்....'' என்று இழுத்தார்.

கல்கி தமது சுபாவக் குபீர்ச் சிரிப்பை எழுப்பிக் கொண்டு, ''இது முன்னாலேயே எனக்குத் தெரிந்திருந்தால், என்னைப் 'பெரிதாக்கிக்' கொண்டிருக்க ஏதேனும் செய்திருப்பேனே'' என்று கூறி, அவர்களைச் சிரிக்க வைத்தார்.

(நாரதர் 1-8-71)

மற்றும் ஒரு புதிய அனுபவம் 1936ல் கல்கிக்கு வாய்த்தது — கல்லூரி ஒன்றில் பேசும் வாய்ப்பு; அதுவும், ''கல்யாணம்'' என்ற பொருள் பற்றி. பச்சையப்பன் கல்லூரி மாணவர் சங்கத்தில் அவர் நிகழ்த்திய அந்த உரையை, கல்கியின் எழுத்தில் மட்டில்லா மோகம் கொண்டிருந்த, மாணவர் அல்லாத இளைஞர் ஒருவரும் கேட்டார். முதன் முதலாகக் கல்கியைக் கண்டதும் கேட்டதுமான அந்த அனுபவத்தை, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இளைஞர் அதே, ''கல்யாணம்'' என்ற தலைப்புக் கொண்ட கட்டுரை ஒன்றில் எழுதினார். அந்தக் கட்டுரையை ஆதாரமாய்க் கொண்டு, கல்கியின் அந்தக் ''கல்யாணப் பேச்சு'' எப்படி இருந்தது என்பதைச் சற்றே பார்ப்போம் :

பெரும்பாலும் பிரம்மச்சாரிகளாகவே இருந்திருக்கக் கூடிய அந்த மாணவர் கூட்டத்தில், எடுத்த எடுப்பிலேயே கல்கி, அருமையான யோசனை ஒன்றைத் தெரிவித்தார். அந்த யோசனை என்னவென்றால், ''கல்யாணம் செய்துகொள்ளாதீர்கள்'' என்பதே! கைதட்டல் ஓய்ந்ததும், அது தம்முடைய யோசனை அல்ல என்றும், ஆங்கில விகடப் பத்திரிகையான ''பஞ்ச்'' விடுத்த யோசனை என்றும் சொல்லித் திகைக்க வைத்தார். பிறகு, ''காலா காலத்தில் கல்யாணம் செய்து கொள்வதுதான் நல்லது'' என்று தமது யோசனையைச் சொல்லிவிட்டு, ஒரு எச்சரிக்கையும் விடுத்தார் : ''அதற்காகக் கண்ணைக் கட்டிக் கொண்டு தொப்பென்று சம்சார சாகரத்தில் விழாதீர்கள் ! கண்ணைத் திறந்து கொண்டே விழுங்கள்! அதாவது மண வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அனுபவிக்கச் சித்தமாகிக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.''

காதலித்துக் கல்யாணமா, கல்யாணத்துக்குப்பின் காதலா, சம்பிரதாய மணமா, சீர்திருத்தத் திருமணமா போன்ற வினாக்களைப் பின்னர் எழுப்பி, அவற்றை அலசி ஆராய்ந்து தெளிவாக விடை கூறினார். ஊடே ஊடே ஜோக்குகள் அடித்தும் கதைகள் சொல்லியும், ஒரு கல்யாணக் கதாக் காலட்சேபமே செய்து விட்டார்.

தொடக்கத்தில் ஒரு பேராசிரியர் கல்கியை அறிமுகப்படுத்திவிட்டு மாலை போட்டதும்,


---

காதலன்: கண்ணே ! வெய்யில் கொளுத்தினாலும் உன்னைச் சந்திக்க வருவேன் !
செயற்கை மழையே கொட்டினாலும் உன்னைக் காண வருவேன் ! இது சத்தியம்.

- உஷா விசுவநாத்



அண்ட
முடியாத
டாய்லெட்



இந்தியாவில் டாய்லெட் என்றால் அசுத்தம் என்று பொருள். அது சுத்தமாகப் பொருத்தமற்றது.

நம்மில் பலர் மற்ற அறைகளைச் சுத்தமாக வைத்திருப்பதுபோல், டாய்லெட்டை சுத்தமாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. டாய்லெட்டுக்குத்தான் அதிக கவனம் தேவை என்பதை உணர்வதில்லை. நாம் கவனம் செலுத்தாத எதைப் பற்றியும் சிந்தித்துக்கூட பார்ப்பதில்லை. நம் கவனத்தை ஈர்க்கும் சில உண்மைகள் இதோ!

அசுத்தமான டாய்லெட் அருவருப்பாக காட்சி அளிப்பதோடு துர்நாற்றமும் வீசுகிறது. அது ஆரோக்கியமற்றது. சிறிதும் சுகாதாரமில்லாதது. அதனால் நமக்கு நிச்சயமாக தீங்கு நேரும்.

இது மறுக்க முடியாத உண்மை. மிகைப்படுத்தியோ அல்லது குறைத்துக் கூறுவதாகவோ எண்ண வேண்டாம். ஒருவேளை உங்களுக்குள் ஒரு முக்கியமான கேள்வி எழலாம்:

நீங்கள் விரும்பும் அளவுக்கு உங்கள் டாய்லெட் துப்புரவாய் இருக்கிறதா?

உங்கள் ஒருவருக்கு இதற்குத் தக்க விடை தெரியத்தான் வேண்டும்.

தினமும் டாய்லெட்டைச் சுத்தம் செய்ய தோட்டி இருந்தாலும், அவர் செவ்வனே சுத்தம் செய்கிறாரா? அல்லது வேலையை விரைவில் முடிப்பதிலேயே கருத்தாய் இருக்கிறாரா?

இவ் வினாவுக்கு திருப்திகரமான விடை கிடைக்கவில்லையெனில், உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி இதோ: ஸானி:.பிரஷை உபயோகியுங்கள்.

ஸானி:.பிரஷ் என்பது என்ன?

ஸானி:.பிரஷ் கக்கூஸ் சுத்திகரிப்புப் பொருள். உங்களுடைய அருவருப்பான வேலையை அது செய்கிறது. முதலில் டாய்லெட்டில் :.பிளஷ் மூலம் தண்ணீரை விடுங்கள். ஸானி:.பிரஷை டாய்லெட்டின் பேஸினில் தாராளமாகத் தூவுங்கள். 3—4 மணி நேரம் கழித்துப் பாருங்கள். இதைவிட, இரவு பூராவும் அப்படியே விட்டுவைப்பது மிகவும் சிறந்தது. அதற்குப் பிறகு :.ப்ளஷ் செய்யவும். :.ப்ளஷ் வேலை செய்யாவிடில் ஒரு வாளி தண்ணீரை ஊற்றவும். அதோ சுத்தம் செய்யும் எல்லாப் பிரச்னைகளும் தொலைந்து போயின.

ஸானி:.பிரஷ் மூன்று வழிகளில் வேலை செய்கிறது.

1. ஸானி:.பிரஷ் முழுக்க முழுக்க சுத்திகரிக்கிறது

அதில் தீவிரமாக அசுத்தம் போக்கும் பொருள் இருப்பதால், விடாப்பிடியாக நீங்காத கறைகளும் நீங்கிவிடுகின்றன. தூரிகை புக முடியாத இடத்தையும் சுத்தம் செய்துவிடுகிறது.

2. நோய்களைப் பரப்பும் ஆபத்தான கிருமிகளை வெளியேற்றுகிறது.

அசுத்தமான டாய்லெட் நோய்க்குக் காரணமான கிருமிகள் வளரும் இடம். சாதாரண பினைல் தரமுடியாத பாதுகாப்பை ஸானி:.பிரஷ் உங்களுக்குத் தருகிறது. ஆகவே ஸானி:.பிரஷ் உபயோகிப்பதால் உங்கள் டாய்லெட் முற்றிலும் பத்திரமானது என்பதை நிச்சயமாக நம்பலாம்.

3. ஸானி:.பிரஷ் துர்நாற்றத்தை துரத்துகிறது.

டாய்லெட்டின் துர்நாற்றம் நாசியைத் துளைக்கும். போதுமான காற்றோட்ட வசதியில்லாத டாய்லெட்டில் துர்நாற்றம் வெளியே செல்லாமல் பிரச்னையை அதிகமாக்கிவிடுகிறது. ஸானி:.பிரஷில் வாசனைப் பொருள் இருப்பதால் காற்றிற்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்தி துர்நாற்றத்தை அகற்றுகிறது.

ஸானி:.பிரஷை எத்தனை முறை உபயோகிக்க வேண்டும்? டாய்லெட்டை சுத்தமாக வைத்திருப்பது ஆரோக்கியத்திற்கு அவசியமாதலால் தினமும் உபயோகிப்பதே சிறந்த முறை.



ஸானி:.பிரஷ் உங்கள் அருவருப்பான வேலையைச் செய்து டாய்லெட்டை சுத்தமாக வைக்கிறது.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
[illegible]

அதை அவர் ஜம்மென்று அணிந்துகொண்டு, ''கல்யாணம் அல்லவா?'' என்று கேட்டு, முதல் சிரிப்பொலியை எழுப்பினார்.


பின்னர் ஒரு மாணவர், தாகத்துக்குப் பானத்துடன் மேஜை மீது வைத்த கண்ணாடி டம்ளர், கைபட்டுக் கீழே விழுந்து உடையவே, ''த்ஸொ'', ''த்ஸொ'' என்ற குரல்கள் எழுந்தன. அவற்றினூடே கல்கி, ''கல்யாணம் என்றால் இப்படித்தான்: சந்தடியில் ஏதேனும் கொட்டிச் சிந்திக் கலாட்டா நடக்கும்'' என்று சொல்லி, மீண்டும் சிரிப்பலைகளைப் பரப்பினார்.

பேச்சு முடிந்ததும் மாணவர்கள் பலர் அவரைப் புடைசூழ்ந்து பாராட்டிக் கொண்டே கல்லூரி வாசல் வரை சென்று வழி அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் சென்ற அந்த மாணவர் அல்லாத இளைஞர், வாசலோடு நிற்காமல், கல்கி பிராட்வே முனையில் திரும்புகிறவரை அவர் பின்னாலேயே தொடர்ந்து சென்றார். அந்த இளைஞர் தான், பின்னர், நகைச்சுவை விருந்துடனும், கற்பனை வாண வேடிக்கையுடனும் ''வாஷிங்டனில் திருமணம்'' நடத்திய, ''சாவி'' என்ற சா. விசுவநாதன்.

''வெள்ளிமணி'' பத்திரிகையின் ஆசிரியராகச் சாவி இருந்தபோது ''என் ஆசிரியர்'' என்ற மகுடத்துடன், கல்கியின் வாழ்க்கை வரலாற்றை, 2–4–48 இதழிலிருந்து எழுதத் தொடங்கினார். அந்த வரலாற்றின் முதல் அத்தியாயமே ''கல்யாணம்'' என்ற தலைப்பையும், முன்பு சாவி கல்கியின் சொற்பொழிவைக் கேட்ட நினைவையும் கொண்டது.

கல்கிக்கு, தமது வாழ்க்கை வரலாறு எழுதப்படுவது, ஒரு புதுமையான, அபூர்வமான அநுபவம்தான். ஆனால் அந்த அனுபவம் அவருக்குப் பிடிக்கவில்லை. தமது வரலாற்றைத் தொடர்ந்து எழுத வேண்டாம் என்று அவர் சாவியைக் கேட்டுக் கொண்டார். அதன்படியே சாவியும் அடுத்த இதழுக்கு மேல் அதைத் தொடரவில்லை.

(கல்கி மூலம் சாவி உள்ளான அதே விதமான தடைக்கு, கல்கியே ராஜாஜி மூலம் உள்ளாக நேர்ந்தது. அதற்கு நாலு மாதங்களுக்கு முன்பு ராஜாஜியின் எழுபதாவது பிறந்த நாளை யொட்டி 14–12–47ம் தேதிய கல்கி, ஒரு சிறப்பிதழாக வெளியாயிற்று. அந்த இதழில், ''நாட்டுக்கு ஒரு புதல்வர்'' என்ற மகுடத்துடன் ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றைக் கல்கி எழுதத் தொடங்கினார். அப்போது மேற்கு வங்காள கவர்னராக இருந்த ராஜாஜி



வீட்டில் வேலைக்கு அவசரமாகத் தேவைப்படும் ரம்பம், கத்திகள், உளி போன்ற கருவிகளை இரவல் வாங்கப் போனால் கிடைப்பதில்லை. எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்குவதும் சிரமமாக இருக்கிறது. இதற்காக நியூயார்க்கில் ஒரு கருவிகள் 'லைப்ரரி'யே ஆரம்பித்திருக்கிறார்கள்!
'மெக்கால்' - ஜெயஸ்ரீ விசுவநாத்

அதைப் பார்த்துவிட்டு, அதைத் தொடர வேண்டாம் என்று ''அவசரத் தடை உத்தரவு'' பிறப்பித்தார். அதன் காரணமாய் மூன்றாவது இதழுடன் அதைக் கல்கி நிறுத்திக் கொண்டார். ஆனாலும், அது தடைப்பட்டுக் குறையாக நின்றது போல் தோன்றாதபடி சொல்ல வேண்டியதை யெல்லாம் சுருக்கிச் சொல்லி, ஓரளவு முழுமை வடிவுடன் அதை முடித்தார். அந்த மூன்று இதழ்களிலேயே ஒரு சிறு நூல் அளவுக்குக் காணும்படி அவர் எழுதிவிட்டார். பின்னர் அது நூல் வடிவிலும் வந்தது.)

கல்கியின் வாழ்க்கை வரலாற்றைச் சாவி தொடர முடியாமல் போனாலும் அதற்கு ஒன்பது மாதங்களுக்கு முன்னாலேயே அவர், கல்கிக்கும் கல்கி வியப்பாளர்களுக்கும் புதியதோர் அனுபவமாக வேறொன்றைச் செய்திருந்தார். தமது ''வெள்ளி மணி'' 25–7–47 இதழில், கல்கியின் உருவத்தை அட்டைப் படமாக வெளியிட்டதே அது.

எத்தனையோ அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் முதலியோரின் படங்களைத் தமது பத்திரிகையின் அட்டையில் பொறித்தும், உள்ளே, பாராட்டுக் குறிப்புக்கள் எழுதியும், அவர்களைக் கௌரவித்து வந்திருந்தார் கல்கி. அத்தகைய கௌரவத்தை அவருக்கே முதன் முதலாக அளித்த பெருமைக்கு உரித்தானார் சாவி. அந்தப் பெருமையுடன், கல்கியின் படம் பற்றிய குறிப்பின் மூலம் இன்னொரு தனிப் பெருமையையும் தேடிக் கொண்டார்.


அந்தக் குறிப்பிலே சாவி எழுதியிருந்த புகழுரை ஏற்கெனவே பலர் சொன்னது போன்றதுதான். ஆனால் அதனிடையே கல்கியின் வளமான தமிழையும், அதன் தனிப் பாணியையும் குறிப்பிடுவதற்காக அவர் பயன்படுத்தியிருந்த ''கல்கித் தமிழ்'' என்ற, சொற்றொடர், புதுமையான தொரு வர்ணனையாய் இருந்தது.


வெள்ளி மணியின் அந்த வர்ணனை நெடுகிலும் பரவி ஒலித்தது.

(தொடரும்)

• போட்டிக் கதை

ரூபாய் ஆயிரம் முதல் பரிசு பெறும் சிறுகதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது. இதர பரிசுக் கதைகள் தொடர்ந்து பிரசுரமாகும்.







• நகர்வலம் : ஜெய்பூர்

அழகு நகரம் ஜெய்பூரில் அடைந்த அனுபவங்களை நமது விசேஷ நிருபர் நகைச் சுவையுடன் விவரிக்கிறார்.

• நான் வணங்கும் மனித தெய்வம்

நேயர்கள் பூஜை அறையில் வைத்துப் போற்றும் மனித தெய்வங்களைப் பற்றிக் கூறுகிறார்கள்.





• திலகங்களிடம் காணும் திறமைகள்

சர்வதேச மாதர் ஆண்டல்லவா? பல்வேறு துறைகளில் பெருமையுற்றுள்ள மாதர் பற்றி அத்துறையில் பணியாற்றும் ஆடவர் பேசுகின்றனர்.

• கண்ணதாசன்

கடைசிப் பக்கத்தைக் கல்கி வாசகர்களைப் பொறுத்தவரை முதல் பக்கமாக்கி வருகிறார்.



• பொன்னியின் புதல்வர்

அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாற்றை ஆரம்பத்திலிருந்துதான் படிக்க வேண்டுமா? எந்த அத்தியாயத்தைப் பிரித்துப் படித்தாலும் சிரிப்பும் சிலிர்ப்பும்தான்.



இந்த மர்ம நாவலை நீங்கள் படித்து வரும்போதே ரூபாய் 500/- பரிசு பெறும் வாய்ப்பையும் அடைகிறீர்கள்!

இந்த நாவலைப் படித்துக் கொண்டு வரும்போதே ரூ. 500/- பரிசு பெறும் வாய்ப்பும் உங்களுக்கு இருக்கிறது.

கதை முடிவதற்கு இன்னும் நாலு அத்தியாயங்களே பாக்கி இருக்கும்போது அடுத்த பத்து நாட்களுக்குள் கதையின் முடிவை ஊகித்துச் சொல்லுமாறு நேயர்களைக் கேட்போம். ரேகா சந்திரநாத் எம்மிடம் எழுதித் தந்திருக்கும் முடிவினை ஊகித்து எழுதுகிறவருக்கு ரூ. 500/- பரிசு வழங்கப்படும். ரேகா சந்திரநாத் போலவே அதே நடையைக் கையாண்டு எழுதத் தேவையில்லை. கதையின் முடிவு இன்னது என்று ஊகித்துச் சுருக்கமாய்க் கூறினால் போதும்.

ஒருவருக்குமேல் சரியான விடை எழுதியிருந்தால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். யார் கண்டது; முழுப் பரிசையும் நீங்களே கூடத் தட்டிக் கொண்டு போகலாம் !

முக்கிய நிபந்தனை: இப்போட்டியில் பங்கு கொள்கிறவர்கள் ரேகா சந்திரநாத்தின் நண்பர்களாகவோ, உறவினர்களாகவோ, கல்கி காரியாலயத்தைச் சேர்ந்தவர்களாகவோ, அவர்களின் உறவினர்களாகவோ எழுத்தாற்றலால் ஏற்கெனவே பிரபலம் அடைந்தவர்களாகவோ இருக்கக் கூடாது.



கல்கி ஆகஸ்டு 3-ம் சிறப்பிதழில் ஆரம்பம்

தர்மாத்மா

சினிமாக் கதை-2



“ ‘கரீபி ஹடாவோ’ என்று வாய் கிழியக் கோஷமிட்டால் மட்டும் வறுமை ஒழிந்து விடுமா? ‘விலைவாசியே, இறங்கு!’ ‘வாழ்க்கைத் தரமே உயரு!’ என்று கூப்பாடு போட்டால் விலைவாசி தான் இறங்குமா, அல்லது வாழ்க்கைத்தரம்தான் உயருமா? இதெல்லாம், ‘மயிலே, மயிலே! இறகு போடு!’ என்ற கதைதான். உண்மையாகவே வறுமை ஒழிய வேண்டுமானல் விலைவாசி இறங்க வேண்டுமானல், அதற்கு மிக மிகத் தேவை உழைப்பு. உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து உண்மையாக உழைத்தாலே நினைத்ததை முடிக்க முடியும். இன்றைக்கு நான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் என்ருல், அதற்குக் காரணம் உழைப்பு, உழைப்பு; உழைப்பு! எனவே, உழைக்க வாரும் ஜகத்தீரே !’’

ஸேட் தர்மதாஸ் தமது டெலிவிஷன் பேச்சைத் தாமே கண்டு கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார். முதலமைச்சர்களும் பிரதம மந்திரிகளும்கூடப் பேச்சில் தம்மிடம் பிச்சை தான் வாங்க வேண்டும் என்ற இறுமாப்பு அவர் முகத்தில் தெறித்தது. டெலிவிஷனில் மக்கள் எழுப்பும் கரவொலியை மேவி ஒரு குரலொலி ஒலித்தது: ‘‘அப்பா !’’

திரும்பிப் பார்த்தார். மகன் ரஞ்ஜீத் நின்று கொண்டிருந்தான். முகம் ஜிவு ஜிவு என்றிருந்தது அவனுக்கு.

‘‘ என்ன?’’

‘‘சொல்லும் செயலும் ஒன்றுகிய உண்மையான உழைப்பைக் கொண்டுதான் நீங்கள் இந்த நிலைக்கு உயர்ந்தீர்களா ?’’

‘‘அதில் என்ன சந்தேகம்? நான் தொடங்கியிருக்கும் அநாதை இல்லங்களும் கல்விக்கூடங்களும் எனக்குத் தர்மாத்மா என்று பட்டம் சூட்டியிருப்பதிலிருந்தே தெரியவில்லையா ?’’

‘‘ கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்து அதே கையோடு புறங் கையையும் நக்கும் உங்களுக்கு எந்த மடையன் இந்தத் தர்மாத்மாப் பட்டம் சூட்டினன்? அப்பா, நல்ல வழியில் சம்பாதித்து நல்ல வழியில் செலவிடுபவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பட்டம் அப்பா, இது!’’

‘‘டேய், மடையா ! பெரிய தகப்பன் சாமியாட்டம் உபதேசிக்க வந்துவிட்டாயோ ? பெரிய தர்மாத்மா இவரு, உபதேசம் செய்ய வந்துட்டாரு ! பேசாமல் உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போவியா ?’’ தர்மதாஸ் சீறினர்.

‘‘அதைச் சொல்லத்தான் வந்தேன், அப்பா! உங்க உபதேசத்தைக் கடைப்பிடித்து நேர்மையான வழியில் சம்பாதித்து நல்லவனுக வாழ்ந்து என் காரியத்தைப் பார்த்துக் கொள்ள எனக்கு ஆசி அளியுங்கள்!’’

‘‘நீ கெட்ட கேட்டுக்கு ஆசி வேறே. அப்பனுக்கே உபதேசம் செய்ய வந்த நீ என் முகத்திலேயே விழிக்க வேண்டாம். எங்கேயாவது கண் காணுத இடத்துக்குப் போய்த் தொலே!’’ — தனயனுக்குத் தந்தை ஆசி வழங்கிய இலட்சணம் இது.

தன் காரியத்தைப் பார்த்துக் கொள்ளப் புறப்பட்ட ரஞ்ஜீத்தின் வாழ்க்கையிலே குறுக்கிட்டவள் ரேஷ்மா. ஆப்கானிஸ்தானத்து மண்ணிலே, நாடோடிக் கும்பல் ஒன்றின் நடு நாயகியாக ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்த அவளே அவனது கண்கள் மேய்ந்தன. சொல்லும் செயலும் இழந்து நின்ற அவனே அவளது படபடக்கும் விழிகள் பருகின; துடிக்கும் உதடுகள் விருந்துக்கு வருந்தி அழைத்தன.

ரேஷ்மா தனக்கே உரியவள் என்று தப்புக் கணக்குப் போட்டு வைத்திருந்த நாடோடிக் கும்பலைச் சேர்ந்த இளைஞனுக்கு அதைக் காண ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ரஞ்ஜீத்தை வலுச் சண்டைக்கு இழுத்தான். புரவி மீது ஏறி சாட்டியால் குத்திக் குதற முயன்ருன்.

அப்போது ரேஷ்மாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஒவ்வொரு முறை அவன்


சட்டியைப் பாய்ச்சும் போதும். அந்த சட்டி தன் இதயத்தில் பாய்ந்துவிட்டாற் போன்று தவித்துப் போனான். ஆம், அவள் விஷயத்தில் காதல் விரதத்தைத்தான் மணக்கும் என்பது பொய்யாகிப் போயிற்று ! ரஞ்ஜீத்தைப் புரட்டி எடுத்த நாடோடி இளைஞன், அவன் புழுதியைத் தட்டிக் கொண்டு எழுந்திருப்பதற்குள்ளாக அவளைத் தர தரவென்று பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டான். அவளோ ரஞ்ஜீத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அதைக் கண்ட ரஞ்ஜீத்துக்கும் ஒரே வியப்பு! 'இவள் முகத்தில் என்ன மந்திர சக்தியோ, தெரியவில்லையே ! கயிறு இல்லாமலே என்னை இப்படிக் கட்டி இழுக்கிறாளே! ஒளிரும் வைரச் சுடர் விழிகளும்தான் பேசாமலே எத்தனை பேச்சுக்கள் பேசுகின்றன!'

இப்படிக் காதல் வயப்பட்டு நின்ற ரஞ்ஜீத்தின் செவிகளிலே ஒரு 'நாள் 'உன் தங்கைக்குக் கல்யாணம்' என்ற செய்தி வந்து விழுந்தது. 'தந்தையிடம் கோபித்துக் கொண்டு வந்தபின் தங்கையின் கல்யாணம் என்ன வேண்டிக் கிடக்கிறது?' என்றுதான் அவன் முதலில் எண்ணினான். ஆனால் தங்கையிடம் உள்ள பாசம் அவனை அறியாமலே அவனை வலிய இழுத்துச் சென்றது. அவன் வந்ததில் தங்கை, தாய்க்கு மட்டுமா மகிழ்ச்சி?விறைப்பாக அவனைப் பார்த்தும் பார்க்காதது போல் உட்கார்ந்திருந்த தந்தைக்குக் கூடத்தான் பெருமிதம்! அறத்துக்கும் மறத்துக்கும் சார்பான அன்பு புரியும் விந்தைகளில் இன்னும் ஒன்றையும் குறிப்பிட வேண்டும். தர்மதாஸின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஊழியர் ஒருவர் — உட்பகையோ, வெளி அன்போ அல்லது அண்டிக் கெடுக்கும் ஆர்வமோ ? — இறக்கும் தறுவாயில் 'உங்கள் மகளை என் மகனுக்கு மணம் முடித்து வைக்க வேண்டும்' என்று வேண்டிக் கண்களை மூடினார். ஸேட் தர்மதாஸ் எத்தனைதான் தீயவரானாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற அவ்விதமே செய்து வைத்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய மகன் திரும்பி வரவே, அவனுக்கும் திருமணம் செய்து வைக்கத் திட்டம் தீட்டினார். ரேஷ்மாவிடம் மனத்தைப் பறிகொடுத்த ரஞ்ஜீத்துக்கு அவள் நினைவு வரவே, சொல்லாமல் கொள்ளாமல் நாடோடிக் கும்பலைத் தேடிப் புறப்பட்டான்.

ரேஷ்மாவைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள உறுதி பூண்ட இளைஞன் தங்கள் கூட்டத்துத் தலைவனிடம் பிராது கொடுத்தான், 'இவன் ரேஷ்மாவைத் தீய கண்களோடு நோக்குகிறான்!' என்று !

தலைவன் ஆத்திரத்தோடு, ''எங்கள் குலப் பெண்டிரைத் தீய கண்ணோடு தொடுகிறவனுக்கு என்ன தண்டனை, தெரியுமா?'' என்று சீறினான்.

ரஞ்ஜீத்துக்குத் தெரியாத அந்தத் தண்டனை ரேஷ்மாவுக்குத் தெரிந்திருந்தது. அவள் உள்ளமும் உடலும் பதறத் தலைவனைப் பார்த்துக் கேட்டாள்: ''என் மனம் கோணாமல் என்னை வைத்துக் கொள்வதாக என் தந்தைக்கு உறுதிமொழி அளித்தீர்களே, நினைவிருக்கிறதல்லவா ?''



ரா. வி.

தலைவனின் ஆத்திரம் தணிந்தது. ரேஷ்மா அவர்கள் குலப் பெண் அல்ல. எவருடைய கொடுமையோ தானாது ரேஷ்மாவின் தந்தை தம் மகளைப் பாதுகாக்கு' மாறு தஞ்சமென வந்திருந்தார் என்பதும் அவருக்கு நாம் என்ன வாக்கு அளித்திருந்தோம் என்பதும் நினைவுக்கு வரவே, ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''நான் இவரை மனமாரக் காதலிக்கிறேன்!'' என்றாள் அவள்.

''நாங்கள் நேர்மையும் நாணயமுமே தனமாகக் கொண்டவர்கள்; சொன்ன சொல் பிறழாதவர்கள். உன் இஷ்டத்துக்கே திருமணம் நடக்கும்!'' என்றான் தலைவன். அவளை

திரையுலக ரசிகர்களுக்கு மிக மிகச் சுவையான விருந்து அளித்துவிட வேண்டும் என்ற ஆசையில், அதே நேரத்தில் பணம் பண்ணும் முயற்சியில் எடுக்கப்பட்ட 'புரொடக்ஷன் வால்யூ' மிகுந்த படம். அதற்காகக் குதிரையில் அமர்ந்து டானி சட்டிச் சண்டை புரியும் காட்சி, ஐந்து மோட்டார் சைக்கிள்கள் கதாநாயகனைத் துரத்தித் துரத்தி அடிக்கும் காட்சி என்று இப்படி எத்தனையோ காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. தர்மதாஸாக வரும் பிரேம்நாத் – முகலே ஆஸத்தில் பிருத்வி ராஜ் போலப் படம் முழுவதும் நிறைந்து விளங்குகிறார். தம் நடிப்பால் தாம் ஏற்ற பாத்திரத்துக்குப் பெருமையும் சேர்க்கிறார்.

இந்த 'தர்மாத்மா' கதைக்கு ஆதாரம் 'காட் ஃபாதர்' என்பதற்குச் சான்று காட்சிக்குக் காட்சி இல்லை என்றாலும் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி இருக்கிறது என்பது கூறாமலே விளங்கும். சூழ்ச்சிக்கு மேல் சூழ்ச்சி 'காட் ஃபாதரை' விஞ்சி நிற்கிறது.

பல பிரபல நடிகர்களைப் போட்டு எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தில், ஜீவனும் சத்யேந்திர கப்புவும் கேலிக் கூத்தாடிச் சுவையைக் கெடுக்கிறார்கள். ரேகாவிடம் குறைவாகவும் ஹேமமாலினியிடம் அதிகமாகவும் வேலை வாங்கியிருக்கிறார் டைரக்டர் ஃபிரோஸ் கான். ஆனால் கதாநாயகனாக வரும் தம்மிடம் அவரால் அப்படி வேலை வாங்க முடியவில்லை. பல இடங்களில் பரிதாபச் சிரிப்போடு சரி!

நல்ல புகைப்படக் காட்சி, ஆப்கானிஸ்தானத்து நாடோடி வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறது. 'யூ' படங்களிலேயே இதைவிட மட்டக் காட்சிகள் வரும் பொழுது இந்தப் படத்துக்கு மட்டும் 'ஏ' சான்றிதழ் ஏனோ?

ஒருதலைப்பட்சமாகக் காதலித்த இளைஞன்கூட அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டான் என்றால், அந்த அறவழியையும் கட்டுப்பாட்டையும் என்னவென்பது?

திருமணத்துக்குச் சில நாட்கள் முன்பு ரேஷ்மாவும் ரஞ்ஜீத்தும் ஜீப்பில் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார்கள். திரும்ப வந்து ஜீப்பில் முன்னால் ஏறிக் கொண்ட ரேஷ்மா, ''நான் உங்களை இப்படியே விட்டு விட்டுப் போய்விட்டால் என்ன செய்வீர்களாம்?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

''போய்த்தான் பாரேன்! உன்னால் முடியுமா? உன் மனமும் கேட்காது, என் மனமும் கேட்காது! திரும்பத் திரும்ப இரண்டும் ஒன்றை ஒன்று சுற்றியே தீரும்!'' என்றான் அவன்.

யார் நாக்கில் என்ன சனி இருந்ததோ, ரேஷ்மா சாவியைச் சுழற்றினாள், ஜீப்பை எடுக்க! அக்கம் பக்கத்துச் சூழ்நிலை அதிரும்படியாக ஒரு வெடிச் சத்தம் கேட்டது. யாரோ டைனமைட் பொருத்தியிருந்ததன் விளைவு! ''நல்ல வேளை! நீங்கள் பிழைத்தீர்கள்! இந்தச் செயலுக்கு அந்த நாடோடி இளைஞனைச் சந்தேகப்படாதீர்கள்!'' என்றவாறே ரேஷ்மாவின் இறுதி மூச்சுப் பிரிந்தது.

''மெய்தான், ரஞ்ஜீத்! உன் தந்தை பல தவறான வழிகளில் பணம் பண்ணியவர். உலகத்தின் கண்களில் அவர் தர்மாத்மாவாகத் திகழ்ந்தாலும், அவரைப் போலவே பணம் பண்ண ஆசை கொண்ட கோஷ்டி அவரைச் சூழ்ந்துள்ளது. அது, சமயம் பார்த்து அவரைச் சாய்த்து அவரது செல்வத்தை அபகரிக்கத் திட்டமிட்டுச் செயல்படவும் செய்கிறது. அதன் வழிக்கு நீ ஒரு தடுப்புக் கல். அதனால்தான் உன் உயிருக்கு உலை வைக்கப் பார்த்தது. அதற்கு ரேஷ்மா பலியாகிவிட்டாள். இப்பொழுது உன் தந்தையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்னுடையது!''

அவன் நலத்தில் நாட்டம் கொண்டவரின் பேச்சைக் கேட்டு அவன் தந்தை இருந்த மருத்துவ மனையை அடைந்த பொழுது காரியம் மிஞ்சிப் போயிருந்தது. அவன் தந்தைக்கு மருத்துவம் பார்த்த டாக்டர் கூறினார்: ''இது இயற்கையான மரணம் அல்ல. பொருத்தியிருந்த பிராணவாயுக் கருவிகளைப் பிடுங்கி எறிந்து யாரோ கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கிறார்கள், பாவிகள்!''

''யார் கொன்றிருப்பார்கள்?''

''யார் கண்டார்கள்? இந்த மோதிரம் ஒன்றுதான் தடயமாகக் கிடைத்திருக்கிறது!''

அந்த மோதிரத்தை அவன் கையில் கண்ட அவன் தங்கை கேட்டாள்: ''இந்த மோதிரம் உன்னிடம் எப்படி வந்தது, அண்ணா?''

''ஏன், இந்த மோதிரத்தைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''அதென்ன அப்படிக் கேட்டு விட்டாய்? இது திருமணத்தன்று நான் அவருக்குப் போட்ட மோதிரம் அண்ணா!''

''அப்போ...'' ரஞ்ஜீத் சிந்தனையில் ஆழ்ந்தான். ''என் தங்கையின் கணவனா கொலையாளி? இராது, அப்படியெல்லாம் இராது!'' தனக்குத் தானே சமாதானமும் செய்து கொண்டான்.

ஆனால் அடுத்த சில நாட்களில்....

''ஏண்டி, கசுமாலம்! கட்டின கணவனையா காவு கொடுக்கப் பார்க்கிறே? உன் உயிருக்கே உலை வைக்கலேன்னா என் பெயர் குந்தன் இல்லே!'' சகோதரியின் கணவன் குந்தன் சவால் விட்டதோடு நில்லாமல், சொன்ன சொல்லைச் செயலிலும் காட்டிவிட்டான்.

ரஞ்ஜீத்துக்குச் சொச்ச நச்சமிருந்த பந்தமும் அறுந்து விட்டாற் போல் இருந்தது. தங்கையும் போய்விடவே, தந்தையையும் தங்கையையும் கொன்ற குந்தனைப் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்தான்.

அந்த ஆத்திரம் அடங்கித் தந்தை தீயவழியில் சம்பாதித்த அத்தனை பொருளையும் அரசுடைமையாக்கிய பொழுது ரஞ்ஜீத்தின் மனத்தில், ''தீய வழியில் திரவியம் தேடிய தந்தைக்குத் தர்மாத்மாப் பட்டம் கிடைத்ததும், நல்ல வழியில் செல்ல வேண்டும் என்ற எனக்குப் படாப்பழியும் கிடைத்தனவே! இது என்ன நியாயம்?'' என்ற கேள்வி உறுத்தவே செய்தது.



தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி

16

சிவப்பு விளக்கைக் கவனிக்காமல் கபூர் காரை நேரே ஓட்டிச் சென்றபோது ஒரு ராணுவ லாரி மோத வந்து, காரை இடப் புறமாக ஒடித்து, மயிரிழையில் தப்பினார்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு போலீஸ்காரர் முளைத்தார். அவர் கையில் நோட்டுப் புக்குடன் வந்தார்.

"மன்னிக்கவும், ஏதோ ஒரு நினைவில் வந்து விட்டேன்" என்றார் கபூர்.

அவர் ஒன்றுமே கூறவில்லை. கார் நம்பரைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தார்.

கபூர் பையிலிருந்து பர்ஸை எடுத்து அதிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவரிடம் நீட்டினார். அவர் மௌனமாக அதை வாங்கிக் கொண்டார்.

"சட்டத்தை மீறுவதாக இருந்தாலும் இதற்குரிய கப்பத்தைச் செலுத்தியாகவேண்டும்" என்றார் கபூர் விஜயாவிடம்.

"கப்பத்தை அரசாங்கத்துக்குச் செலுத்தியிருக்கலாம்."

கபூர் அவளைச் 'சடக்'கென்று திரும்பிப் பார்த்தார். சில விநாடிகளுக்குப் பிறகு புன்னகை செய்தார். 'எதற்காகச் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்கலாமா என்று நினைத்தாள். அவருக்கு வேறு ஏதோ நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்திருக்கலாம். அல்லது நான் சொன்னது புத்திசாலித்தனமாகப் பட்டுப் பாராட்டுக்காக இருக்கலாம். மனச் சோர்விலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர் ஓரளவுக்கு அவ்வுணர்விலிருந்து விடுதலை பெற்றுப் புன்னகை செய்யும்போது, ஆறுதல் அடைந்து கொண்டிருக்கும் மனத்தைக் கண்டு நாமும் சந்தோஷமடையவேண்டியதுதான். அவர் புன்னகைக்குக் காரணமென்ன என்று கேட்பது விவேகமல்ல.

"நான் இப்பொழுது செலுத்தியதும் அரசாங்கத்துக்குத்தானே?" என்றார் கபூர்.

"அரசாங்கம் நாற்சந்தியில் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது" என்றாள் விஜயா.

"அரசாங்கம் இப்பொழுது நாற்சந்தியில் தான் இருக்கிறது. நான் இப்போது யாருக்குக் கப்பம் கொடுத்தேன் என்று எனக்குத் தெரியும். இது அவனுக்கு நாலுநாள் ரொட்டி! அரசாங்கத்துக்குக் கொடுத்திருந்தால் யாருக்குக் கொடுத்தேன் என்று எனக்குத் தெரியாது. இது பெருச்சாளிகளின் அரசாங்கம்" என்றார் கபூர்.

விஜயா புன்னகை செய்தாள்.

"நீ எதற்குச் சிரிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். பெருச்சாளிகளின் பிரதிநிதியாய் இருந்து கொண்டு நான் இப்படிச் சொல்வது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம். பணத்தின் அடிப்படையில் இயங்கும் ஒரு சமூகத்தில் பணத்தினால் கிடைக்கக் கூடிய அற்ப சௌகரியங்களையே வாழ்க்கை மதிப்புக்களாக மயங்குவது, சமூகத்தில் தன் உருவ வேட்டையாடும் ஒருவனுடைய பலஹீனம். தேவைகள் என்ற வலையை அவன் தன்னைச் சுற்றிப் பின்னிக் கொண்டே செல்கின்றான். இந்த வலையே அவனைச் சிறைப்படுத்தி விடுகிறது. பின் முடிவாக ஒரு நிலையை அடைந்த பிறகுதான், 'இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று அவனுக்குத் தோன்றுகிறது. எனக்கு நானே தளையிட்டுக் கொண்ட கைதி நான்...." என்றார் கபூர்.

அவர் தன்னிடம் இப்படி மனம் விட்டுப் பேசுவார் என்று விஜயா எதிர்பார்க்கவில்லை. வீட்டில் இன்று என்ன நடந்திருக்கும்? மிஸஸ் கபூர் பற்றித் தகவல் உண்டா என்பதற்கே அவர் பதில் கூறவில்லை. வேறு எதுவோ இவரை மிகவும் பாதித்திருக்கிறது. 'நான் நேற்றிரவு வீடு திரும்புவதாகத்தான் இருந்தேன். ஆனால்' என்று சொல்ல வந்தவர் அதைச் சொல்லாமல் தயங்கி, ஏதோ நினைவில் ஆழ்ந்து 'சிவப்பு விளக்கை'யும் தாண்டிப் போக முற்பட்டார். நேற்றிரவு என்ன நடந்திருக்கும்?

ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டல் வாசலில் காரை நிறுத்தினார் கபூர்.

"இதுதான் அந்த ஹோட்டல். அறை எண் இருநூற்றி ஏழு. அவள் பெயர் ஷம்மீன். நான் அனுப்பியதாகச் சொல். அவளிடம் நீ பேசுவதாயிருந்தால் பேசலாம். இதற்குப் பிறகு அவளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்று என்னிடம் சொல்ல வேண்டும். நீ புத்திசாலியான பெண். உன்னால் அவளை அளவிட முடியும் என்று நினைக்கிறேன்" என்றார் கபூர்.

''நான் போனவுடனே இந்தப் பணத்தை அவளிடம் கொடுத்து விட வேண்டுமா?''

''ஆமாம்.''

''நான் யாரென்று அவளிடம் சொல்லிக் கொள்வதா?''

கபூர் யோசித்தார். இதைப் பற்றி அவர் ஏற்கனவே சிந்திக்கவில்லை என்பது தெரிந்தது.

''என்னுடைய பி.ஏ. என்று சொல்...''

'டாஷ்போர்டில்' வைத்திருந்த கவரை எடுத்துக் கொண்டாள்.

''நிறையப் பணம் இருக்கும் போலிருக்கிறது'' என்றாள் விஜயா.

''நீ நினைப்பது சரிதான். நிறையப் பணம். பத்தாயிரம் ரூபாய்...'' என்றார் கபூர்.

விஜயாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை பணம் எதற்காகக் கொடுக்கிறார்? இந்தனை பணத்துக்குத் தகுதியான பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்.

''சரி. நான் போகிறேன். இதற்குப் பிறகு நேரே ஆபீசுக்குப் போ. ஏழு மணி மட்டும் எனக்காகக் காத்திரு. நான் அதற்குள் வராவிட்டால் நீ வீட்டுக்குப் போகலாம்.''

அவர் பர்ஸைத் திறந்து அவளிடம் நாலைந்து பத்து ரூபாய் நோட்டுக்களை நீட்டினார். ''தயங்காமல் வாங்கிக்கொள்.''

''இது எதற்குக் கப்பம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் விஜயா.

''இது கப்பமல்ல.... என்னிடமிருந்து நீ பணம் வாங்கிக் கொள்ளக் கூடாதா? இது உனக்குத் தேவையாக இருக்கும் என்று நினைத்தேன்.... உன்னிடம் பணம் இருந்தால் சரி.''

''இருக்கிறது.''

'' 'இது எதற்குக் கப்பம்' என்று கேட்டு விட்டாயே, உன்னையும் விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு ஈனமாய்ப் போய்விட்டேனா நான்?''

'' 'உன்னையும்' என்றால்?''

கபூர் சில விநாடிகள் பேசாமலிருந்தார். பிறகு சொன்னார்: ''அந்தப் போலீஸ்காரரை விலைக்கு வாங்கிவிடவில்லையா? இந்தச் சமாதானம் உனக்குத் திருப்தி அளிக்காது என்று எனக்குத் தெரியும். தயவுசெய்து கேள்விகள் கேட்காதே... எப்பொழுதாவது சமயம் வாய்த்தால் உன்னிடம் நீண்ட நேரம் பேச வேண்டும். பேசலாமென்றிருக்கிறேன்... நான் யாரிடமாவது பேச வேண்டும். என் பாஷையைப் புரிந்து கொள்கிறவர்கள் யாருமில்லை. உன்னால் முடியும் என்பது என் நம்பிக்கை. சரி... இறங்கு.''





விஜயாவுக்குத் தான் நினைப்பது சரிதான் என்று பட்டது. இந்தப் பெண்ணுக்கு இத்தனை விலை தர வேண்டுமென்றால்? — இப்பொழுதுள்ள உலகில் எந்த அழகும் இத்தனை விலைக்குத் தகுதியுடையது அல்ல... வேறு ஏதாவது வலுவான காரணம் இருக்க வேண்டும்.... 'பிளாக் மெயில்' என்பதில் சந்தேகமில்லை. கபூர் இந்தப் பெண்ணுடன் இந்த ஹோட்டலில் இருந்தார் என்பது அம்பலமாகி விட்டால், மோகினியிடமிருந்து விடுதலை பெறுவது பாதிக்கப்படலாம். இந்த 'விடுதலை'க்காகவா இவர் இத்தனை பணம் செலவழிக்கிறார்? அல்லது அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளவா? 'எனக்கு நானே தளையிட்டுக் கொண்டேன்' என்று எந்த அர்த்தத்தில் சொன்னார்? — பொதுப்படையான தத்துவார்த்தமாகவா? அல்லது ஏற்பட்டுவிட்ட ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றியா?—

'லாபி'யில் நல்ல கூட்டம். 'இன்டிமேட்' நறுமணம், செயற்கைப் புன்னகைகள், அவசரம், அவசரம்...இவ்வளவு பெரிய ஹோட்டலில் ஏன் இப்படி எல்லோரும் தலை தெறிக்க ஓடுகிறார்கள்?—

கபூர் குறிப்பிட்ட பெண் இரண்டாவது மாடியில் இருக்க வேண்டும். அறை எண்

207. 'லிஃப்டி'ல் ஏறிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. படி ஏறியே போய்விடலாம்.

விஜயா இரண்டாவது மாடிக்குச் சென்றாள். ஆறடி உயரத்துக்கு ஓர் இளைஞன் – பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தான் – பொம்மை போலிருந்த ஒரு பெண்ணின் இடையைச் சுற்றிக் கையை வளைத்துக் கொண்டு – இதழோரத்தில் சிகரெட் தள்ளாட, மிகச் சரளமாக ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு வந்தான். அவன் சொல்வன அனைத்தையும் அன்றுதான் அவள் புதிதாகக் கேட்பது போல், கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்திருக்க, அவள் புன்னகை செய்து கொண்டே வந்தாள். அவனுடன் விஜயாவுக்குப் பேச வேண்டும் போலிருந்தது.

''207ம் நெம்பர் அறை எங்கே இருக்கிறது?''

அவன் அந்தப் பெண்ணின் இடையினின்றும் கையை விலக்கி விஜயாவின் அருகில் வந்து, 'உனக்கு மட்டும் தான் இந்தப் பிரத்தியேகமான குரல்' என்பதுபோல், சுகாநுபவமான இனிமை கலந்த அந்தரங்கக் குரலில், ''இப்படி நேரே போய் இடப் பக்கமாகத் திரும்பினால், நாலாவது அறை'' என்று சொல்லிவிட்டுப் புன்னகை செய்தான்.


''தாங்க்யூ'' என்றாள் விஜயா.

''யூ ஆர் வெல்கம்.''

அவன் மறுபடியும் அந்தப் பெண்ணின் இடையில் கையைச் சுற்றிக் கொண்டு போய் விட்டான்.

பெண்களிடம் இப்படித்தான் பேசவேண்டுமென்பது இந்த இளைஞனின் இயல்பாக இருக்கக் கூடும். இவன்





குதிரை மொழி!

ஆங்கிலேயரான ஹென்றி பிளேக் நாற்பது ஆண்டுக்கால ஆராய்ச்சிக்குப் பின்னர், குதிரை வளர்ப்பவர்களுக்கும் குதிரைப் பந்தய வீரர்களுக்கும் உதவும் விதத்தில் குதிரைகளின் மொழி பற்றிய அகராதி ஒன்றைத் தயாரித்திருக்கிறார். அதன் மூலம் குதிரைகளின் சமிக்ஞைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம் என்று அவர் கூறியுள்ளார். குதிரை ஒருவர் பக்கம் திரும்பி, மிருதுவாக மூச்சு விட்டால் அந்தக் குதிரை அவரை வரவேற்கிறது என்று அர்த்தமாம். தமது மகிழ்ச்சியையோ வெறுப்பையோ தெரிவிப்பதற்குக் குதிரைகள் பல்வேறு விதமான ஒலிகளை எழுப்புமாம். கோபத்தையும் எரிச்சலையும் அவை நரம்புகளை நெரித்துக் காட்டுவதன் மூலமும் நன்றாக உதைப்பதன்மூலமும் வெளிப்படுத்துமாம்!

நியூடைம்ஸ்

இந்தத் துறையில் வாழ்க்கையில் அடையப் போகின்ற வெற்றிகள் எத்தனை எத்தனையோ — இந்தப் பெண் அவனுடைய காதலியாக இருக்க முடியாது. காதலியாக இருந்திருந்தால், அவன் என்னிடம் நெருங்கி அந்தரங்கமான குரலில், அந்தக் கணத்தில் எனக்குப் பணி செய்து கிடப்பதே அவன் வாழ்க்கையின் இலட்சியம் என்ற பாவனையில் பதில் சொல்லியிருக்க மாட்டான். அந்தப் பெண்ணின் அலங்காரத்தைப் பார்க்கும்போது ... நான் பார்க்கப் போகும் பெண் ரகத்தைச் சேர்ந்தவளாகத்தான் இருக்க வேண்டும். இந்த இளைஞன் சார்பில் யார் இவளுக்குப் பணம் கொண்டுவந்து கொடுக்கப் போகிறார்களோ!

இது என்ன பைத்தியக்காரத்தனம்? கபூர் எத்தனை நாட்களுக்கு இந்தப் பெண்ணுக்குப் பணம் கொடுத்துக் கொண்டே இருக்கப் போகிறார்? பணத்தின் ருசியைக் கண்டவர்கள் அவ்வளவு இலேசில் விட்டு விடுவார்களா? 'ஆமாம்! இந்தப் பெண்ணோடு நான் ஹோட்டலில் இருந்தது வாஸ்தவம்தான்' என்று ஒப்புக் கொண்டு விட்டால் என்ன? வயதானவர்களுக்குச் சபலம் ஏற்படக் கூடாது என்பது என்ன சட்டம்? — நம்முடைய பழைய சமூக மரபில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதானே?

இதோ... இதுதான் 207ம் நெம்பர் அறை. அவள் 'காலிங் பெல்'லை இலேசாக அழுத்தினாள். சில விநாடிகள் பேசாமல் இருந்தாள். மறுபடியும் அழுத்தினாள்.

சிறிது நேரத்துக்குப்பிறகு கதவு திறந்தது. கபூரின் சபலத்தைக் குற்றம் சொல்வதில் பயனில்லை. மிக அழகான பெண்தான்.

''எஸ்...?''

''மிஸ்டர் கபூர் என்னை அனுப்பினார்.''

அவள் புன்னகை செய்தாள். ''உள்ளே வாருங்கள்.''

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக அந்தப் பெண் இருந்தாள். பார்ப்பதற்கு ஒரு குடும்பப் பெண்போல் தோற்றம். ஆரவாரமில்லாத 'மேக்-அப்'. இயற்கையிலே அழகு தனக்கு மூலதனமாக இருக்கும்போது செயற்கைச் சாதனங்களை எதற்காக நாடவேண்டுமென்பது அவள் கொள்கையாக இருக்கலாம்.

''மிஸ்டர் கபூருக்கு நீங்கள்....'' என்று சொல்லிக் கொண்டே சோபாவில் உட்கார்ந்தாள்.

விஜயாவும் அவள் எதிரே உட்கார்ந்தாள்.

''பி. ஏ.''

''ஓ! ஐ ஸீ... மிஸ்டர் கபூரின் ரசனையை நான் பாராட்டுகிறேன்.''

''நானும்....'' என்றாள் விஜயா.

அந்தப் பெண் வாய் விட்டுப் பெரிதாகச் சிரித்தாள். ''யு ஆர் வெரி ஸ்மார்ட்... என் பெயர் ஷம்மீன். உங்கள் பெயர்?''

''விஜயா.''

''நீங்கள் மதராஸைச் சேர்ந்தவரா? மதராஸிப் பெண்களுக்குத்தான் கண்கள் இவ்வளவு அழகாக இருக்கும்.''

விஜயா கைப்பையைத் திறந்து கபூர் கொடுத்த கவரை அவளிடம் நீட்டினாள்.

ஷம்மீனின் முகத்தில் ஒரு விநாடி நேரம் வியப்புடன் கலந்த கலவரம் தோன்றியது. பிறகு சமாளித்துக் கொண்டாள்.

''ஓ... எஸ். மிஸ்டர் கபூர் கொடுத்தாரா? தாங்க் யூ.'' என்றாள் ஷம்மீன்.

அவள் அது ஏதோ உபயோகம் இல்லாத காகிதம் போல் அலட்சியமாகத் தன் பக்கத்தில் தூக்கிப் போட்டாள்.

சில கணங்கள் அங்கே சங்கடமான அமைதி நிலவியது.

பிறகு ஷம்மீன் விஜயாவைக் கேட்டாள், ''காப்பி குடிக்கிறீர்களா?''

''ஆட்சேபணை இல்லை. தாங்க் யூ.'' — ஷம்மீன் ஃபோனில் காப்பி கொண்டு வரும்படி சொன்னாள்.

''மிஸ்டர் கபூர் உங்களிடம் ஏதாவது சொன்னாரா?'' என்று அவள் விஜயாவைக் கேட்டாள், மிகவும் கஷ்டப்பட்டு வரவழைத்துக் கொண்ட சுபாவமான குரலில்.

''இல்லை.''

''மிஸ்டர் கபூர் சார்பில் இத்தனை பணத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தீர்களே, இது எதற்காக என்று உங்கள் ஆவலைத் தூண்டவில்லையா?''

''வியாபார உலகில் ஆவலைத் தூண்டும் பல விஷயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஆச்சரியமடைந்து, 'இது எதற்காக?' என்று அறிய முற்பட்டால், முடிவே இருக்காது. குழப்புதான் மிஞ்சும்'' என்றாள் விஜயா.

''இந்த மாதிரி எத்தனை பெண்களுக்குப் பணம் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள்?'' என்று புன்னகையுடன் கேட்டாள் ஷம்மீன்.

''இன்றுதான் வேலைக்குச் சேர்ந்தேன்.. நீங்கள்தான் முதல் பெண்'' என்றாள் விஜயா.

''மை காட்!... முதல் நாளிலேயே என்ன அநுபவம் உங்களுக்கு!... இந்த மாதிரி நிலை



டி. வி. எஸ். நிறுவனத்தின் ஊழியர்களுக்கான சம்பள உறையின் மேல் உள்ள வாசகம்: ''உலகிலேயே மிகவும் கடினமான காரியங்கள் இரண்டு. ஒன்று, நல்லவன் என்று பெயர் எடுப்பது. இரண்டாவது, எடுத்த பெயரைக் காப்பாற்றிக் கொள்வது.''

—சுந்தர்

மும் ஓர் அநுபவம் இருக்குமென்று எதிர் பார்க்கிறீர்களா?''

''நீங்களும் அப்படித்தான் எதிர்பார்க்கிறீர்களா?'' என்று கேட்டாள் விஜயா.

''அப்படியானால் உங்களுக்கு ஏதோ கொஞ்சம் தெரியும் என்று அர்த்தமா?''

அப்பொழுது வாசல் மணி ஒலித்தது. ஷம்மீன் எழுந்துபோய்க் கதவைத் திறந்தான்.

ரத்தன்லால்!

அவன் விஜயாவைப் பார்த்ததும், புருவங்களை உயர்த்திச் சிறிது நேரம் யோசித்தான்.

''நாம் சந்தித்திருக்கிறோம், இல்லையா?'' என்று கேட்டான் ரத்தன்லால்.

''ஆமாம்... நானும் மிஸஸ் கபூரும் அன்றிரவு உங்கள் விடுதியில் உங்களைப் பார்க்க வந்தோம்.''

''எஸ்...எஸ்... ஞாபகம் வருகிறது.... நீங்கள் மிஸஸ் கபூரின் காரியதரிசி, அப்படித்தானே?''

''மிஸஸ் கபூரின் காரியதரிசியா? மிஸ்டர் கபூரின் காரியதரிசி என்றல்லவா இப்பொழுது சொன்னீர்கள்?'' என்று கேட்டான் ஷம்மீன்.

''நீங்கள் இரண்டு பேரும் சொல்வது சரிதான். மிஸஸ் கபூரின் காரியதரிசியாய் இருந்தேன். இப்பொழுது மிஸ்டர் கபூரின் காரியதரிசி.''

ரத்தன்லால் சோபாவில் உட்கார்ந்தான். அவன் பக்கத்தில் இருந்த கவரை எடுத்துப் பார்த்தான்.

''என்ன இது?'' என்று அவன் ஷம்மீனைக் கேட்டான்.

''நான் அதைத்தான் கொண்டு வந்தேன். மிஸ் ஷம்மீனிடம் கொடுக்கும்படி மிஸ்டர் கபூர் என்னை அனுப்பினார்.''

ரத்தன்லால் பொருள் பொதிந்த பார்வை ஒன்றை ஷம்மீன் மீது செலுத்தினான்.

ஷம்மீன் அவன் பார்ப்பதைக் கவனிக்கவில்லை. அவன் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். 'மிஸஸ் கபூரின் காரியதரிசி' என்பது அவனைப் பாதித்திருக்க வேண்டும் என்று பட்டது விஜயாவுக்கு.

''மிஸ்டர் கபூருக்கு என்று முதற்கொண்டு நீங்கள் காரியதரிசியாக இருக்கிறீர்கள்?''

''இன்று முதற்கொண்டு.''

சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தவன் 'சடக்'கென்று அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''இன்று முதற்கொண்டா?''

''ஆமாம்.''

வாசல் மணி ஒலி மறுபடியும் கேட்டது. ஷம்மீன் கதவைத் திறந்தான்.

காப்பி. அதைக் கொண்டு வந்தவன் அங்கு போடப் பட்டிருந்த சிறிய மேஜையில் 'டிரே'யை வைத்ததும், ரத்தன்லால், அவனிடம் சொன்னான்: ''ஒரு ஸ்காட்ச்... சோடா கொண்டு வா.''

''இந்த நேரத்திலா?'' என்று கேட்டான் ஷம்மீன்.

''எனக்கு எல்லா நேரமுமே 'ஸ்காட்ச்' நேரந்தான்....மேலும் எனக்கு அது இப்பொழுது மிகவும் தேவை. மிஸ் விஜயா என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறாள்'' என்றான் ரத்தன்லால்.

''நான் உங்களை எந்த விதத்தில் அதிர்ச்சிக்குள்ளாக்கினேன்?'' என்று கேட்டாள் விஜயா.

ஷம்மீன் காப்பியைக் கலந்து கொண்டே கேட்டான்: ''மிஸ் விஜயா... மிஸஸ் கபூரைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

அவன் எதற்காகக் கேட்கிறான் என்று விஜயாவுக்குப் புரியவில்லை. (தொடரும்)



சாதாரணமாகக் கல்கியில் ஸ்ரீமதி என்றுதான் பார்த்திருக்கிறேன். ஆனால் ஜூலை 13 கல்கி இதழ், 29-ம் பக்கத்தில், 'திருமதி' என்று பல இடங்களில் காண்கிறது. இது பற்றி ராஜாஜி கருத்து:

''ஸ்ரீமான் என்பது திருவாளர்; ஸ்ரீமதி என்பது திருவாட்டி. 'ஸ்ரீ'யை மட்டும் 'திரு' வாக்கி விட்டு, 'மதி'யை அப்படியே வைத்துக் கொள்வது, 'புத்திமான்' என்பதை 'அறிவாளர்' என்று சொல்லாமல், 'அறிவுமான்' என்று சொல்கிற மாதிரி.''

காஞ்சிப் பெரியவாள் கூறியது: ''முன் காலங்களில் திருவண்ணாமலை, திருவேங்கடம் மாதிரி புண்ணிய ஸ்தலங்கள், திருநாவுக்கரசர், திருமழிசையாழ்வார் மாதிரி மகான்கள், திருவாய்மொழி திருமுறை மாதிரி புண்ணிய கிரந்தங்கள், திருமால், திருச்சிற்றம்பலமுடையார் மாதிரி தெய்வப் பெயர்களுக்கு மட்டும்தான் 'திரு' என்று டைட்டில் கொடுத்தார்கள். கல்வெட்டுக்களைப் பார்த்தால் தெரியும். சாதாரண மனுஷ்யர் எவருக்கும் 'திரு' போட்டதேயில்லை. சோழ, பல்லவ ராஜாக்களுக்குக்கூட 'திரு' கிடையாது; 'ஸ்ரீ'தான் போட்டிருக்கும். ரொம்ப உயர்ந்த விஷயங்களுக்கு மட்டுமே ஆதியில் உபயோகப்படுத்தின 'திரு'வை இப்போது சர்வ சகஜமாக்கி மட்டம் தட்டுகிறோம்.''

அம்பத்தூர்
10-7-75 ரா. கணபதி

திரு கண்ணதாசனின் கட்டுரைகளை விடாமல் படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். அவருடைய அறிவுரைகள் அடங்கிய ஒவ்வொரு கட்டுரையும் அக்ஷர லக்ஷம் பெறும். அவருடைய கட்டுரைகளுக்கு முதல் பக்கம் அளிக்க வேண்டும்; அப்படியிருக்க ஏனோ அக்கட்டுரைகளுக்குக் கடைசிப் பக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை கல்கி இதழின் கடைசிப் பக்கம் வரையும் எல்லாமே சிறப்புற்றிருக்கின்றன என்பதை ருஜுப்படுத்தவா?

டால்மியாபுரம்
11-7-75 சி. ஆர். திருவேங்கடத்தான்







படித்தோம், சொல்கிறோம்!

கண்ணன் கனியமுதம்

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களுக்குள் கிருஷ்ணாவதாரமே பரந்தாமனின் பூர்ணாவதாரம் எனப்படுகிறது. கிருஷ்ணாவதாரத்தில் பகவான் தம் சக்தியைச் சுருக்கிக் காட்டவில்லை; பெருக்கிக் காட்டினார். நேருக்கு நேர் மானிடர்களுக்கு, கடவுள் சொரூபமாகவே தோன்றி துஷ்ட நிக்ரஹமும், சிஷ்ட பரிபாலனமும் செய்தார். பிறந்த சிசுவாயிருந்தபோதே தெய்விகத் திருவிளையாடல்களைப் புரிந்தார்.

பால கோபாலனின் தெய்விக லீலைகளை விரிவாக எடுத்துச் சொன்னவர் சுகப்பிரும்ம ரிஷி — அதுதான் புனித கிரந்தமாகப் போற்றப்படும் ஸ்ரீமத் பாகவதம். பாண்டவர்களின் பேரனான பரீட்சித்து மகாராஜா ஒரு முனிவரின் சாபத்தினால் மரணத்தின் தலைவாசலில் நிற்கிறான்; சாபத்தை மாற்ற முடியாதென்றாலும், சாபத்தினால் ஆன்மாவுக்கு ஏற்படும் தாபத்தையும், துர்மரணமான பாபத்தையும் தீர்த்து வைக்கும் அரிய மார்க்கத்தைச் சுகப்பிரும்ம ரிஷி அவனுக்கு அருளிச் செய்கிறார். ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திவ்விய மங்கள சரித்திரத்தை அவனுக்குச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார் — அதுதான் ஸ்ரீமத் பாகவத சப்தாகம் — அதாவது சாபத்தினால் பரீட்சித்து மன்னன் மரணத்தை எதிர்நோக்கியிருந்த ஏழு நாட்களும் பகவானின் திவ்விய சரித்திரத்தைப் பக்தியுணர்வோடு கேட்டான். பெறலரும் பேறான பரமபதப் பேற்றைப் பெற்றான்.

சின்னஞ் சிறு குழந்தைகளைப் பண்படுத்தும் அரிய பணியைச் செய்து வரும் ''கோகுலம்'' பத்திரிகையில் ''கண்ணன் கனியமுதம்'' என்ற தலைப்பில் பரந்தாமனின் பால லீலைகளை, கண்ணன் அவதாரத்தில் தொடங்கி, ருக்மிணி கல்யாணம் வரையில் தொடர்ச்சியாக எழுதி வந்தார் திருமுருக கிருபானந்த வாரியார். மேற்படி கட்டுரைகளைத் தொகுத்து அழகிய நூல் வடிவாக வானதி பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. குழந்தைகள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய கண்ணனைப் பற்றிய சுவையான சின்னச் சின்னக் கதைகள் அழகிய படங்களுடன் காணப்படுகின்றன. பெரியவர்களும் படித்து நினைவுபடுத்திக் கொள்ளலாம். அதை விடக் குழந்தைகளைக் கூட்டி வைத்துக் கொண்டு படித்துக் காட்டினால் இரட்டிப்பு லாபம், புண்ணியம். ஓவியர் சிறு அவர்களின் மூவர்ண ஓவியம் நூலுக்கு அழகு செய்கிறது.

பிரசுரம்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17. விலை ரூ. 5.00.

— லோமால்

மெல்லத் திறக்கும் மனக் கதவு

தென்றலைப் போலத்தான் மலர்மன்னனின் தமிழ் நடையும். உணர்ச்சிகளைக் கொட்டிக் குவிக்காமல் மெல்ல மெல்லத் திறந்து காட்டும் தமிழ் நடை. ஆனால் வாரப் பத்திரிகையின் தேவைக்கேற்ப அத்தியாயத்துக்குஅத்தியாயம் ஆவலைத் தூண்டிவிடும் வகையிலும் சென்றிருக்கிறது இச்சிறு நவீனம்.

கதாநாயகி மாலதி. அவளைக் காதலிக்கும் ரகுராமன் இளம் பிராயத்தில் விளையாடினவன். அதை அறிந்தும் மாலதி அவனை முதலில் புறக்கணித்துப் பின்னர் ஏற்பதற்குக் காரணம் ரகுராமனின் அம்மாவே தவிர அவளது காதல் இல்லை; அதே நேரத்தில் ரகுராமனது காதலைக் குறைகூறுவதற்கில்லை.

மாலதியோடு வேலை பார்க்கும் தோழி மைதிலி உப கதாநாயகி. சத்துருவைக் காதலிக்கும் அவள் தனது காதல் உதறப்பட்ட பொழுது, இளம் பருவத்து ரகுராமன் போல் ஆகிச் சமூகத்தைச் சிந்திக்க வைக்கிறாள். ரகுராமனும் அவளுக்குச் சளைக்கவில்லை, சிந்திக்க வைப்பதில்.

மாலதியைக் கல்யாணம் செய்துகொள்ளும் ஆசையில் ரகுராமன் தனது நண்பனை பத்திரிகை நிருபர் பணிக்காகத் தூது அனுப்பும் கட்டத்தில் கதை, பணிக்கருக்காகவும் கதைப் பணிக்காகவும் நீளுகிறது.

மாலதி, மைதிலி இருவருடைய குடும்பங்களும் நடுத்தரக் குடும்பங்கள்; பெண்கள் வேலைக்குப் போயே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலையில் உள்ள குடும்பங்கள். மாலதியின் அப்பா பக்கவாத நோயில் படுத்தவர்;

இருந்தாலும் பெண், வேலை பார்த்துக் குடும்பம் நடத்துவதை சனமாக நினைப்பவர். அவரது ஆத்திரமும் ஆதங்கமும் இயல்பான போக்கில் சித்திரிக்கப்பட்டு மனத் தத்துவப் பாங்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அதே போல் மைதிலியின் தந்தை சுண்டல் பட்டாணி விற்பவர். அவரது அழுத்தம் அவரது குணநிசயங்களைச் சிறப்பிக்கிறது.

படங்கள்—இடமிருந்து வலமாக: "மலர் மன்னன்"; ம. பொ. சி.; வாரியார் சுவாமிகள்; சாகித்ய அகாதமி சின்னம்.

சொல்லப் போனால் கதையின் இவ்விரு பாத்திரங்களுமே அதிக உயிர் உள்ளவை.

கல்யாணத்தில் முடித்த கதையைத் துயர முடிவாக்கும் வரை வளர்த்திருப்பது எப்படியோ இருந்தாலும் மாலதியின் மன உளைச்சல்களைச் சித்திரித்து, ரகுராமனுக்குக் கற்புச் சேர்ப்பித்து நிறையுறை கதையாகக் கருத்துச் செறிவோடு கொண்டுபோயிருப்பது கதை ஆசிரியரின் வெற்றிக்குச் சான்று பகருகிறது.

பிரசுரம்: கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17. விலை ரூ. 4.00.

* * *

புதுமைக் கதாசிரியர் மலர்மன்னன் (புத்தமைக் கதாசிரியர் அல்ல) மற்றுமொரு புதுமையும் செய்யப் புகுந்திருக்கிறார். புதுமையான இலக்கிய முயற்சிகளுக்கு ஆக்கமளிக்கும் வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு புத்தகம் வெளியிடும் 'சலஞ' என்ற அமைப்பைத் தோற்றுவித்திருக்கிறார். சலஞ, தான் பிரசுரிக்கும் நூல்களை ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மொழிபெயர்க்கும் பணியையும் ஏற்கிறது. தமிழ்ப் புத்தகங்களைப் பொறுத்த மட்டில் ஆண்டுச் சந்தா ரூ. 30. சலஞத்தில் ஆரம்பித்து இயக்கமாக வேகம் பெற இலக்கிய அன்பர்களுடைய மனக் கதவு திறப்பதுடன் மணிபர்ஸும் திறக்க வேணும்! — ரா. வீ.

விலாசம்: 33, நல்லதம்பி முதலி தெரு, சென்னை—600 005.

National Bibliography of Indian Literature Vol. IV

புதுதில்லி சாகித்திய அகாதெமி செய்து வந்த அடக்கமான நல்ல காரியம் ஒன்று இப்போது பூர்த்தியாகி யிருக்கிறது. பதினாறு இந்திய மொழிகளில் 1901 முதல் 1953 வரை வெளியான அத்தனை இலக்கிய நூல்களையும் பற்றிய தகவல் களஞ்சியமே இது. மொத்தம் நான்கு தொகுதிகள். ஒவ்வொரு மொழியிலும் அகராதி, கலைக்களஞ்சியம், ஆன்மிகத்துறை, சமூகவியல், மொழி நூல், கலை, இலக்கியம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, பயணம் என்று பல பிரிவுகளில் எழுதப்பட்டுள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை இந்நான்கு தொகுதிகளிலும் காணலாம்.

கடைசியாக வெளிவந்துள்ள நான்காவது தொகுதியில் (800 பக்கம் விலை ரூ. 50), தமிழ், தெலுங்கு, சிந்தி, உர்தூ மொழி நூல்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன. பலகாலம் தேசிய நூலகராகப் பணியாற்றிய நூலக இயல் நிபுணர் டாக்டர் பி. எஸ். கேசவன் அவர்களை ஆசிரியர் குழுத் தலைவராகக் கொண்டு ஒவ்வொரு மொழிக்கும் பல அறிஞர்களும் நூலகர்களும் உதவ, உருவான முயற்சி இது. தமிழ் மொழி விவரங்களுக்குப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் பெரிதும் உதவியுள்ளார்.

இத்தகைய விவரநூல் ஆராய்ச்சியாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரிதும் பயன்படும். உதாரணமாகத் தமிழ் மொழியும் இலக்கியமும் அரை நூற்றாண்டு காலத்தில் எந்த எந்தத் துறைகளில் எவ்வளவு தூரம் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை அறிய இந்த நூல் ஓர் உரைகல். பள்ளிப் பாட நூல்கள் போன்றவைகளை விலக்கி இந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழில் வெளிவந்த சுமார் 5000 புத்தகங்களைப் பற்றிய விவரங்களை இதில் காண்கிறோம்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை விட முற்பகுதியில் பல நல்ல நூல்கள் வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது!

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய முயற்சி இது என்றும் இப்போது இது நிறைவேறுவதுபோல், சுதந்திரத்துக்குப் பிறகு இருபது ஆண்டுகளில் வெளியான நூல்களையும் இதேபோன்று தரம் பிரித்துத் தொகுத்துப் பார்க்க வேண்டியது அவசியம் என்றும் முன்னுரை யோசனை கூறுகிறது.

இவ்வளவு பெரிய முயற்சி பாராட்டத்தக்கதானாலும், முதல் முயற்சி என்பதாலோ என்னவோ, சில குறைகளும் தென்படுகின்றன. உதாரணமாக கல்கி அவர்களின் அரிய மொழிபெயர்ப்பு நூல்களான, 'கைராட்டை', 'யுவ பாரதம்' என்பனவற்றைக் குறிப்பிடும் இந்த நூல் அவரது படைப்புகளான 'தியாக பூமி'யையும், 'கள்வனின் காதலி'யும் பற்றிக் கூறவில்லை! அவரது பெயரில் 1953ம் ஆண்டில் வெளி வந்ததாகக் காணும் 'இமய வெற்றி' என்ற நூல் வேறு ஒரு ரா. கிருஷ்ணமூர்த்தியினுடையதாக இருக்க வேண்டும்.

விலாசம்: சாகித்திய அகாதெமி, சென்னை—6.

— கி. ரா.

எனது போராட்டங்கள்

தலைவர் ம. பொ. சி. ஒரு நல்ல காரியம் செய்தார். அவர் வாழ்க்கை வரலாற்றை அவரே எழுதி வைத்து எதிர்கால மக்களுக்கு அரும் செல்வத்தை வழங்கியிருக்கிறார்.

எழுபதாண்டை எட்டிப் பிடித்துள்ள ம. பொ. சி. அவர்கள், மிக மிக ஏழைமைப்பட்ட குடும்பத்தில் தோன்றி, ஐம்பதாண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, தமிழ் கூறும் நல்லுலகமெங்கிலுமுள்ள கற்றோர்கள்

பெரியோர்கள் பெரிதும் மதிக்கும் அளவுக்கு உயர்ந்திருக்கிறார் என்றால் அந்த வாழ்க்கை வரலாறு யாவரும் வியந்து வரவேற்கத் தகுந்த காரியமன்றோ!

திரு ம. பொ. சி. அவர்கள் பாரத நாடு காந்திமகான் தலைமையில் சுதந்திரத்துக்காகப் போராடிய காலத்தில் அதில் தீவிர பங்கு பற்றிச் செயல்பட்டிருக்கிறார். அந்தக் கால கட்டத்தைப் படிக்கும் போது, நாம் தமிழ் நாடு முக்கியமாக சென்னை — காங்கிரஸ் வளர்ந்த வரலாற்றைப் படிப்பதாகவே உணர்கிறோம்.

திரு ம. பொ. சி. கள் இறக்குவோர் குலத்தில் பிறந்தவர். ஆயினும் இவர் மதுவிலக்கில் ஈடுபாடு கொண்டதால் அக் குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பாகவே இவரை உற்றார் உறவினர் கருதினர்! இந்தத் தொடக்க கால நிகழ்ச்சிகளைப் படிக்கும் போது மெய்சிலிர்க்கவே செய்கிறது.

இளமைப் பருவத்திலே அச்சுத் தொழிலாளியாகச் சேர்ந்து குடும்பப் பொறுப்பை ஏற்றார். தேச பக்தியையும் வளர்த்துக் கொண்டார். அக் காலத்தில் ஒன்றுக்கொன்று முரணாக இருந்த இவ்விரு அம்சங்களையும் எவ்வளவு கஷ்டப்பட்டு நிர்வகித்து வந்தார்' என்பதைப் படிக்கும் யாருடைய கண்களும் பனிக்கத்தான் செய்யும்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சரித்திரத்தில், 1944–46-ம் ஆண்டுகளில் ராஜாஜியை காங்கிரஸுக்குள் வரவிடாமல், அன்று காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றியிருந்தவர்கள் நடந்து கொண்ட அருவருக்கத்தக்க நடைமுறைகளை விளக்குகிறார். அதனை எதிர்த்து ராஜாஜிக்கு ஆதரவாகத் தாம் செயல்பட்டதையும் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்.

பாரதம் சுதந்திரம் அடைந்த பின்னர் மாநில சுய நிர்ணய உரிமைக்காகப் போராடியதையும், தி. மு. க. ஆதரவுடன் சட்டசபையில் பிரவேசித்ததையும் மிகச் சமீப காலத்திய நிகழ்ச்சிகளானாலும் மிக விரிவாகவே எழுதியிருக்கிறார்.

ம. பொ. சி.யின் அன்னையார் காலமான போது, அவருக்கு ராஜாஜி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அது பின் வருமாறு:

அன்பும் வணக்கமும்.

பூஜைக்குரிய முதியவரும் அன்புக்குரிய தாயாரும் மறைந்துவிட்ட செய்தி பத்திரிகையில் பார்த்தேன்.

ஆறுதல் மொழிகள் என்ன எழுத முடியும்? சொல்ல வேண்டியதெல்லாம் சாஸ்திரங்கள் சொல்ல, தினமும் படித்து வருகிறோம். ஆயினும் மனத்தில் ஏற்படும் துன்பம் பூவின் மணம்போல் அதைவிட்டு அகலாது. அகலவும் வேண்டியதில்லை.

எப்போதும் அன்புடன்
இராசகோபாலாச்சாரி.

ம. பொ. சி.யின் அரசியல் பேச்சை ராஜாஜி எவ்வளவு ரஸிப்பாரோ, அவ்வளவு அவரது இலக்கியப் பேச்சையும் ரஸிப்பார். எந்த இலக்கியப் பகுதியையும் தமது அனுபவப் பட்டறையில் தட்டிக் கொட்டிச் செப்பனிட்டு வழங்குபவர் ம. பொ. சி. என்பதால் ராஜாஜிக்கு அவரிடம் பேரன்புண்டு. அதன் விளைவாக சம்பிரதாய இரங்கல் கடிதமாக அன்றி, இலக்கிய நயம்பட ஓர் அற்புத இரங்கல் கடிதம் படைத்து விட்டார் ராஜாஜி. இதிலிருந்து ஒருவரை யொருவர் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறதல்லவா?

டாக்டர் வரதராஜுலு நாயுடு, தேசபக்தர் ஸத்தியமூர்த்தி, ஆதிகேசவலு நாயக்கர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், மதுரை வைத்தியநாதய்யர், திரு. வி. க. போன்ற பெருந்தலைவர்களுடனும், இன்றுள்ள தலைவர்களுடனும் நாம் உறவாட நினைத்தால் ம. பொ.சி.யின் 'எனது போராட்டங்கள்' அதற்கு அரியதொரு வாய்ப்பளிக்கிறது. சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட, சுவை மிக்க நூல் என்றாலும் ம. பொ. சி. ஒரு 'காமா' போட்டுத்தான் நிறுத்தியிருக்கிறார்.

அடுத்த பாகத்தை ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கிறது இந்த முதல் பாகம்.

எஸ்.வி.எஸ்.

பிரசுரம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை–4. விலை ரூ. 25.00.

பாசறைக் கவிதைகள்

தமிழகத்தில் கவிஞர்கள் பெருகியுள்ள அளவுக்கு அவற்றைத் தாங்கி வர ஏடுகள் இல்லை. ஆதரவு தருவாரும் அதிகமில்லை. இந்நிலையில் செங்கை அழகன் ஏராளமான கவிஞர்களை எழுதச் சொல்லி இரு தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். ஆயிரம் மலர்கள் (ரூ. 12.00) பாசறைக் கவிதைகள் (ரூ. 4.00) என்று பெயர் கொண்டன இந்நூல்கள். கவிதைத் துறையில் ரசனையை வளர்க்க உதவும் நல்ல முயற்சி. ஆயிரம் மலர்கள் என்ற நூலில் காகிதப் பூ. மலர் மங்கை உள்பட ஏராளமான மலர்களைப் பற்றிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பாசறைக் கவிதைகள் என்ற நூலிலிருந்து மாதிரிக்கு ஒரு கவிதையைக் கீழே காணலாம். (விலாசம்: பாவலர் பாசறை, 5/2, பங்களாத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600002).

அரசியலைச் சாக்கடையென்
றுய்த்து சொன்னார்
ஆள்கின்ற குடியாட்சி
என்னைச் சொன்னார்

வரலாறும் பொருளியலும்
வாட்டம் வந்த
வழிவகையும் அறியார்கள்
வாக்குத் தந்தார்.

ஏமாற்றும் கலையறிந்தார்
இனிதே வென்றார்.
ஏமாந்தார் ஏதொன்றும்
அறியார் பாவம்!

ஏனித்தக் குடியாட்சி
இந்த நாட்டில்?
எல்லோரும் கற்றிருந்தால்
அன்றோ நன்றும்?

நம்மை நாம் ஆள்கின்றோம்
நாட்டில் மேன்மை
நயந்திடுவோம்; நலம் விளையக்
கண்டோ மில்லை.

நம்மையாண் டிடவந்தார்
நலமே பேசி
நமைமறந்து தந்நலத்தில்
நாட்டம் கொண்டார்.

உலகத்தை வாழ்விக்க
ஓடி வந்தார்
உதட்டளவில் மேடையிலே
உரக்கப் பேசிக்

கலகத்தை மூட்டிவிட்டுக்
கட்சி சேர்த்துக்
கடைவிரித்துக் காலத்தைக்
கழித்தார் கண்டோம்.

நேற்றிருந்தார் ஓரணியில்
நிலைகொள் ளாமல்
நித்தமொரு கட்சியென
நின்றி ருந்தார்.

கூற்றுகளைத் தொகுத்துவைத்துக்
கொஞ்சம் ஆய்ந்தால்
கோமாளிக் கூத்தெல்லாம்
புரிந்து போகும்

கொள்கையென்பார் கூச்சலிட்டு
நம்மைக் காக்கக்
குதித்துவந்தார் போல்பேசிக்
கொழுத்தார் இந்நாள்!

கொள்கையென்ன? குடியாட்சிக்
கோலம் என்ன?
குறுமதியார் வெல்லுமிந்தக்
'குடிகள்' ஆட்சி!

—பாவலர்
வை. பூ. சோமசுந்தரம்

அறிமுகம்

காலாண்டுப் பத்திரிகைகள் சிலவற்றை இங்கு நேயர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். சர்வோதயா என்ற ஆங்கில சஞ்சிகையின் சமீபத்திய இதழில் மக்கள் உரிமைகள், பூதானம் பற்றிய அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் உள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது இவ்வாண்டு மார்ச் மாதம் புது தில்லியில் மாபெரும் ஊர்வலம் நடத்திய பின் ஜே. பி. சமர்ப்பித்த கோரிக்கைகள் இவ்விதழில் முழுமையாக அச்சாகி யிருப்பது.

ஜே. பி. யை இன்னமும் குறை கூறிக் கொண்டிருக்கும் சிலர் இதனை ஒருமுறை படித்தால் போதும். ஜனநாயகம் தழைக்கவும், பொருளாதாரம் செழிக்கவும் ஏற்ற யோசனைகள் இவைவிடச் சிறந்தனவாக வேறு இருக்க முடியாது என்பதை நன்கு உணரலாம்.

விலாசம்: சர்வோதய பிரசுராலயம், பூங்குன்னம், திருச்சூர்,-680002.

பம்பாயில் தேசிய கலைக் கேந்திரம் என்ற நிறுவனம் தரமான நடனம், நாடகம், இசை நிகழ்ச்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

இந்த நிறுவனம் மேடைக் கலைகளின் பல்வேறு அம்சங்களையும் பற்றி அபூர்வமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி வரும் ஒரு சஞ்சிகையை நடத்துகிறது.

உலகத்தின் உச்சியில்

உலகத்தின் மிகப் பெரிய கட்டடத் தூண், கனடாவில் டொரண்டோவில் கட்டப்பட்டிருக்கிறது.

இதன் 1140 அடி உயரத்தில் அமைந்துள்ள சிற்றுண்டி சாலை மெல்லச் சுற்றிச் சுற்றி வரும். பலமான காற்று வீசும்போது இந்தக் கட்டடம் சுமார் மூன்று அடி தூரம் அசைந்தாடுகிறது. ஆனால் 70 அடி தூரம் அசைந்தாலும் உடையாதபடி இது கட்டப்பட்டிருக்கிறது!

'டிட்பிட்ஸ்'

தகவல்: ஜெயஸ்ரீசிவநாத்



சமீபத்திய இதழ் ஒன்றில் ராகங்களுக்கு மனித வடிவம் அல்லது தெய்விக உருவம் கொடுத்துப் பண்டைக் கால ஓவியர்கள் வரைந்துள்ள சித்திரங்கள் இடம் பெற்றுள்ளன. இவையும் இவை தொடர்பான திரு பி. வி. கே. சாஸ்திரியின் கட்டுரையும் நூதனமாகவும் கவர்ச்சியமாகவும் உள்ளன.

விலாசம்: National Centre for performing Arts, Bombay House, Bombay-400023.

ஹிந்து மித்திரன் என்பது விசுவஹிந்து பரிஷத்தின் பத்திரிகை. ஹிந்து மதம், தர்மம் பற்றிய பல கட்டுரைகள் உள்ளன. கி.வா.ஜ., கண்ணதாசன், அகிலன், கிருபானந்தவாரியார் போன்றோர் எழுதிச் சமீபத்திய இதழைச் சிறப்பித்துள்ளனர்.

விலாசம்: 15, விச்சூர் முத்தையா முதலி தெரு, சென்னை-7.

'**இ**தய ஒலி' என்று சொன்னாலே டி. கே. சி. ஞாபகம் வரும். ''உலக இதய ஒலி'' டி.கே. சி. பக்தர்களால் நடத்தப்படுவது. ரசிகமணியின் ரசிகர்கள் எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. வட்டத் தொட்டிக்குக் கிட்டத்தில் வராதவர்களுக்கும் இடம் தந்திருக்கிறார்கள்.

இலக்கியத் தரத்துடன், இலக்கியத்துக்காகவே, இலக்கிய அன்பர்களால் நடத்தப்படும் பத்திரிகை.

விலாசம்: 6, கென்னடி முதல் தெரு, சென்னை-600004.

'அவள் பார்த்த நாடகம்'

லட்சுமி ராஜரத்னம்

"ஹாய், விஜி!" என்ற குரலுடன் ஸ்கூட்டர் அவளை ஒட்டினாற்போல் நின்றது. திடுக்கிட்டுத் திரும்பினாள் விஜி. அலுவலகம் முடிந்து வீட்டுக்குச் செல்ல பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

"ஏறிக் கொள், பின்னால்" என்றான் ராஜேஷ். தயங்கினாள் விஜி. அவனுடைய கண்களைக் 'கூலிங் கிளாஸ்' மறைத்திருந்தது. அவளுக்கு ஸ்கூட்டரில் போய்ப் பழக்கமும் இல்லை. யாராவது பார்த்துவிடுவார்களே என்ற பயமும் இருந்தது.

அவனுடைய அலுவலகத்துக்குத் தேவையான பொருட்களை அவசர உபயோகத்துக்காக எடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவனே அவள் அலுவலகத்துக்கு நேரில் வந்திருந்தான். அப்பொழுது ஏற்பட்ட அறிமுகம். அதன் பிறகும் தேவையான பொருட்கள் தானாகவே வந்தாலும்கூட, வேண்டுமென்றே ஒரு 'தேங்க்ஸ்'ஸோ, அல்லது 'கம்ப்ளெண்ட்'டோ கொடுத்துப் போனில் வம்புக்கு இழுப்பான்.

அவனுடைய பேச்சுக்கள் அவளைக் கவர்ந்தன. நினைவுகளே அந்தரங்கமாகப் பூத்ததை இருவருமே மெல்ல உணர்ந்தார்கள். இருந்தாலும் மனம் விட்டுப் பேசாமல் திரை போட்டாற்போலவே பேச்சில் ஒரு நாகரிகம், வரம்பு மீறாத சொற்களின் கலவை.

"க்விக், க்விக்" என்று பரபரத்தான் ராஜேஷ். எதிரில் பஸ் வரவே, ஸ்கூட்டரை அவன் எடுக்க வேண்டும். அதனால் அவள் பின்னால் ஏறிக் கொண்டாள். மறுக்க முடியாமல் அவளைக் கட்டிப் போடுவது எது?

"எங்கே போகலாம்?" என்று ஒரு திருப்பத்தில் கேட்டான் அவன். திரும்பிய வேகத்தில் அவள் அவன் மேல் மோதிக் கொண்டாள். அவனுடைய குறும்புச் சிரிப்பு காற்றையும் மீறி ஒலித்தது.

"ஓ.... ஸாரி, விஜி. ஒரு சிறு பள்ளம்" என்று நொண்டிச் சமாதானம் கூறினான் அவன்.

ஸ்கூட்டரை ஒரு பிரபல ஹோட்டல் முன்பு நிறுத்தினான் ராஜேஷ். இருவரும் ஓர் 'ஏர்கண்டிஷன்' அறைக்குப் போனார்கள். 'பவர் கட்'' காரணமாக 'ஏர்கண்டிஷனர்' வேலை செய்யவில்லை.

"சரி, ஃபேன் கீழே உள்ள மேஜையாக உட்கார்ந்து கொள்வோமே?" என்றாள் விஜி.

"சீச்சீ.... என்னால் ஏர்கண்டிஷன் இல்லாமல் முடியவே முடியாது. இப்படித் தெரிந்திருந்தால் இங்கே வந்தே இருக்கமாட்டேன். ஆபீஸிலும் என் அறை ஏர்கண்டிஷன்தான். வீட்டிலும் என் அறை, என் தந்தை அறை இரண்டுமே ஏர்கண்டிஷன்தான்."

இருவரும் ஓர் ஓரமாகத் தனியாக ஒரு மேசையைப் பிடித்துக் கொண்டார்கள். சர்வர் வந்து நின்றான். சில அயிட்டங்களின் பெயரைத் தடதட வென்று பொழிந்தான். அவற்றில் சிலவற்றுக்கு ராஜேஷ் 'ஆர்டர்' கொடுத்தான். உண்மையில் விஜி அவற்றில் சிலவற்றின் பெயரைக் கேள்விப்பட்டதேகூட இல்லை. அதைச் சொன்னால் கேலி செய்தே ராஜேஷ் அவளை உயிரை வாங்கிவிடுவான். அதனால் பேசாமல் இருந்துவிட்டாள்.

"எங்க வீட்டுப் பிரிஜ்லே எப்பொழுதும் ஜூஸ் இருக்கும்" என்றான் ராஜேஷ்.

அவளிடம் சினிமா போகலாமா என்று கேட்டான் அவன். சற்று நேர விவாதத்துக்குப் பிறகு இருவரும் கடற்கரைக்குப் போனார்கள். அவனுடன் போனிலும், நேரிலும் பேசியிருக்கிறாளே தவிர, இப்படி ஹோட்டல், கடற்கரை என்று வந்தது இதுவே முதல் தடவை. அதனால் இனிய உணர்வலைகளுக்கு நடுவே பயம் ஒரு நாடித் துடிப்பாகத் துடித்துக் கொண்டிருந்தது.

கடற்கரையை விட்டுக் கிளம்பும் பொழுது மணி எட்டாகிவிட்டது. அவள் என்ன மறுத்தும் கேட்காமல் ராஜேஷ் அவளை அவள் வீட்டு வாசலில்தான் இறக்கிவிட்டான். அதனால் அவள் அவனை உள்ளே வரும்படி நிர்ப்பந்தம் செய்தாள். மறுக்க முடியாமல் வந்த அவனை அவள் தன் தாய், தந்தை, தம்பிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். உபசாரமாகத் தரப்பட்ட லெமன் ஜூஸை நாகரிகமாக ஓர் உறிஞ்சு உறிஞ்சிவிட்டு வைத்துவிட்டான் அவன்.

வழியனுப்ப ஸ்கூட்டர் வரையில் வந்தாள் அவள்.

"நேற்று கார் ஒன்று வந்தது விலைக்கு. வாங்கலாம் என்றிருக்கிறேன். ஓர் ஆயிரத்தில் விலை தகையாமல் இருக்கிறது. ஆமாம்... நீ எப்படிப் புறாக் கூண்டு போன்ற இந்த வீட்டில் இருக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

அவள் முகம் சிவந்து தாழ்ந்தது. ஏர்கண்டிஷன் அறையில் வசிக்கும் அவனை அவள் தன் வீட்டுக்குள் அழைத்திருக்கக் கூடாதோ?

"இனிமேல் என் வீட்டின் 'டேஸ்ட்'படி நீ நடக்கக் கற்றுக் கொள்."

"உங்கள் விலாசம்?"

"நானே வந்து அழைத்துப் போகிறேன். எப்படியும் கார் வாங்கிவிடுவேன். அதில் முதன் முதலில் உன்னை என் வீட்டுக்கு அழைத்துப் போவேன்."

அவள் முகம் பூவாகப் பூத்தது.

"என் வீட்டில் உன்னைப் பற்றி நான் சொல்லிவிட்டேன். அந்தஸ்து குறுக்கே

நின்றாலும், என் ஆசைக்காக அவர்கள் சம்ம தித்துவிட்டார்கள்.''

அவள் திகைத்து நின்ற பொழுதே ஸ்கூட் டர் பறந்தது.

''இவ்வளவு நேரம் கழித்து ஓர் ஆண் பின்னால் ஸ்கூட்டரில் உட்கார்ந்து வர உனக்கு என்ன தைரியம்?'' என்றாள் அம்மா, அவள் உள்ளே வந்ததும்.


அவள் மெதுவாக ராஜேஷ் பற்றி — அவன் கூறியதை யெல்லாம் அவர்களிடம் கூறினாள். வசதியான மாப்பிள்ளை தானாகவே வந்த தைக் கண்டதும் சீற்றம் தணிந்தது அவர் களுக்கு. ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு ஓடும் சிரமம் இனிமேல் இல்லை என்ற நிம்மதி அப்பாவுக்கு.

''விஜி! 'இண்டர்நேஷனல் பிலிம் பெஸ் டிவலு'க்கு இரண்டு டிக்கெட்டுகள் இருக்கின் றன. நீ போகிறாயா?'' நளினி கேட்டாள்.

''இரண்டு என்றால், எனக்கு ஒன்று. இரண் டுமேயா ?'' என்று கேட்டாள் விஜி.

கண்களைச் சிமிட்டிய நளினி, ''அந்தப் பாவம் எனக்கு எதற்கு அம்மா? உன் ராஜே ஷுடன் [illegible]....'' என்றாள். இரண்டு டிக்கெட்டுகளையும் அவளிடம் கொடுத்தாள்.

ஐந்தாறு நாட்களாகவே ராஜேஷ் அவ ளுக்குப் போன் செய்யவே இல்லை. ஒரு வேளை கார் வாங்குவதில் மும்முரமாக இருக்கிறானோ என்னவோ என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். அன் றிரவு ஸ்கூட்டரில் அவள் வீட்டில் விட்டுச் சென்றவன்தான். அவன் வராததற்கு என்ன காரணம்?



அவனையே காணாதபோது அவனுக்காகவும் சேர்த்து டிக்கெட்டை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

அன்று சனிக்கிழமை. அவளுக்கு அரை நாள்தான் அலுவலக நேரம். அதனால் ராஜேஷைத் தேடிக் கொண்டு அவள் அவனுடைய அலுவலகத்துக்குப் போனாள்.....

ஆனால் அலுவலகத்துக்கும் ராஜேஷ் நான்கைந்து நாட்களாக வரவில்லை என்ற பொழுது ஏமாற்றமே மிஞ்சியது. அவனுடைய வீட்டு விலாசம் தெரியாது. அதனால் அலுவலகத்திலேயே அவனுடைய வீட்டு விலாசத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பினாள். ஒவ்வொரு தடவையும் ராஜேஷ் அவனுடைய பெரிய, அழகான வீட்டைப் பற்றிக் கொடுத்த வர்ணனை அவள் நினைவில் நின்றது.

பஸ்ஸிலிருந்து இறங்கினாள். அவள் பஸ்ஸில் வந்தது தெரிந்தால் ராஜேஷ் ஏன் டாக்ஸியில் வரவில்லை என்று கோபித்துக் கொள்வானோ? அவள் என்ன சொல்லுவாள்? 'நான் இன்னும் உங்கள் மனைவியாகவில்லை ராஜேஷ். நான் புறாக் கூண்டு வீட்டில் வசிப்பவள்தான்' என்று கூற வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டாள் அவள்.

சந்து சந்தாகக் கடந்து சற்று அகலமான ஒரு தெருவை அடைந்து முதல் வீட்டின் கதவைத் தட்டினாள் அவள். கதவைத் திறந்தவள் ஒரு சுமங்கலி அம்மாள். நெற்றியிலும் வகிட்டின் நுனியிலும், மஞ்சள் பூசிய முக ஒளியில் குங்குமம் துலங்கியது.

'' ராஜேஷ் என்பவர்.....''

''உள்ளே வாம்மா.... ராஜேஷ் இல்லையே ?'' என்று கனிவாக அழைத்தாள்.

செருப்பைத் தூசுகள் நிறைந்த மூலையில் உதறிய அவள் உள்ளே நுழைந்தாள்.

'' நீங்கள் ராஜேஷின்.....?''

''அம்மா....''

அவளை விழி ஏற இறங்கப் பார்த்தாள். கூடத்தில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு அவளை உட்கார வைத்த அந்த அம்மாள் மின்சார விசிறியைச் சுழல விட்டாள். 'கடக் கடக்' என்று முறுக்குக் கடியலாகச் சுழன்றது அந்த விசிறி.

''நீ ராஜேஷ்கூட வேலை செய்யறியா?''

கேட்டபடியே கூடத்தை ஒட்டியுள்ள சிறு சமையல் அறையில் காப்பி தயாரிக்க ஆரம்பித்தாள் அந்த அம்மாள். சுற்றிப் பார்வையைச் சுழலவிட்டாள் விஜி.

''நான் வேறே ஆபீஸ். எனக்கு ராஜேஷைத் தெரியும்'' என்றாள் விஜி.

'' உன்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறான்'' என்று சொன்ன அந்த அம்மாளின் முகத்தில் திருப்தி நிலவியது.

உள்ளேயிருந்து கசிந்து வந்தது ஒரு முனகல் சத்தம். அது விஜியைக் கவர்ந்ததைக் கண்ட அந்த அம்மாள், ''ராஜேஷின் அப்பா பட்சவாத நோயாலே அவதிப்படுகிறார் அம்மா. ராஜேஷ் எங்களுக்கு ஒரே பிள்ளை. அவன் சம்பளம் முழுதும் மருந்து வைத்தியம் என்றே போகிறது. என்ன செய்வது சொல். அவனுக்கோ டாம்பீகத்தில் ஆசை. அவனுக்குக் குறைவைக்கக் கூடாது என்று ஸ்கூட்டர், டெர்ரின், டெரிக்காட் ஹோட்டலுக்குப் பணத்தை எடுத்துக்கொடுத்துவிடுவேன். குடும்ப நிலை சில சமயங்களில் இடம் தர மாட்டேன் என்கிறது.'' என்று கூறியபடியே காப்பியை அவள் கையில் கொடுத்தாள். தொடர்ந்து,''உங்கப்பா தானே டில்லியிலே 'அமெரிக்கன் எம்பாஸி'யிலே இருக்கிறார்? ஜாதகம் பொருந்தியிருக்கு. எப்போ கல்யாணம் வைச்சுக்கலாம் என்று கேட்டார்னு சொன்னான். நீயும் மகாலட்சுமி மாதிரி இருக்கிறாய். ராஜேஷின் ஆசை அவனுக்குப் பெரிய இடமா அமைந்தாவது நிறைவேறட்டும்!'' என்றாள்.

காப்பி உள்ளே இறங்க மறுத்தது விஜிக்கு. அவள் அப்பா அமெரிக்கன் எம்பாஸியா? இருபது வருஷமா குமாஸ்தா பதவியிலேயே பரிதவிச்சுண்டு இருப்பவராயிற்றே அவர்!

''நான் வரேன் அம்மா. ராஜேஷ் வந்தால் விஜி வந்தான்னு சொல்லுங்கோ'' என்று கிளம்பினாள் விஜி.

வாசலில் ஸ்கூட்டர் சப்தம். கிரீஸ் கலையாத கிரீம் கலர் பேண்ட், டார்க் கலர் ஷர்ட். வாயில் ஹிந்தி ட்யூனின் ஹம்மிங்.

''ஹலோ, விஜி.... நீ எப்போ வந்தே?''

''நான் வந்து கொஞ்ச நேரமாச்சு. கிளம்பிக் கொண்டே யிருக்கிறேன். வரட்டுமா?''

விஜி கிளம்பிவிட்டாள்.

''வா, ஸ்கூட்டர்லே 'ட்ராப்' பண்ணுகிறேன் விஜி'' என்றான் ராஜேஷ்.

'' நான் பஸ்ஸிலே போகிறேன்.''

அவனும் அவளைத் தொடர்ந்து வந்தான். விஜியின் உள்ளம் குறுகுறுத்தது.

''உங்க அம்மா ரொம்ப நல்லாப் பழகுறாங்க. எனக்குப் பிடிச்சுப் போச்சு.''

''போச்சுடா !'' என்று கையை உதறினான் ராஜேஷ்.

''என்ன? என்ன?'' என்றாள் விஜி.

''இவர்கள் என் அத்தை விஜி. நாங்கள் இவளுக்கு உதவி செய்கிறோம். ஆபீஸிலே 'ஜாயின்' பண்ணின பொழுது என் அப்பா, அம்மா பம்பாயில் இருந்தார்கள். நான் முதலில் இங்கே வந்ததால் என் அத்தை வீட்டு விலாசத்தை ஆபீசில் கொடுத்தேன். அதை மாற்றவே இல்லை. மந்தைவெளியிலே ஒன்றரை லட்சம் பெறுமானமுள்ள பங்களாவை அப்பா வாங்கிப் போட்டிருக்கிறார். அப்பா, அம்மா இரண்டு பேருமே ஃபாரின் போயிருக்கிறார்கள். அன்பா பேசினதை வைத்து இவர்களை என் அம்மா என்று நினைத்து விட்டாயா ?'' என்ற ராஜேஷ் இடி இடியென்று சிரித்தான்.

அவள் போக வேண்டிய பஸ் வந்து நின்றது. ராஜேஷ் கையை அசைத்தான். அவள் விருட்டென்று நுழைந்து ஒரு சீட்டைப் பிடித்து உட்கார்ந்து கொண்டாள். கண்டக்டர் டிக்கெட் கொடுக்கச் சில்லறைக்காகக் கையை நீட்டினார். பர்ஸைத் திறந்தாள் விஜி. சில்லறையை எடுத்தவள் கையில் 'பிலிம் ஃபெஸ்டிவல்' டிக்கெட் தட்டுப்பட்டது. அதைக் கிழித்து எறிந்தாள்.

அங்கே போய் எதைப் பார்க்க வேண்டும்? அவன்தான் அருமையான ஒரு நாடகத்தை இங்கேயே பார்த்து விட்டானே!

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய-எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பகரமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதாலும், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. ரகக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

டாக்ஸியிலிருந்து இறங்கியவள், பக்கத்தி லிருந்த பங்களாவில் நுழைந்து, காலிங் பெல்லை அழுத்தினள்.

கதவைத் திறந்தான் ஒருவன். வயதான வேலையாள்.

''மிஸ்டர் ரமணன் இருக்கிருரா?'' என்று கேட்டாள்.

''இருக்கிருருங்க...''


தன் பெயரை ஒரு தாளில் எழுதி அவ னிடம் நீட்டினள். வாங்கிச் சென்று அவ ரிடம் திரும்பி வந்த வேலையாள், ''வரச் சொன்னர். உள்ளே வாங்கம்மா'' என்ருன் மாடியைக் காட்டி.

மாடியில் ஏறி, குறிப்பிட்ட அறைக்குள் நுழைந்தாள். உள்ளே நாற்காலியில் அமர்ந்து பெரிய புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண் டிருந்தான்—

ஓர் இளைஞன். அவன் முன்னுல் பெரிய மேஜை. சில குறிப்புக் கட்டுகள். தொலை பேசி.

இருட்டில் பிறந்த

அன்பிற்கினியன்



''வாருங்கள் மிஸ் கல்பனா! உட்காருங்கள்'' என்றான் அவன்.

''நன்றி!'' உட்கார்ந்தாள்.

''தங்களைப் பற்றிய மேல் விவரங்களைத் தெரிவித்தால், நாம் பேச்சைத் தொடர ஏதுவாயிருக்கும்...''

''தாங்கள் நிர்வாகியாகவுள்ள சிட்பண்ட் கம்பெனிக்கு பியூன் வேலைக்காக விண்ணப்பித்தவர்களில் என் தம்பி அழகப்பனும் ஒருவன்...''

''அழகப்பன்? ஆமாம் — நினைவிருக்கிறது'' நெற்றியைச் சுருக்கினான் ரமணன்.

காப்பி கொண்டுவந்தான் வேலையாள்.

குடித்தார்கள்.

''நான் போகட்டுமுங்களா?'' வேலையாள் கேட்டான்.

''ஓ — உனக்கு நேரமாகி விட்டதா? சரி, போ'' என்று தலையாட்டினான் ரமணன். ''நீங்கள் சொல்லுங்கள் மிஸ் கல்பனா!''

வெளிச்சம்



''நான் சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தவள். இதுவரைக்கும் எவ்வளவோ கஷ்டப்பட்டு என் தம்பியைப் படிக்கவைத்து ஆளாக்கியிருக்கிறேன். அவனும் சம்பாதிக்க ஆரம்பித்தால், நானும் அவனும் தடுமாற்றமில்லாமல் வாழலாம். என் தையல் தொழில் மட்டும் எங்கள் வயிற்றுக்குப் போதவில்லை.''

ரமணன் அவளை நன்றாகப் பார்த்தான்.

கறுப்பு என்று சொல்ல முடியாவிடினும் சிவப்பு என்றும் சொல்ல முடியாது. வட்டமான முகம். கூர்மையான நாசி. தேனூறும் இதழ்கள். கண்களில் ஓர் ஒளி. குழலும் மின்விசிறியால் அலைக்கழிக்கப்பட்டு, நெற்றியில் நடனமாடும் தலைமுடி. நகைகள் ஏதுமில்லாத எளிய அழகு. அந்த நேரத்தில், மின்விளக்கில் வனமோகினியாகத் தென்பட்டாள்.

''இவைகளையெல்லாம் சொல்லி, உங்கள் தம்பிக்கு நான் கட்டாயம் வேலை தந்துதான் ஆகவேண்டும் என்று கேட்கிறீர்களா?''

''...தந்தால், பெண்ணாகிய என் பளு சிறிது குறையும்...''

''அவனைவிட முன் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பித்திருக்கிறார்களே. அவர்கள் ஒவ்வொருவருக்கும்கூட உங்களுக்கு உள்ளது போல் குடும்பக் கதை இருக்கும், இல்லையா?''

''இருக்கலாம்...'' — சிறிது தயங்கியபின் சொன்னாள்.

''வேலை கொடுப்பது தகுதியை அடிப்படையாகக் கொண்டுதான் மிஸ் கல்பனா! இப்படிப்பட்ட வறுமைகளைச் சொல்வதாலோ, உங்களைப் போன்ற அழகிகள் தூதர்களாக வருவதாலோ அதை மாற்றிவிட முடியாது...'' ரமணன் எழுந்து நின்றான். ''சரி — நீங்கள் கிளம்பலாம். மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது.''

''பகல் முழுவதும் தையலிலேயே கழிந்து விடுகிறது. இப்போதுதான் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது....''

குழப்பமான முகத்துடன் எழுந்த அவளைப் பார்க்கவே அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

பாவம்! என்ன எதிர்பார்த்து வந்தாள்? இப்போது நடப்பது என்ன?

மாடியிலிருந்து கீழே இறங்கினாள். அவளை அனுப்புவதற்காகப் பின்னாலேயே அவனும் வந்தான்.

போக்குவரத்து அதிகமில்லாத சாலையில் பஞ்சரான கார் டயரோடு மன்றாடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு உதவி செய்த இன்னொரு கார் ஓட்டி, டயரை மாற்றிக் கொடுத்த பிறகு, ''இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமா, மாடம்?'' என்றான்.

பதில்: பின் சீட்டிலே தூங்கிக்கிட்டு இருக்கிற என் ஹஸ்பண்டை எழுப்பிட்டுப் போங்க.'' — மீரா-பாபு



ஹாலில் வந்து கொண்டிருக்கும்போது, ஏதோ நினைத்தவளாய், திடுமென்று நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள். பின்னாலேயே வந்து கொண்டிருந்ததால், அவளோடு மோதிவிட்டான் ரமணன். அவளோ எதுவும் சொல்லவில்லை அதற்காக.

அவள் முகத்தில் எதையோ தேடி அவன் புரிந்து கொள்ள முயன்ற அதே சமயம் — என்ன காரணமோ தெரியவில்லை, 'குப்' என்று விளக்குகள் அணைந்தன. ஒரே இருட்டு.

ஒரு நிமிடமே அதிகம்தான். அதற்குள் 'பளார்' என்று ஓர் அறை. இருவரில் யார் யாரை அறைந்தார்களோ? உடனே ரமணனின் சத்தம் மட்டுமே கடுமையாக, உரக்கக் கேட்டது: ''சே! போ, சீக்கிரம் இங்கிருந்து!''

உடல் குன்றிப்போய் 'விடுவிடு' எனக் கல்பனா வெளியேறுவதற்கும் அணைந்திருந்த மின்விளக்குகள் மீண்டும் எரிவதற்கும் சரியாக இருந்தது.

அடுத்த வாரம்.

தபால்காரர் இரண்டு கடிதங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

முதலில் கார்டைப் படித்த கல்பனா சொன்னாள் அழகப்பனிடம்: ''உன்னை அந்த சிட் பண்ட் கம்பெனியில் வேலைக்குத் தேர்ந்தெடுக்கவில்லையாம் — தபாலில் வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார்கள்.''

அவன் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

''கவலைப்படாதே அழகப்பா! இதை நான் சென்ற வாரமே எதிர்பார்த்ததுதானே!''

அவன் எரிச்சலுடன் வெளியே போய் விட்டான்.

அடுத்தது ஒரு கவர். யாரிடமிருந்து?

அனுப்பியவரின் முகவரி வெளியே எழுதப்படவில்லை. ஆனால் அவள் பெயருக்குத்தான்!

கல்பனா உடைத்துப் பார்த்தாள். ஆர்வத்துடன்.

''கல்பனா!

சென்ற வாரம் என்னிடம் உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் சொன்னாய். நீ வந்ததோ இரவு நேரம். 'சரி—குறுக்கு வழியில் காரியத்தை முடிக்க வந்திருக்கிறாய்' என்று உன்மீது சந்தேகப் பட்டேன். அதற்கேற்றாற்போல் மின்சாரமும் நின்றுவிடவே, உன்னைச் சோதிக்க எண்ணியே இருட்டில் உன்மீது என் கையைப் படர விட்டேன். அதற்கே நீ வெகுண்டு போய் எனக்கு ஓர் அறை கொடுத்து விட்டாய். அதன் மூலம் நீ எப்படிப்பட்டவள் என்று நன்கு தெரிந்து கொண்டேன்.

எனினும் உன் தம்பிக்கு நான் வேலை தரவில்லை. வருத்தப்படாதே. வருங்கால மைத்துனனை எந்த மடையனாவது தன் கம்பெனியிலேயே பியூனாக வைத்துக்கொள்வானா? வைத்துத்தான் வேலை வாங்க முடியுமா?

—உன் ரமணன்''

நெஞ்சு விம்மக் கடிதத்தை ஆனந்தத்துடன் அணைத்துக் கொண்டாள் கல்பனா.

நாளை நமதே!



தலைப்பு புதுமையாக இருக்கிறது, படம் பழசுதான். பாரதமெங்கும் சக்கைப் போடு போட்ட "யாதோங்கி பாராத்" என்ற ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்தான். எம். ஜி. ஆருக்கு ஏற்ற படம். தீயோரைக் காய்ந்து, தூயோரைக் காத்து, கொலை பாதகச் செயலுக்குப் பழி வாங்கிக் கடைசியில் வெற்றி வாகை சூடும் படம். அவருக்கு இரட்டை வேடம். — இரண்டும் நல்ல பாத்திரங்கள்தான். கன்னங் கரேலென்ற உருவத்தோடு வரும் மூத்த எம். ஜி. ஆருடைய முரட்டுத் தோற்றமும், மௌன நடிப்பும் அவருக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்து விடுகின்றன. பேசாமல் காரியத்தைச் சாதிக்கும் பாத்திரம் — அமைதியும், அழுத்தமும் கொண்டது. இவ்வளவுக்கும் சேர்த்து வைத்து இளையவன் விஜய் பாத்திரம் எம். ஜி. ஆருக்கு நன்கு கை கொடுத்திருக்கிறது. அப்பப்பா! அந்தக் காதல் காட்சிகள்! துருதுருப்பான லதா, சுருசுருப்பான எம். ஜி. ஆர்.-இருவரும் பாடாய்ப் படுத்துகின்றனர்! ரொம்ப ரொம்ப 'ஓவர் டோஸ்!'

கொள்ளைக்காரர் கூட்டத்தின் தலைவனைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்த ஓர் ஓவியன், வீட்டுக்கு வந்து, அவனது முகத்தைப் போலீஸார் வேண்டுகோளின்படி ஞாபகத்தில் இருந்ததைப் படமாக வரையப் போக அந்தக் கொள்ளைக்காரன் ஓவியனையும் அவன் மனைவியையும் சுட்டுத் தீர்த்து விடுகிறான். அவர்களது பிள்ளைகள் மூவரும் அநாதைகளாகி விடுகின்றனர்.

கதையில் பாராட்டிக் கூறும்படி எதுவும் இல்லை. ஹிந்திப் படத்துக்கு வெற்றியளித்த பாடல்கள் தமிழ்ப் படத்துக்குக் கைகொடுக்கவில்லை. அடிக்கடி வரும் கிளப் காட்சிகள் ரொம்பவும் 'போர்' அடிக்கின்றன. அங்கு கிடார் வாசிக்கும் இளைஞனும் நம்மைச் சோதிக்கிறான்.

சிறுவர்களில் மூத்தவன் ஓடும் குட்ஸ் ரயிலில் ஏறிக் கொண்டு விடுகிறான்; தம்பி ரயில் வண்டிக்குப் பின்னாலேயே 'அண்ணா அண்ணா' என்று அலறிக் கொண்டு ஓடிவந்தும் ஏற முடியாமல் கீழே உருண்டு விழுந்து விடுகிறான். அது மிகவும் பரபரப்பும் வேதனையும் தரும் காட்சி' மனத்தில் பதிகிறது.

எம். ஜி. ஆர். நடிக்கும் படங்களில் சண்டைக் காட்சிகள் எப்பொழுதுமே ஸ்பெஷலானவை. இந்தப் படத்திலும் அவை குறைவின்றி யிருக்கின்றன.

உடல் நலம் சரியில்லாத மாதிரி எம். ஜி. ஆர். நடிக்கும்போது லதா அந்த நடிப்பில் உருகிப்போவது நன்றாயிருக்கிறது.

கே. எஸ். சேதுமாதவனின் டைரக்ஷன் நன்றாயிருக்கிறது. இது ஈஸ்ட்மென் கலர்ப் படம். ஆயினும், குளிர்ப் பிரதேசத்துப் பூக்கள் மாதிரி மணமில்லா வண்ண மலர்க் கொத்தாக இருக்கிறதே!

— காந்தன்

கடைசிப்பக்கம் கண்ணதாசன்

ஞான ஸ்நானம்

உலகம் தோன்றிய காலம் முதல் ''நல்லவனாக இரு'' என்று போதிக்காத ஞானிகளே இல்லை.

நானும் நீண்ட நாட்களாக நல்லவனாகவே இருந்து பார்க்கிறேன்.

'நல்லவனாக இருப்பது சிரமம்' என்று அடிக்கடி தோன்றுகிறது. ஆனால் அதன் மூலம் நன்மைகள் விளையும்போது, ''நல்லவனாகவே இருக்க வேண்டும்'' என்ற ஆசை தோன்றுகிறது.

இராமன் நல்லவனாக இருந்ததால் காடு செல்ல நேர்ந்தது; சீதை நல்லவளாக இருந்ததால் கூடச் செல்ல வேண்டியிருந்தது.

பாண்டவர்கள் நல்லவர்களாக இருந்ததால்தான் வனவாசம் போக நேர்ந்தது.

ஆனால் அவையெல்லாம் தொடக்கங்களே; முடிவுகள் அவர்களுக்குத்தான் சாதகமாக இருந்தன.

அட்டகாசத்தோடு தொடங்கிய அரக்கர்களின் வாழ்க்கை அழிவுற்றதைப் புராணம் சுட்டிக் காட்டுகிறது.

சரித்திரத்தின் பக்கங்கள் தொடக்கத்தில் தீமை பெற்ற வெற்றியையும் முடிவில் பெற்ற தோல்வியையும், நன்மை, ஆரம்பத்தில் அடைந்த கொடுமையையும், இறுதியில் அடைந்த பெருமையையும் சுட்டிக் காட்டுகின்றன.

பாரதத்தின் தனிமனித தர்மம் என்பது அறவே அழிந்துவிட்ட நிலை; இதில் நல்லவனாக இருப்பது எப்படி?

ஒரு நாளைக்கு ஐம்பது பேரையாவது நான் சந்திக்கிறேன். ஐம்பதில் நாற்பது பேர்கள் நல்லவர்களாக இல்லை. ஏமாற்றுக்காரர்கள், வஞ்சகர்கள், போலிக் கண்ணீர் வடிப்பவர்கள், பழி சுமத்துபவர்கள், கேலி செய்பவர்கள், நன்றி மறந்தவர்கள், நாணயம் கெட்டவர்கள் — ஏதேனும் ஒரு வகையில் குணக்கேடான மனிதனைத்தான் நான் சந்திக்கிறேன்.

அத்தனை பேர்களுக்கிடையேயும் நல்லவனாக இருக்க முயற்சி செய்கிறேன்.

முள்ளின் மீது நடனம்; கால் வலிக்கத்தான் செய்கிறது. சமயங்களில் சத்தம் போட்டு அழக்கூடத் தோன்றுகிறது.

இன்று நேற்றல்ல; இருபத்தைந்து ஆண்டுகளாக இதே நிலை.

ஆயினும் நான் நல்லவனாகவே இருக்க விரும்புகிறேன்.

''இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் தொடக்கம்தானா? முடிவு எப்போது?'' என்று கேட்கிறீர்களா? காலத்தைக் கணக்கிட எனக்குத் தெரியவில்லை. ஆனால் முடிவு நன்றாகவே இருக்கும் என்பது மட்டும் புரிகிறது.

எதிர்பாராத செலவுகள் வந்தால், எதிர்பாராத வரவுகளும் வருகின்றன.

...டதுப் பேர ஏமாற்றினால், இரண்டு பேராவது உதவுகிறார்கள்.

நான் நினைக்காத அளவுக்குச் சுமை ஏறுகிறது; விரும்புகிற அளவுக்குச் சுமை இறங்குகிறது.

இந்தக் குத்துவிளக்குக்கு யாராவது எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

எரியும் விளக்கில் காற்றுப் பட்டு, அடிக்கடி சலனம் வருகிறது. ஆனாலும் என் விளக்கு அணையவில்லை.

ஒரேயடியாக அது அணைந்து போயிருந்தால், இந்து தர்மத்திலேயே எனக்கு நம்பிக்கை போயிருக்கும்.

தோன்றாமல் தோன்றும் சுடரொளி ஒன்று அடிக்கடி என்னைக் காப்பாற்றுகிறது; அமைதியைத் தருகிறது.

என்ன நடக்கப் போகிறது என்பது கனவிலே வருகிறது.

பத்து நாட்களுக்கு முன்பு பெங்களூர் மண்டிப்பேட்டையில் ஒரு ஹோட்டலைத் திறந்து வைக்கச் சென்றேன்.

விமானம் போய் இறங்கியபோது மாலை மணி நான்கு. படுத்துத் தூங்கிவிட்டேன்.

ஒரு கனவு; அற்புதமான கனவு.

கண்ணன் என் கனவிலே வந்தான். ஒரு சிறு குடிசையில் அவனுக்கு நான் அமுது படைத்தேன். அவன் என்னோடு பேசிக் கொண்டிருந்தான். என்னென்னவோ அவனிடம் பேசினேன். அவன் சொன்னது மட்டும் நினைவிருக்கிறது. ''எல்லாம் சரியாக நடக்கும், கவலைப்படாதே.''

மறுநாளைக்கு மறுநாள் என் வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு கனவு.

ஒரு பெருமாள் கோயில். ஒரு பட்டாச்சாரியார் எனக்குக் குங்குமம் வழங்குகிறார்.

இவை என்ன கனவுகள்?

நல்லவர்களுக்கும் ஞானிகளுக்கும் மட்டுமே வரும் கனவுகள். எனக்கும் அவை ஏன் வந்தன? பல்லாயிரம் ஆண்டுகளாக ஞானம் பிறந்த கதை இதுதான்.

சிறைச்சாலை தீயவர்களுக்கு மட்டுமே. அறச்சாலை நல்லவர்களுக்கு மட்டுமே.

பரம்பொருளைப் பற்றிய சிந்தனை வளர வளர, கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடிகிறது. நல்லவனாக இருப்பது சுலபமாகிறது.

இறைவன் கவனித்துக் கொண்டே இருக்கிறான். அளக்க வேண்டிய நேரத்தில் அளக்கிறான். இந்து தர்மம் பொய்த்ததே இல்லை.

அது சொல்லும் ஒவ்வொன்றும் நூற்றுக்கு நூறு உண்மை.

நான் ஓர் இந்துவாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்.

ஒரு நல்ல இந்து மற்றவர்களுக்குத் தீமை செய்ய மாட்டான்.

நான் யாருக்கும் தீங்கிழைத்ததில்லை.

ஒவ்வொரு நாளும் எனக்குத் தீங்கிழைத்த பாவிகளை என் கண்ணா, நீ மன்னித்துவிடு.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)



